விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி


பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 வைகாசி 10 புதன்கிழமை (23.05.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 156

ரா ம் கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# சர்வதேச விசாரணைக்கு அரசு ஒத்துழைக்க வேண்டும்

## பொன்சேகா வேண்டுகோள்



(கொழும்பு)

இலங்கை மீது சுமத்தப்படும் போர்க் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணைகள் எதுவும் வந்தால் அதற்கு இலங்கை ஒத்துழைக்க வேண்டும் என முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா வலியுறுத்தியுள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)

## பிளஸ் 2 தேர்வில் பேரறிவாளன் சாதனை

(சென்னை)

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள பேரறிவாளன், முருகன் ஆகியோர் பிளஸ் 2 தேர்வில் சாதனை படைத்துள்ளனர். வேலூர் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ள பேரறிவாளன், நளினி கணவர் முருகன் ஆகியோர் கடந்த மார்ச் மாதம் நடந்த பிளஸ் 2 தேர்வை எழுதினர்.

இந்த நிலையில் பிளஸ் 2 தேர்வு முடிவு நேற்றுக் காலை வெளியிடப்பட்டது. இதில் பேரறிவாளன் 1200 க்கு 1096 மதிப்பெண்கள் பெற்று சாதனை படைத்துள்ளார்.

இதேபோல் நளினி கணவர் முருகன் 983 மதிப்பெண்கள் பெற்றுள்ளார். இவர் வணிகவியல் பாடத்தில் 200 க்கு 200 மதிப்பெண்கள் பெற்றுச் சாதனை புடைத்துள்ளார்.

பேரறிவாளன் பெற்ற மதிப்பெண்கள்: தமிழ்-185, ஆங்கிலம்-169, வரலாறு-183, பொருளியல்-182, வணிகவியல்-198, கணக்கியல்-179 மொத்தம்-1096.

தூக்குத் தண்டனையை இரத்துச் செய்யக் கோரி இவர்கள் தாக்கல் செய்த மனு உச்ச நீதிமன்றத்தில் தற்போது நிலுவையில் உள்ளது. ஆனால் இவர்களோ சாதனை படைத்து வருகின்றனர். (02ஆம் பக்க பார்க்க)

## பொன்சேகாவுக்கு ஜெனரல் பதவி மீண்டும் வழங்கப்படுமா?-ஐ.தே.க

(கொழும்பு)

சரத் பொன்சேகாவுக்கு முழுமையான விடுதலை வழங்கப்பட்டிருக்குமாயின் அவரை மீண்டும் ஜெனரல் என மக்கள் அழைக்கவும் அவரது பெயருக்கு முன்னாள் ஜெனரல் என எழுதவும் ஊடகவியலாளர்களால் முடியுமா? என ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கேள்வி எழுப்பியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

விடுதலை செய்யப்பட்டுள்ள சரத் பொன்சேகாவுக்கு அவரது ஜெனரல் பதவி, ஓய்வூதியம் மற்றும் முன்னாள் இராணுவத்தளபதி ஒருவருக்கு வழங்கும் அனைத்து சிறப்புரிமைகளும் வழங்கப்படுமா? இல்லையா? என்பது குறித்து அரசாங்கம் உடனடியாக நாட்டுக்கு அறிவிக்கவேண்டும். இது சம்பந்தமான வர்த்தமானி அறிவித்தல் உடனடியாக வெளியிடப்படவேண்டும் எனவும் அத்தநாயக்க வலியுறுத்தியுள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் அரசியல் கைதிகள் நீர்கொழும்பில் உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

பொதுமன்னிப்பு வழங்குங்கள் இல்லையேல் பிணையில் செல்லவாவது அனுமதியுங்கள் எனக் கோரி நீர்கொழும்பு சிறைச்சாலையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகள் 14 பேர் நேற்றுத் தொடக்கம் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

கடந்த 17 ஆம் திகதி முதல் கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் 192, களுத்துறைச் சிறைச்சாலையில் 32, வவுனியாவில் 32 பேருமாக மொத்தம் 256 தமிழ் அரசியல் கைதிகள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் மகசீன் சிறைச்சாலையில் 150, அனுராதபுரம் சிறைச்சாலையில் 80, வெலிக்கடை பெண்கள் சிறைச்சாலையில் 32 பேருமாக மொத்தம் 262 தமிழ் அரசியல் கைதிகள் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

இவர்களுக்கு ஆதரவாக நேற்று நீர்கொழும்பு சிறைச்சாலையிலுள்ள 16 தமிழ் அரசியல் கைதிகளில் 14 பேர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

வழக்கு (02ஆம் பக்கம் பார்க்க)

## காணாமல் போன சிறுவன் ஒரு வருடத்தின்பின் மீட்பு

(கொழும்பு)

காணாமல் போன சிறுவன் சுமார் ஒரு வருடத்தின் பின் மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த வருடம் 6 ஆம் மாதம் 8 ஆம் திகதி காணாமல் போன மாகியப்பிட்டி சண்டிலிப்பாயைச் சேர்ந்த பரமநாதன் ரஜீராம் என்ற 12 வயதுச்சிறுவன் கடந்த 17 ஆம் திகதி கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு காத்தான்குடியைச் சேர்ந்த நபர் ஒருவர் குறித்த சிறுவனை அங்கு கடத்திச் சென்று வைத்திருந்ததாகவும், பின்பு யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வரப்பட்ட போது பெற்றோரினால் இனங்காணப்பட்ட நிலையில் கடத்தல்காரனிடமிருந்து மீட்கப்பட்டதாகவும் (20ஆம் பக்கம் பார்க்க)

# ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்கான அரசின் அர்ப்பணிப்பு வெளிப்படவில்லை

## எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கையின் முன்னாள் படைத்தளபதி சரத் பொன்சேகாவின் விடுதலையானது, இலங்கையில் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்கான அரசாங்கத்தின் அர்ப்பணிப்பை வெளிப்படுத்தவில்லை என எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தியுள்ளன.

ஜனநாயகத்தையும், அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தும் சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்த தமது கட்சியினரைடைத்தூப்பினரும், சிவில் உடையில் இருந்தவர்களும் தாக்கியுள்ளதாக ஜே.வி.பியும் முன்னிலை சோஷலிச கட்சியும் தெரிவித்துள்ளன.

ஜே.வி.பி தலைமையிலான சோஷலிச இளைஞர் ஒன்றியத்தின் அங்கத்தவர்கள் கொழும்பு புறக் கோட்டை சந்தியில் சுவரோட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்த போது வெள்ளை வான் ஒன்று அப்பகுதியில் காணப்பட்டதாக ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது,

சிவில் உடையில் இருந்த ஆறு, ஏழு பேர் குறிப்பிட்ட வெள்ளை வானில் இருந்த வெளியே வந்து, ஒன்றியத்தின் (20ஆம் பக்கம் பார்க்க)

## கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி நாளை வவுனியாவில் உண்ணாவிரதம்

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அழைப்பு

(வவுனியா)

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி நாளை வவுனியாவில் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை நடத்தவுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் அறிவித்துள்ளார்.

தமிழ் அரசியல் கைதிகளின் நியாயமான கோரிக்கைக்கு சர்வதேச சமூகத்தின் ஆதரவை திரட்டும் (20ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க சம்பந்தன் சபையில் கோரிக்கை

(கொழும்பு)

தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என நாடாளுமன்றத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று அரசாங்கத்திடம் வலியுறுத்தியது.

234 தமிழ்க் கைதிகள் தொடர்ச்சியாக ஆறாவது நாளாக உண்ணா விரதம் மேற்கொண்டுள்ளதாகவும் அவர்களின் உடல் நிலை மோசமடைந்து வருவதாகவும் த.தே. கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், நிலையியற் கட்டளையின் கீழ் உரையாற்றுகையில் கூறினார்.

ஆளும் கட்சிக்கு ஆதரவளிக்க தயாரானால் தமிழீழ (19ஆம் பக்கம் பார்க்க)

# பல்கலைக்கழக மாணவன் மீது தாக்குதல் வன்மையாக கண்டிக்கிறது ஆசிரியர் சங்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியச் செயலாளர் தாக்கப்பட்டமை வன்மையாக கண்டிக்கப்பட வேண்டியது என யாழ்.பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றிய நிர்வாக சபை உறுப்பினர் பரமலிங்கம் தர்ஷானந்தன் பல்கலைக்கழகத்திற்கு வருகை தந்து கொண்டிருந்த வேளையில் கடந்த 18ஆம் திகதி காலை இனந்தெரியாதவர்களால் மிலேச்சத்தனமாகத் தாக்கப்பட்டதை பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வன்மையாக கண்டிக்கின்றது.

இதற்கு முன்னரும் யாழ்.பல்கலைக்கழக மாணவ ஒன்றிய முன்னாள் தலைவர் இதேபோன்றதொரு தாக்குதலுக்குள்ளாகியிருந்தார்.

இவ்வாறாக பல்கலைக்கழக மாணவர்கள் தாக்கப்படுவதால் மாணவர் மத்தியில் பயமும் பீதியும் ஏற்பட்டுள்ளது.

இவை மாணவர்களது கல்வி நடவடிக்கைகளை மிகவும் கடுமையாகப் பாதிக்கும் என்பதனால் இத்தகைய தாக்குதல்கள் இனிமேலும் தொடரக்கூடாது.

யார் இந்த மிலேச்சத்தனமான தாக்குதல்களைச் செய்திருந்தாலும்அவர்கள் கண்டிக்கப்பட வேண்டியவர்களாவர்.

எமது மாணவர்கள் சுதந்திரமானதும் பாதுகாப்பானதுமான ஒரு சூழலில் கல்வி நடவடிக்கைகளை தொடர அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும்.

இதேவேளை, தர்ஷானந்தன் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் காரியாலயத்திற்கு அண்மையில் பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தின்போது துணைவேந்தர் காரியாலயம் கல் வீசி சேதமாக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான மாணவர்களது செயல்கள் எந்த விதத்திலும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாததும், முழுப் பல்கலைக்கழக சமூகமும் வெட்கப்பட வேண்டியதுமான சம்பவங்களாகும்.

இதனையும் யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வன்மையாக கண்டிக்கின்றது.

• இத்தகைய செயல்கள் எதிர்வரும் காலங்களில் இடம்பெறாவண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டியது பல்கலைக்கழக மாணவர் சமூகத்தினது கடமையும் பொறுப்பும் என அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-6)

# ஹெரோயினுடன் கைதான நால்வருக்கு பிணை

(யாழ்ப்பாணம்)

யாழ். சிவன்பண்ணை வீதியில் ஹெரோயினுடன் பிடிபட்ட ஐவரில் நால்வர் யாழ். நீதிமன்றால் அபராதம் விதிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர். கும்பலின் முக்கியஸ்தரான பேபியன் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த மாதம் பிடிபட்ட இவர்களிடம் பல இலட்சம் ரூபாய் பெறுமதியான ஹெரோயின் பைக்கற்றுக்கள் யாழ்.விசேட அதிரடிப் படையினரால் கைப்பற்றப்பட்டதுடன் அவர்கள் யாழ். நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இவர்கள் ஐவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டு குறித்த வழக்கு நேற்று யாழ். நீதிவான் மா.கணேசராசா முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கினை விசாரணை செய்த நீதிவான், குறைந்தளவில் போதைப் பொருள் வைத்திருந்த நால்வரில் மூவருக்கு தலா 25 ஆயிரம் ரூபாய் வீதமும் ஒருவருக்கு 20 ஆயிரம் ரூபாயும் விதிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டு உள்ளதோடு குறித்த கும்பலின் முக்கியஸ்தரான பேபியன் என அழைக்கப்படும் கரிகரனை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (எ-4)

# 'நன்றி மறந்த பாம்பு' கொழும்பில் சுவரொட்டி

(கொழும்பு)

ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்ட முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு எதிராக கொழும்பு நகரில் பல இடங்களில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

'நன்றி மறந்த பாம்பு விடுதலை' மக்களே கவனமாக இருங்கள் என சிங்களத்தில் எழுதப்பட்ட சுவரொட்டிகள் கொழும்பு நகரில் ஒட்டப்பட்டுள்ளன. எனினும் இந்த சுவரொட்டி யாரால் ஒட்டப்பட்டது என்ற தகவல் அதில் காணப்படவில்லை. (எ-11)

# விபத்துக்குள்ளானவர் சிகிச்சை பலனின்றி மரணம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளும் சிறிய ரக உழவு இயந்திரமும் மோதி விபத்துக்குள்ளானதில் படுகாயமடைந்த இருவரில் ஒருவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ்விபத்துச் சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு 7.00 மணியளவில் மந்துவில் சிறிபாரதி பாடசாலைக்கு அருகில் இடம்பெற்றுள்ளது.

இதில் மோட்டார் சைக்கிளில் சென்ற இடைக்குறிச்சி வரணியை சேர்ந்த 2 பிள்ளைகளின் தந்தையாரான தனபாலசிங்கம் சதீஸ்கரன் (வயது 30) என்ற டிப்பர் சாரதியும் இரணைமடு கிளிநொச்சியை சேர்ந்த இரத்தினசிங்கம் சுதாகரன் (வயது 25) என்ற இளைஞரும் படுகாயமடைந்தனர்.

படுகாயமடைந்த இருவரும் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளித்து வந்த நிலையில் மோட்டார் சைக்கிளினை செலுத்தி சென்றவரான சதீஸ்கரன் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

இவர்கள் இருவரும் தலைக்கவசம் அணியாமல் மோட்டார்சைக்கிளில்சென்றதாக தெரிவிக்கப்படுகிறது. (எ-4)

# தமிழர்கள் என்ற அடையாளமே கைதிகளின் விடுதலைக்கு தடை

## சாடுகிறது ஐக்கிய சோசலிஷக் கட்சி

தமிழர்களாகப் பிறந்த ஒரே காரணத்தால் தான் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கு மகிந்த அரசு மறுக்கிறது என ஐக்கிய சோஷலிச கட்சியின் பொதுச் செயலாளர் சிறிதுங்க ஜயசூரிய குற்றம் சாட்டியுள்ளார்.

குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்ட முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை விடுதலை செய்த அரசு, இன்னும் வழக்குத் கூட தாக்கல் செய்யப்படாமல் சிறைவாசம் அனுபவிக்கும் தமிழ்க் கைதிகளுக்கு பாராமுகம் காட்டுவது ஏன் என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு,

தமிழ் அரசியல் கைதிகள் பல வருடங்களாக எதுவித வழக்கு விசாரணையுமின்றி சிறைச்சாலைக்குள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். நான்கு சுவர்களுக்குள் அவர்களின் எதிர்காலம் அடைத்து வைக்கப்பட்டுள்ளது.

தமிழர்களாய் பிறந்த ஒரே காரணத்தினால் தான் அவர்களை மகிந்த அரசு சிறைச்சாலைக்குள் அடைத்து கொடுமைப்படுத்துகின்றது. விடுதலை செய்வதற்கு மறுக்கிறது.

சிங்களவர் என்றநாமம் சரத் பொன்சேகாவை விடுவிக்கும்போது, தமிழர் என்ற அடையாளமே தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கு தடையாக இருந்து வருகிறது.

தமிழ் மக்களுக்கு மகிந்த அரசு தொடர்ந்தும் பாகுபாடு காட்டுமானால், சர்வதேச சமூகம் கைகட்டி வேடிக்கை பார்க்காது என்பதையும் கூறிவைக்க விரும்புகிறோம் என அவர் தெரிவித்தார். (எ-6-11)

---

## தமிழ் அரசியல்...

விசாரணைகளை காலம் தாழ்த்தாது மேற்கொண்டு தம்மை விரைவாக விடுதலை செய்ய வேண்டும். முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு எவ்வாறு பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்யப்பட்டாரோ அதேபோன்று எம்மையும் விடுதலை செய்ய வேண்டும் இல்லையேல் பிணையில் செல்லவாவது அனுமதி வழங்க வேண்டும்.

எமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம் எனவும் அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட எந்த அரசியல் கட்சித் தலைவர்களும் தம்மை இதுவரை வந்து சந்திக்கவில்லை எனவும் அவர்கள் குற்றம் சாட்டினர்.

இதேவேளை யாழ்ப்பாணம் சிறைச் சாலையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளும் நேற்று உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-6)

---

## பிளஸ் 2 ...

இவர்களின் சாதனையை ஊக்குவிக்க அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்பது பலரது கோரிக்கையாக உள்ளது. (எ-11)





**ISUZU வாகனம் விற்பனைக்கு**

மிகவும் நல்ல நிலையில் உள்ள IsuzuELF 250 Full பொடி GE XXXX இலக்க வாகனம் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளிற்கு: 0773655257 (சு-060)

**காணி விற்பனைக்கு**

தொண்டைமனாறு செல்வச் சந்நிதி ஆலயத்திற்கு முன்பாக கடைத் தொகுதிக்கான காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 0770871070 (சு-059)

**உதவிப் பூசகர் தேவை**

மேற்படி பதவிக்கு நல்லொழுக்கமும், திறமையுமுள்ள பிராமணர் ஒருவர் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். ஆலய வீதியில் தங்குமிட வசதிகள் செய்துதரப்படும்.

முடிவு திகதி: 28.05.2012

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:
தலைவர் / செயலாளர்
கொக்குவில் நந்தாவில் கற்புலத்து
மனோன்மணி அம்பாள் ஆலய பரிபாலன சபை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

தொடர்பு இல:
0779698966
0770388421

(8498)

**Immediate Vacancy**

28 Positions available now. Earn Rs.45,000 per month
Company gives 6 month training in
♦ Sales ♦ Supervisory
♦ Customer Relationship ♦ Management
Contact Immediately
Manager
Innovage Company International
0776219536, 0754262907

(8501)

**இதய அஞ்சலி**



எமது கோட்ட சுப்பிரமணிய வித்தியாசாலை அதிபர் திருமதி கௌ.அருள்மொழி அவர்களினதும், எமது கோட்ட தரம் 5 புலமைப்பரிசில் பயிற்சிப் பரீட்சையின் இணைப்பாளர் திரு.ப.ஐங்கரன் அவர்களினதும் அன்புத் தந்தையார்

**கணபதிப்பிள்ளை பத்மநாதன்**

அவர்களின் மறைவு குறித்து எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்தெரிவித்தோடு அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கல்விக் கோட்டம்,
காரைநகர்.

- கோட்டக் கல்விப் பணிப்பாளர்,
கோட்டப் பாடசாலை அதிபர்கள்,
ஆசிரியர்கள்.

(8500)

**Computer Express**

**Institute Of Information Technology**

அனைத்துக்கற்கைநெறிகளுக்குமான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

| | | | |
|---|---|---|---|
| Diploma in Microsoft office 3000/= 3 Months | Diploma in Desktop Publishing 4000/= 3 Months | Diploma in Web page Designing 4000/= 3 Months | |
| Diploma in Graphic Designing 4000/= 3 Months | Diploma in Hardware Engineering 4000/= 3 Months | Diploma in Computerized Accounting 4000/= 3 Months | |
| Diploma in Computer Science 4000/= 4 Months | Hon. Diploma in Computer Science 4000/= 4 Months | Hon. Diploma in Programming 4000/= 3 Months | AUTO CAD 4000/= 3 Months |

Advanced Diploma Courses (4 Months 4000/=)
Advanced Dip. in Multimedia
Advanced Dip. in Video Editing
Advanced Dip. in Networking

100% செய்முறைப்பயிற்சி
அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்

புதிய பிரிவுகள் ஆரம்பம்
Batch i - 23-05-2012
Batch ii - 25-05-2012
Batch iii - 26-05-2012
Batch iv - 27-05-2012
9 am or 3 pm

No.15, Sirambiyadi lane, off Stanley Road, Jaffna.(ஆரியகுளத்துச்சந்திக்கு அருகில் கொசி Hotel மேல்) T.P No :- 021 222 8250, 077 722 2422, 077 490 7444

# இன்று ஒரு தகவல்

## மாறுவது மனம்

ஒருவர் மிகவும் மகிழச்சியாக வந்து கொண்டிருந்தார்.

“என்ன விடயம்?” என்று விசாரித்தேன்.

“நான் தோல்வி அடைந்து விட்டேன். அதுதான் மனதினுள் மகிழ்ச்சியாக இருக்கிறது” என்றார்.

எனக்கு வியப்பாக இருந்தது.

இந்த உலகில் தோல்வி அடைந்து போகிறவர்கள் யாரும் மகிழ்ச்சியாக இருக்கிறது உண்டா?

“எங்கே தோல்வி அடைந்தீர்கள்?” என்று கேட்டேன்.

அதன்பின் அவர் விபரமாகச் சொன்னார்.

‘‘எனது ஐந்து வயது குழந்தையுடன் விளையாடிக் கொண் டிருந்தேன்... அந்த விளையாட்டிலே என் குழந்தை வெற்றியடைந்து விட்டது. நான் தோல்வியைத் தழுவிக் கொண்டேன்’’ என்று உற்சாகமாக சொன்னார். நான் சற்று யோசித்தேன்.

நாம் சிறிய குழந்தையாக இருந்தபோது; எந்த விளையாட்டிலேயும் கலந்து கொண்டாலும் அதிலே நாம் தான் வெற்றி பெற வேண்டுமென்ற ஒரு ஆசை நம்முள் இருக்கும்.

நம்மை எதிர்த்து விளையாடுகிறவர் நல்லவரா, கெட்டவரா, பெரியவரா– சிறியவரா என்பதெல்லாம் முக்கியமில்லை. அவர் தோல்வி அடைய வேண்டும் என்பதுதான் முக்கியம்.

வாழ்க்கையிலே ஒரு பக்குவம் வந்த பின் வெற்றி பெற வேண்டும் என்ற மன அழுத்தம் போய்விடும்.

ஒவ்வொரு மனிதனும் வாழ்வின் அடுத்தகட்ட வளர்ச்சியில் அடியெடுத்து வைக்கிற நேரத்தில் தன்னிடமிருந்து ஏதோ ஒரு குணத்தை அல்லது தன்னுடன் இருந்த ஏதோ ஒரு உறவை இழக்கத்தான் வேண்டி வரும் என்று உலக புகழ்பெற்ற உளவியல் மேதை எம்.ஸ்கொட்பெக் கூறியுள்ளார்.

ஒரு கட்டம் வரைக்கும் உதவியாக இருக்கும் குணம் அடுத்த கட்டத்துக்குத் தடையாக கூட மாறிவிடலாம் என்று கூறுகிறார்.

ஆனால், பலபேர் எப்படியென்றால் பழையதைத் துறந்துவிட்டு புதிய கொள்கைகளை உருவாக்கிக் கொள்ள விருப்பமில்லாமல் இருந்து விடுகிறார்கள். அல்லது அப்படிச் செய்ய முடியாமல் தவிக்கிறார்கள். இதையெல்லாம் மீறி அந்தப் பழையதைத் துறந்துவிட்டா... அதை இழந்தாலே உண்டாகிற மன அழுத்தம் சில காலத்துக்கு வருத்திக் கொண்டுதான் இருக்கும். ஆரோக்கிமான ஒரு முன்னேற்றதிற்காக அந்த மன அழுத்தத்தைத் தாங்கிக் கொள்ளத்தான் வேண்டும் என்று ஸ்கொட்பெக் கூறுகிறார்.

பிறந்த நாள் முதல் இதுதான் சரி– என்று கற்பிக்கப்பட்டு வந்த ஒவ்வொரு தத்துவத்தையும் தங்களின் வளர்ச்சிக்குத் தகுந்த மாதிரி மாற்றி அர்த்தப்படுத்திக்கொள்ள முடியாமல் வாழ்க்கைச் சூழலில் அரைபட்டு தூளாகிறவர்கள்தான் மிகவும் தவிக்கிறார்கள்.

பெரும்பாலும் மனிதர்களின் நடுத்தர வயதிலே... முப்பதைத்தாண்டும் சமயத்தில்தான் இந்தத் தவிப்பு உண்டாகிறது.

இதைத்தான் மேற்கத்தேய நாடுகளிலேயே அடிக்கடி Mid-Life Crisis என்று சொல்கிறார்கள்.

ஒவ்வொரு நிமிடத்தையும் அந்த நிமிடத்திற்கு ஏற்ற சித்தாந்தம் கொண்டவர்களாக சந்திப்போம்.

அப்படிப் பழகிவிட்டால் வாழ்க்கை இன்பமயம். இல்லையென்றால் தவிப்பு மயம்தான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தொழிற்பயிற்சி அதிகார சபையால் கற்கைநெறிக்கு விண்ணப்பம் கோரல்

இளைஞர் விவகார அமைச்சின் கீழ் இயங்கும் தொழிற்பயிற்சி அதிகார சபையினால் பாடசாலைகளிலிருந்து இடைவிலகி உயர்கல்வியை தொடர முடியாத இளைஞர்கள், யுவதிகளின் எதிர்காலத்தினை மையமாகக் கொண்டு என்.வி.கியூ (NVQ) அடிப்படையில் புதிய கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்ப டவுள்ளன.

மேற்படி கற்கைநெறிகளை பின்பற்ற விரும்பும் மாணவர்கள் தமது சுயவிபரக்கோவையுடன் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் இல.375, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள தொழிற்பயிற்சி அதிகார சபையின் மாவட்ட காரியாலயத்திற்கு நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்பி வைக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்கற்கை நெறிகளை பூர்த்தி செய்வதன் மூலம் பல்கலைக்கழகத்திற்கும் செல்வதற்குமான வாய்ப்பாக அமைவதுடன் அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளில் கடன்களை பெற்று சுய தொழில் ஆரம்பிப்பதற்கும் ஏற்ற வகையில் இப்பயிற்சிநெறி அமைவதுடன் அதற்கேற்ற வகையில் சான்றிதழையும் பெற்றுக்கொள்ள முடியும் என யாழ்.மாவட்ட தொழிற்பயிற்சி நிலைய பொறுப்பதிகாரி சு.கிரிதாஸ் தெரிவித்துள்ளார்.

**மாவட்ட தொழிற்பயிற்சி நிலையத்தில்**

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சான்றிதழ் (NCICT), முச்சக்கரவண்டி திருத்துநர், மோட்டார் சைக்கிள் திருத்துநர், வெளியிணைப்பு இயந்திரம் திருத்துநர் ஆகிய கற்கை நெறிகளும்.

**கைதடி தொழிற்பயிற்சி நிலையத்தில்**

கணனி வன்பொருள் திருத்துநர் (Computer Hard Ware), தகவல் தொழில்நுட்பம்,மரவேலை தொழில்நுட்பம், கட்டட நிர்மாண தொழில்நுட்பம், காய்ச்சி இணைத்தல், தையற்கலை ஆகிய கற்கைநெறிகளும்.

**சுன்னாகம் தொழிற்பயிற்சி நிலையத்தில்**

தகவல் தொழில்நுட்பம்,வீட்டு மின்னிணைப்பு, முக அலங்காரம் ஆகிய கற்கைநெறிகளும்.

**காரைநகர் தொழிற் பயிற்சி நிலையத்தில்**

தகவல் தொழில்நுட்பம், வீட்டு மின்னி ணைப்பு, மோட்டார் சைக்கிள் திருத்துநர், தையற் கலை, கட்டட நிர்மாண தொழில்நுட்பம், முச்சக்கர வண்டி திருத்துநர் ஆகிய கற்கை நெறிகளும்.

**கரவெட்டி தொழிற்பயிற்சி நிலையத்தில்**

அலுமினியம் பொருத்துதல் பயிற்சி நெறியும் வழங்கப்படவுள்ளன. (அ-7)

# கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி மறவன்புலோ மத்தி நித்தர் புலம் திருவருள் மிகு பெரிய தம்பிரான் நீல சோதி ஆலய புனருத்தாரண பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம் எதிர்வரும் ஜூன்மாதம் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6.07 மணி தொடக்கம் காலை 7.47 மணிவரையுள்ள சுப வேளையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கான கிரியைகள் எதிர்வரும் 30 ஆம் திகதி புதன்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகவுள்ளதாகவும் மறுநாள் வியாழக்கிழமை காலை 7 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்தலும் நடைபெறும் என ஆலய பரிபாலனசபை அறிவித்துள்ளது. (அ-9)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 130 | 100 | 130 | 70 |
| உருளைக்கிழங்கு | 65 | 80-100 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 60 | 60 | 60 | 80 |
| தக்காளி | 160 | 160 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 40 | 30 |
| கோவா | 70 | 60 | 60 | 60 |
| கரட் | 60 | 40 | 60 | 90 |
| பூசணி | 25 | 20 | 20 | 40 |
| புடோல் | 60 | 40 | 50 | 60 |
| வாழைக்காய் | 25-30 | 20 | 20 | 40 |
| சின்ன வெங்காயம் | 30-80 | 60-100 | 90 | 60-80 |
| பெரிய வெங்காயம் | 65 | 70 | 70 | 80 |
| பாகற்காய் | 80 | 100 | 80 | 80 |
| வெண்டிக்காய் | 70 | 60 | 50 | 60 |
| கருணைக் கிழங்கு | -- | 70 | -- | 80 |
| பயற்றங்காய் | 60-70 | 100 | 70 | 40 |
| லீக்ஸ் | -- | 160 | 100 | 160 |
| பீற்றூட் | -- | 60 | 60 | 120 |
| கறிமிளகாய் | 80 | 120 | 100 | 80 |
| முருங்கைக்காய் | 140 | 200 | 250 | 160 |
| போஞ்சி | -- | 140 | 100 | 140 |
| கத்தரிதம்புள்ள | -- | 70 | 80 | -- |
| கீரை - 1 பிடி | 10-12 | 20 | 30 | 20 |
| தேசிக்காய் | 150 | 80 | 80 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 15-30 | 30 | 20 | 16-20 |

# இராசி பலன்

*23.05.2012*

*(வைகாசி 10, புதன்கிழமை)*

*சூரிய உதயம் காலை 5.53 மணிக்கு*

*துதியை முற்பகல் 9.05 மணிக்கு*

*மிருகசீரிடம் மாலை 5.28 மணிக்கு*

*இராகுகாலம் 11.52-1.22மணிவரை*

*சுபநேரம் 4.22-5.52 மணிவரை*

**மேடம்** வெற்றிகரமான செய்திகள் வந்து சேரலாம், உடல் பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, நீண்ட நாளைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரலாம், வெளியூர்த்தொடர்புகள் விரிவடையும்.

**இடபம்** நிதிநிலை உயர்வடையும், மாற்றினத்தவர்கள் மூலம் மகிழ்ச்சிகரமான செய்திகள் வந்து சேரலாம், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயர்வடையும், உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம்.

**மிதுனம்** இல்லத்திலும்உள்ளத்திலும் அமைதி கூடும், காணாமல்போன பொருளொன்று கைக்கு கிடைக்கலாம், ஆன்மீக சிந்தனை மேலோங்கும், கௌரவமானவர்களுடன் சந்திப்பு இடம்பெறலாம்.

**கடகம்** இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள், சுப செலவுகள் அதிகரிக்கும், சயனசுகக்குறைவான நாள், தொழிலை விரிவுபடுத்த நடவடிக்கை எடுப்பீர்கள்.

**சிங்கம்** செவி குளிரும் செய்திகள் வந்து சேரும் நாள், பொருளாதார நிலை உயர்வடையும், உறவினர் வருகையால் உள்ளம் மகிழும் நாள், எடுத்த காரியங்கள் எளிதில் வெற்றி கிடைக்கும்.

**கன்னி** கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், அன்பு நண்பர்கள் ஆர்வத்தோடு உதவி செய்ய முன்வருவர், தொழில் நலன் கருதி அதிக பிரியாசை எடுப்பீர்கள், விருந்துபசாரங்களில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு

**துலாம்** தடைகள் விலகி தனவரவுகள் பெருகும் நாள், நண்பர்கள் உதவி செய்ய முன்வருவர், புதியதிட்டங்கள் கைகூடும், பயணங்களால் பலனுண்டு, தந்தைவழி உறவினரால் நன்மையுண்டு

**விருச்சிகம்** சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், செலவுகள் அதிகரிக்கும், குடும்பத்தில் உணர்ச்சி வசப்பட்டு பேசிவிட்டு வருத்தமடைய நேரிடலாம், காரியங்களில் தாமதங்கள் ஏற்படலாம்.


**தனுசு** அரசு வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், வாழ்க்கைத் துணை வழியே வரவுகள் கிடைக்கலாம், சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும், புதிய பொருட்சேர்க்கையுண்டு.

**மகரம்** உற்றார் உறவினர்கள் கைகொடுத்து உதவ முன்வருவர், தேக நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தொழில் முன்னேற்றமுண்டு, பாக்கிகள் வசூலாகலாம், போசன சுகமுண்டு.

**கும்பம்** பிள்ளைகளால் பெருமை சேரும் நாள், வளர்ச்சி பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், தொழில் நன்மை கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு.

**மீனம்** எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் நாள், வாகன சுகமுண்டு, தாய்வழி உறவினர்கள் மூலம் ஏற்பட்ட தகராறுகள் அகலும், சுப செலவுகள் செய்து மகிழ்வீர்கள்.

வளவன்




# உயிர் மீண்ட காளை மாடு 10

யாழ்ப்பாணத்தில் இறைச்சிக்காக வெட்டப் படவிருந்த நல்லினக் காளைமாடு தொடர் பில் யாழ்ப்பாண நீதிமன்றில் நடந்த வழக்கு அதன்மூலம் காளைமாடு உயிர்மீண்ட வரலாற்றைக் கூறுகின்ற இப்பகுதியில் சில காளைமாடுகள் பெற்றிருந்த முக்கியத்துவம், உலகளாவிய ரீதியில் மக்களின் கவனத்தை ஈர்த்த வரலாறுகளை ஒருகணம் திரும்பிப் பார்ப் பது இவ்விடத்தில் பொருத்துடையதாகும்.

**லண்டனில் நடந்த வழக்கு**

பிரிட்டன் வேல்ஸில் உள்ள முருகன் கோயிலில் காளை மாடு ஒன்று பராமரிக்கப் பட்டு வந்தது. பிரசித்திபெற்ற லண்டன் வேல்ஸ் முருகன் கோயிலுக்குச் செல்கின்ற வீர்கள் காளைமாட்டை வழிபடுவதற்கு ஒரு




போதும் தவறியதில்லை.

வேல்ஸ் முருகன் ஆலயம் என்றவுடன் தமிழர்களும் இந்து சமயத்தவர்களுமே அந்த

## காளையின் உயிரைக்காக்க இலண்டனில் நடந்த வழக்கு

ஆலயத்தின் பக்தர்களாக இருப்பார்கள் என்று எவரும் நினைத்துவிடக்கூடாது.

பிரிட்டிஸ்காரர்களே அந்த ஆலயத்தில் மிகுந்த பக்தி கொண்டவர்களாக இருந்தனர். வேல்ஸ் முருகன் கோயிலுக்குச் செல்கின்ற வெள்ளைக்காரர்கள் கோயில் காளை மாட் டைத் தொட்டுத்தொழுது வணங்குவர்.

சம்போ என்பது அந்தக் காளை மாட்டின் பெயர். வேல்ஸ் கந்தவேல் சுவாமி கோயிலின் வழிபாட்டிற்குரிய சம்போ என்ற காளை மாட் டிற்கு 2007ஆம் ஆண்டில் காச நோய் பீடித்துக் கொண்டது. காசநோயால் பீடிக்கப்பட்ட காளைமாட்டை கொல்வதற்கான தீர்மானத்தை வேல்ஸ் சட்டசபை எடுத்திருந்தது.

சட்டசபையின் தீர்மானத்தின் பிரகாரம் வேல்ஸ் முருகன் ஆலயத்தில் உள்ள காளை மாட்டைக் கைது செய்வதற்கான பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

பிடியாணையை நிறைவேற்றும் பொருட்டு வேல்ஸ் முருகன் கோயிலில் உள்ள சம்போ என்ற காளைமாட்டை கைது செய்து அதற்கு மரணதண்டனை விதிப்பதற்காக அதிகாரிகள் ஆலயத்திற்குச் சென்றனர்.

வேல்ஸ் சட்டசபைத் தீர்மானத்தின் பிர காரம் சம்போவுக்கு பிடியாணை பிறப்பிக் கப்பட்ட செய்தி அறிந்த சம்போவின் பக் தர்கள் ஆலயத்தில் சூழ்ந்து கொண்டு காளை மாட்டை கைது செய்ய அனுமதிக்க முடியா தென வாதிட்டனர்.

இதனால் எதுவும் செய்ய முடியாத அதி காரிகள் காளை மாடு தொடர்பில் பிறப்பிக் கப்பட்ட பிடியாணையை ஆலய அறிவித்தல் பலகையில் ஒட்டிவிட்டுச் சென்றுவிட்டனர்.

**காளைமாட்டிற்காகப் பிரார்த்தனை**


காசநோயினால் பீடிக்கப்பட்ட சம்போ என்ற காளை மாட்டிற்கு எந்தவிதமான ஆபத்தும் ஏற்படக்கூடாது. கூடவே அந்தக் காளைமாடு காச நோயிலிருந்து சுகமடைய வேண்டும் என்றும் பக்தர்கள் பிரார்த்தனையில் ஈடு பட்டனர்.

சம்போவைச் சுற்றி நின்று அந்தணச் சிவாச்சாரியர்கள் வேத மந்திரம் ஓத, ஏனையவர்கள் கண் களை மூடி கருணை மிக்க இறைவா! எங்கள் வழிபாட்டிற்குரிய காளை மாட்டைக் காப்பாற்றி அருளுக! என்று பிரார்த்தித்தனர்.

இதேவேளை காளைமாட்டை கைது செய்யவந்த அதிகாரிகள் மீண்டும் பொலிஸாருடன் கோயி லுக்குச் சென்றனர்.

காளைமாட்டைக் கொல்வதற் காக அதிகாரிகள் பொலி ஸாருடன் வருகின்ற தகவலை அறிந்த பக்தர்கள் மற்றும் ஆலய அந்தண சிவாச்சாரியர்கள் வீதியில் தமது வாகனங்களை நிறுத்தி வீதித்தடை செய்தனர். பக்தர்களின் மறியற்போராட்டம் காரணமாக காளைமாட்டை ஏற்றிச் செல்ல வந்தவர்கள் எதுவும் செய்யமுடியாமல் திரும்பிவிட்டனர்.

பொலிசாருடன் வந்த அதிகாரிகள் எதுவும்



## வேல்ஸ்முருகன் ஆலய சம்போ காளை மாடு

செய்யமுடியாமல் திரும்பிச் சென்றனர் என் பதற்குள் இருக்கக்கூடிய,

ஜனநாயகப் பண்பு, மதங்களை மதிக்கும் இயல்பு குறித்து நாம் ஒருகணம் சிந்தித்தால் எங்கள் நாட்டில் எங்கள் தலைவிதி எத்தகை யது என்பதை உணர்ந்து கொள்ள முடியும்.

**காளைமாட்டுக்காக பிரிட்டன் நீதிமன்றில் வழக்கு**

வேல்ஸ் சட்டசபையால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் காளைமாடு கொல்லப்படுவதை எதிர்த்து வேல்ஸ் முருகன் ஆலய நிர்வாகம் பிரிட்டன் நீதிமன்றில் மேன் முறையீடு செய்தது.

பிரிட்டனில் வாழும் இலட்சக்கணக்கான இந்து மக்கள் சம்போ காளையை புனிதமாக கருதுகின்றனர். சம்போவைக் கொல்வதன் மூலம் இந்துக்களின் உணர்வுகளும் கொல்லப்


காளை மாட்டைக் காப்பாற்ற நடக்கும் ஆர்ப்பாட்டம்

படும் என அவர்கள் நீதிமன்றில் தெரிவித்தனர்.

எனினும் வழக்கை விசாரித்த பிரிட்டன் நீதிமன்றம் பிற மாடுகளுக்கும் மனிதர்களுக்கும் காசநோய் பரவாமல் தடுக்க வேண்டுமாயின் சம்போவைக் கொல்வதுதான் வழியென தீர்ப்பு வழங்கியது.

காளைமாட்டைக் காப்பாற்றுவதற்காக நீதிமன்றம் சென்றவர்களுக்கு இத்தீர்ப்பு பலத்த ஏமாற்றத்தைக் கொடுத்தது.

சம்போவுக்கு காசநோய் இருக்குமாயின் முதலில் அதற்கு சிகிச்சை அளிக்க வேண்டும். அதைவிடுத்து காளை மாட்டைக் கொல்வது ஏற்புடையதல்ல.

மனிதர்களுக்கு நோய்வந்தால் அவர்களைக் கொன்றுவிடுகின்றோமா என்ன?

மனிதர்கள் போன்றுதான் காளைமாட்டின் மீதும் கருணைகாட்ட வேண்டும் என பிரிட் டனில் உள்ள இந்து அமைப்புக்கள் கோரி க்கை விடுத்தன.

எனினும் இந்து அமைப்புக்களின் கோரிக் கைக்கு பிரிட்டன் நீதிமன்றம் அளித்த தீர்ப்பு சாதகமாக இருக்கவில்லை.

இதன் காரணமாக நீதிமன்றத் தீர்ப்பை நிறைவேற்றுவதற்காக நூற்றுக்கணக்கான பொலிஸார் கொண்ட ஒரு படையணி வேல்ஸ் கந்தன் கோயிலை நோக்கிப் புறப்படத் தொடங்கியது. (வளரும்)

விதுரன்

# கிழக்கு மாகாண சபை தேர்தலில் கூட்டமைப்புடன் இணையமாட்டோம்

## முஸ்லிம் காங்கிரஸ் அறிவிப்பு

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்புடன் கூட்டணி அமைத்துப் போட்டியிடும் திட்டம் ஏதும் கிடையாது என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது. கிழக்கு மாகாண சபைத்தேர்தலில் தமிழ் தேசியக்கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிடுவது குறித்து சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆராயவுள்ளதாக தகவல்கள் வெளியான நிலையிலேயே அந்தக் கட்சியின் பொதுச் செயலர் ஹசன் அலி அதனை மறுத்துள்ளார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் இணைவது தொடர்பான எந்த திட்டமும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசுக்கு கிடையாது என்று அவர் கூறியுள்ளார். அதேவேளை கிழக்கு மாகாணசபைத் தேர்தலை எதிர்கொள்வது குறித்து முஸ்லிம் காங்கிரஸ் கண்டியில் எதிர்வரும் 27 ஆம் திகதி நடத்தவுள்ள கூட்டத்தில் கலந்துரையாடவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இந்தக் கூட்டத்தில் முஸ்லிம் காங்கிரசின் நாடாளுமன்ற,மாகாணசபை, உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களும், கிராமிய குழு உறுப்பினர்களும் பங்கேற்கவுள்ளனர். (அ-2)

# நாட்டு மக்களுக்கான இறைமை அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும்

## ஹிருணிகா கோரிக்கை

நாட்டில் மக்களுக்கான இறைமை மற்றும் அவர்களுக்கான அதிகாரங்கள் நியாயமான முறையில் வழங்கப்பட வேண்டும் என படுகொலை செய்யப்பட்ட பாரத லக்ஸ்மன் பிரேமச்சநதிரவின் மகள் ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்துள்ளார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே அவர் இதனைக்குறிப்பிட்டுள்ளார். தனது நாட்குறிப்பில் 2011 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 8 ஆம் திகதி குறிப்பிடப்பட்டிருந்த வாசகத்துடன் ஹிருணிகா ஜனாதிபதிக்கான தனது கடிதத்தினை ஆரம்பித்துள்ளார்.

குறித்த தினத்தினை (THE DAY I LOST MY SOUL) அதாவது எனது உயிரினை இழந்த தினம் என அவர் குறிப்பிட்டுள்ளார். கடந்த ஏழு மாதங்களாக தான் தந்தைய்ய இழந்த ஒரு மகளாக துன்பம், துயரம், அவமானம், அச்சுறுத்தல் என அனைத்தையும் எதிர்கொண்டதாக ஹிருணிகா பிரேமச்சந்திர ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார். அவ்வாறான தருணங்களை தான் தொடர்ந்தும் அனுபவிப்பதாகவும் வாழ்நாளில் மிகவும் கஷ்டமான அனுபவங்களாக அவை அமைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி அதேபோன்று ஏனைய பொறுப்புள்ள அதிகாரிகள் மக்களின் இறைமையை பயன்படுத்துவதாக ஹிருணிகாவின் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அவர் எழுதியுள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

செய்திகளில் எனது தந்தையின் இரத்தக்கறையைக் கண்டபோது என்னால் என்னையே கட்டுப்படுத்திக்கொள் முடியாது போனது. எனக்கு கதறி அழவேண்டும்போல் இருந்தது. சத்தமிட வேண்டும போன்று இருந்தது. ஆனாலும் என்னால் வாய்பேச முடியவில்லை. 1979 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி அரசு இருந்த போது இலங்கை மக்கள் வீட்டிற்கு வெளியே வருவதற்கே அச்சமடைந்த காலப்பகுதி அது. அப்போது அந்த அச்சுறுத்தல்களுக்கு அஞ்சாது மக்களை ஒன்றிணைத்து வீதிக்கு இறக்கி நீலக்கொடியை கொலன்னாவையில் பறக்கவிட்ட ஒரே தலைவர் எனது தந்தை. கடந்த ஏழு மாதங்களாக பிரதான சந்தேக நபரை சட்டத்தின் முன்கொண் டு வர வேண்டுமென்றே நான் கூறி வருகின்றேன் என்றார். (அ-2)


ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் திருக்கோவில்
மஹோற்சவம் -2012

23.05.2012 புதன்கிழமை
நாளை தேர்த்திருவிழா காலை 10.00 மணி
சப்பறத்திருவிழா
இரவு 07.00மணி
தினமும் நண்பகல் அன்னதானம் இடம்பெறும்
www.inuvilinfo.com
இணுவில்
(சி-001)



திருமண வாழ்த்துக்கள்


23.05.2012 இன்று திருமண பந்தத்தில் இணையும்
இருவரையும் மனதார வாழ்த்துகின்றோம்.
ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரோடி
பார் போற்றும் தம்பதிகளாக பேரோடும்
புகழோடும் பெருவாழ்வு வாழ வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:-
அப்பா-சி.சகாயம், அம்மா-ச.சத்தியேஸ்வரி,
தம்பிமார்-ச.உஷாந்தன், ச.துஸ்யந்தன்,
பிரபு அண்ணா குடும்பத்தினர்
உருப்பிராய் மேற்கு, உரும்பிராய்
(8491)


# கல்வி-வேலைவாய்ப்பில் வெற்றிதரும் புதன் எண் சக்கரம்

எண்கணித முறைப்படி புதனுக்கு உரிய எண் 5. இதை அடிப்படையாகக்கொண்டு அமையும் எண் சக்கரம் ஒருவரது கல்வியில் சிறப்பை வழங்கும் என்பது சித்தர்கள் கூறிய ஜோதிட நம்பிக்கையாகும்.

**யோக பலன்கள்**

புதன் கிரகத்துக்கு **புத்திகாரகன்** என்ற பெயரும் உண்டு. ஒருவரது ஜாதகத்தில் புதன் கிரகத்தின் அமைப்பைப்பொருத்தே அவரது கல்வி மற்றும் புத்திக்கூர்மை அமையும். புதன்கிரகம் பலமாக அமைந்து இருந்தால் அவரிடம் எந்த விடயத்தையும் உடனே கிரகித்துக்கொள்ளும் ஆற்றல், அபாரமான நினைவுத்திறன், தெளிவான சிந்தனை, புத்திசாலித்தனம் போன்றவை காணப்படும். மேலும் இவர்கள் கணிதம், அறிவியல், நடிப்பு, நடனம், சிற்பம்- ஓவியம் வடித்தல் போன்ற துறைகளில் திறமையுடன் செயற்படுவார்கள். இதுதவிர எழுத்து, பேச்சுத்திறமை, வாதம் செய்தல் போன்றவற்றிலும் ஒருவர் சிறந்து விளங்க புதன் கிரகம் பலமாக அமைவது அவசியம்.

புதன் பலமாக அமைந்திருந்தால் அவருக்கு கட




வுள் பக்தி அதிகமாக இருக்கும். புண்ணியத் தலங்களுக்கு அடிக்கடி சென்று வரும் நிலை காணப்படும். தெய்வ அனுக்கிரகத்துடன் இவர்களுக்கு சிறந்த மனைவி, மக்கள் அமைந்து அவர்களாலும் உற்றார், உறவினர்களாலும் நற்பலன்களே கிடைக்கும்.

**அசுப பலன்கள்**

ஒருவரது ஜாதகத்தில் புதன்கிரகம் பலமிழந்திருந்

| | | | | |
|---|---|---|---|---|
| 11 | 24 | 7 | 20 | 3 |
| 4 | 12 | 25 | 8 | 16 |
| 17 | 5 | 13 | 21 | 9 |
| 10 | 18 | 1 | 14 | 22 |
| 23 | 6 | 19 | 2 | 15 |

தால் கல்வித்தடை, மந்தபுத்தி, பிறரிடம் அவச்சொல் பெறும் வகையில் தவறு செய்தல், நாணயம் தவறுதல், கெட்ட சகவாசத்தால் தண்டனை பெறுதல் போன்ற அசுப பலன்களை சந்திக்கநேரிடும். வயிறு தொடர்பான நோய்கள், தவறான நடத்தையால் ஆண்மைக்குறைவு ஏற்படுதல் போன்ற பாதிப்புக்களையும் வலுகுறைந்த புதன் ஏற்படுத்தும்.

**எண் சக்கரம்**

புதன் கிரகத்தால் ஏற்படும் அசுப பலன்களின் பாதிப்புக்கள் குறையும் சுப பலன்கள் அதிகரிக்கவும் இங்கே கொடுக்கப்படவுள்ள எண் சக்கரம் உதவும். இந்த் எந்திரத்தில் 1 முதல் 25 வரை உள்ள எண்களை படத்தில் உள்ளபடி வரைந்து புதன் எண் சக்கரம் தயாரிக்க வேண்டும். இந்த எண்களை குறுக்கு நெடுக்காக எப்படி கூட்டினாலும் அதன் கூட்டுத் தொகை 65 வரும். இதன் கூட்டுத்தொகை 6+5= 11. இதன் கூட்டுத்தொகை 1+1= 2 ஆகும்.

புதனுக்கு உரிய உலோகம் பித்தளை. எனவே இந்த எண் சக்கரத்தை பித்தளை தகட்டில் வரைந்து பயன்படுத்துவது சிறப்பு. இந்த எந்திரம் யாருக்காக தயாரிக்கப்படுகின்றதோ அவருக்கு அந்த காலகட்டத்தில் ஜாதகத்தில் புதன் அஸ்தமனம் ஆகாமல் இருக்க வேண்டும்.

அதேபோல பகை நீச்சம் அல்லது பகை நீச்ச நவாம்சம் அடையாமலும் நல்ல நிலையில் இருக்க வேண்டும். ஒருவருக்கு இராசியில் இருந்து 2,4,6,8,10,11 ஆகிய இடங்களில் இருக்கும் போது புதன் நற்பலன்களை தருவார். எனவே அந்த காலகட்டத்தை அறிந்து கொண்டு புதன் சக்கரத்தை தயாரிக்க வேண்டும்.

புதன்கிழமை அன்று புதன் ஓரையில் (சூரிய உதயம் முதல் ஒரு மணி நேரம் வரை ) எண் எந்திர தகடு தயாரித்தல் மற்றும் அதை வைத்து பூஜை செய்வது நற்பலன்களைத் தரும். இந்த எண் எந்திரத்தை மரப்பலகையில் பதித்து அதன் மீது சூரிய ஒளிபடும்படி வைத்து அதை பார்த்தபடி பூஜை செய்து பிரார்த்தனை செய்தால் எண்ணியது நிறைவேறும். இவ்வாறு செய்வதன் மூலம் ஒருவருக்கு புதன் கிரகத்தால் ஏற்படும் சுப பலன்கள் அதிகரிக்கும். மேலும் அவருக்கு புதன் கிரகத்தால் வரும் தீய பலன்களின் வேகம் குறையும்.

மாணவ- மாணவிகள் நன்றாக படித்து அதிக மதிப்பெண்கள் பெற்று நல்ல வேலைக்கு செல்ல இந்த புதன் எண் சக்கரம் பயன்தரும். மேலும் இதை இறை சக்தி கிடைக்கவும் நல்ல மனைவி, மக்கள் அமைந்து திருப்தியான வாழ்க்கை அமையவும் இந்த எண் சக்



கரம் உதவும். புதன் கிரகத்தின் பாதிப்பால் ஒருவர் தவறான பாதையில் சென்றால் அவர் திருந்தி நல்ல வாழ்க்கை வாழ இந்த புதன் எண் சக்கர வழிபாடு உதவும்.

**புதன் காயத்ரி**

*கஜ த்வஜாய வித்மஹே சுக ஹஸ்தாய தீமஹி*
*தன்னோ புத: பிரசோதயாத்*

நல்ல அறிவுடன் புத்திசாலித்தனமாக திகழவும் உடல் சக்தி பெறவும் உறவினர்களால் ஏற்பட்ட தொல்லை அகலவும் வியாபாரத்தில் வெற்றி கிடைக்கவும் உதவும் புதன் சுலோகம்.

*சிம்ஹாருடம் சதுர்புஜம் கட்க சர்ம கதாதரம்*
*சோமபுத்ரம் மஹா செளம்யம் தியோயேத் பரார்த்த சித்திதம்*

புதன் கிரகத்தால் ஏற்படும் தோஷ பரிகாரத்துக்கு கீழ்க்கண்ட ஜெப மந்திரத்தை 17 ஆயிரம் தடவை சொல்ல வேண்டும்.

*ஓம் பிராம் பிரீம் ப்ரெளம் ச: புதாயநம*

# பர்மிய பிக்கு சொன்னகதைகள் நூல்வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கவிஞர் சோ. பத்மநாதன் எழுதிய பர்மிய பிக்கு சொன்ன கதைகள் நூல் வெளியீட்டு விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். ஜும்மா பள்ளி வாசல் ஒழுங்கையில் அமைந்துள்ள ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தில் யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை பேராசிரியர் கி. விசாகரூபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் இந்நூல் வெளியீட்டுரையினை தென்னிந்திய திருச்சபை முன்னாள் பேராயர் கலாநிதி சு. ஜெபநேசனும் வாழ்த்து ரையினை யாழ். பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் நா. ஞானகுமாரனும் வழங்கவுள்ளனர்.

இந்நூல் முதற்பிரதியினை லயன் ஈ.எஸ்.பேரம்பலம் நாகரத்தினம் பெறவுள்ளார். மேற்படி நூல் வெளியீட்டு விழாவானது யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவிருந்து இடமாற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-7)

# 2012 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பதிவுகள் ஜூன் மாதம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

**யாழ். தேர்தல் மாவட்டத்திற்குரிய 2012 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பதிவு நடவடிக்கைகள் எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி முதல் மேற்கொள்ளப்படவுள்ளதாக யாழ். உதவித் தேர்தல்கள் ஆணையாளர் பொ.குகநாதன் தெரிவித்துள்ளார்.**

கிராம சேவையாளர் பிரிவு ரீதியாக மேற்கொள்ளப்படவுள்ள இந்த வாக்காளர் பதிவு நடவடிக்கைகளை அந்தந்த கிராம சேவகர்கள் வீடு வீடாக சென்று பதிவு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த வருடத்தில் யாழ். தேர்தல் மாவட்டத்தில் வாக்காளர்களின் எண்ணிக்கை குறைவடைந்து சென்றுள்ளது.

இதனால் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையும் குறைவடையும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதற்கு கிராம சேவையாளர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது. இவர்கள் சரிவர வாக்காளர்களை பதியத்தவறிவிட்டனர் எனவும் வாக்காளர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தத் தவறி விட்டனர் எனவும் பலதரப்பட்டவர்களினாலும் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எனவே கடந்த வருடத்தில் விடப்பட்ட தவறுகளை தவிர்த்து இந்த வருடம் வீடு வீடாக சென்று வாக்காளர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி முதல் மூன்று வாரங்களுக்கு இந்த வருடத்திற்கான வாக்காளர் பதிவு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

பொது மக்கள் தாமாக முன்வந்து கிராம சேவையாளரிடமிருந்து வாக்காளர் பதிவிற்கான வி.சி. படிவத்தை பெற்று தவறாது வாக்காளராக பதிவு செய்துகொள்ள வேண்டும்.

தவறுபவர்கள் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்படுவார்கள என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)




# மின்தடை பற்றிய அறிவித்தல்


(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதாலும் கட்டமைப்பு வேலைகள் மற்றும் பராமரிப்பு வேலைகள் செய்ய வேண்டியிருப்பதாலும் நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை பின்வரும் பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர்ப்பிரதேசம், தீவகப் பிரதேசம், அராலி, கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, முடமாவடிப்பகுதி, பாற்பண்ணைப் பகுதி, திருநெல்வேலி நகரம், மருத்துவபீடப்பிரதேசம், ஆடியபாதம் வீதி கொக்குவில் சந்தி வரையான பிரதேசம், கல்வியங்காடு,நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம்ஆகிய பகுதிகளில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-9)

# குப்பைக்குவியல்களால் நிறையும் நவாலி கிழக்கு வீதியோரங்கள்

## மக்கள் சுட்டிக்காட்டு



(நவாலி)

நவாலி சங்கரத்தை பிரதான வீதியின் நவாலி கிழக்கு பகுதியில் வீதியோரங்களில் கொட்டப்படும் குப்பை அகற்றாது காணப்படுவதால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.

இக்குப்பையானது பல மாதங்களாக குவிந்து காணப்படுவதனால் சுகாதார சீர்கேடுகள் காணப்படுவதுடன் நுளம்புகள் பெருகக்கூடிய சாத்தியமும் உள்ளது.

சில நாட்களுக்கு முன்பு இதேபகுதியில் உள்ள வீடுகளுக்கு சென்ற பொலிஸார் வீடுகள் துப்புரவாக இருக்கின்றனவா என்று துருவித்துருவி ஆராயந்து சில வீட்டு உரிமையாளர்களுக்கு எதிராக வழக்கும் தொடரப்பட்டது.

அதே போன்று சுகாதார பகுதியினரும் அதே பகுதிக்கு வீடு வீடாகச் சென்று பார்வையிட்டு வரும் நிலையிலும் இக்குப்பைகள் அவ்விடத்தில் குவிந்து காணப்படுகின்றன.

எனவே உரிய தரப்பினர் இதனைக் கருத்திற்கொண்டு குப்பைகளை அகற்ற நடவடிக்கை எடுக்கவேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-26)

# சாவீட்டு வாழைமரங்கள் சாய்ந்தே கிடக்கின்றன

(நவாலி)



நவாலிப் பகுதியில் மரண வீடுகளுக்கு வீதியில் கட்டப்படும் வாழை மரங்கள் மரண வீடு முடிந்தபின் அவிழ்க்கப்பட்டு வீதி ஓரங்களிலேயே விடப்படுவதால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்ளவேண்டிய நிலை உள்ளது.

இவ்வாழை மரங்கள் அவிழ்க்கப்பட்டு வேறு இடங்களுக்கு அகற்றப்படாது வீதி ஓரங்களிலேயே காணப்படும் போது பிரதேச சபையின் கழிவகற்றும் வாகனங்களும் இவ்வாழை மரங்களை எடுத்துச் செல்ல மறுக்கின்றன.பொலிஸார் குப்பை கொட்டிய குற்றச்சாட்டில் தமக்கு எதிராக மன்றில் வழக்குத் தொடரப்போகின்றனர் என இவ்வாழைக்கு அருகில் உள்ள வீட்டுக்காரர்களும் மற்றும் வர்த்தக நிலைய உரிமையாளர்களும் அச்சத்துடன் காணப்படுகின்றனர்.அத்துடன் பிரதேச சபையின் கழிவு அகற்றும் வாகனத்தில் வருவோர் ஈடுபாட்டுடன் இறங்கி குப்பைகளை அகற்றுவதில்லை எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே உரியதரப்பினர் இதனைக் கருத் திற்கொண்டு மேற்குறித்த நடவடிக்கைகளுக்கு உரிய தீர்வைப் பெற்றுத்தர வேண்டு மென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-26)

# கண்டனன் சீதையை இசைநாடகம் மீண்டும் கைலாசபதி அரங்கில்

(யாழ்ப்பாணம்)

நாடக அரங்கக் கல்லூரியின் தயாரிப்பில் உருவான **கண்டனன் சீதையை** என்னும் இசை நாடகம் எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இவ்விசை நாடகமானது அருணாசலக் கவிராயரின் இராமநாடகக் கீர்த்தனையிலிருந்து தொகுக்கப்பட்டதாகும். இதன் எழுத்துருவை யே.ம.யோசப்மேரி, குழந்தை ம. சண்முகலிங்கம் ஆகியோர் உருவாக்கியுள்ளனர்.

இசையமைப்பு, இசைப்பயிற்சி மற்றும் இசை நெறியாள்கையை யாழ். பல்கலைக்கழக இசைத்துறை விரிவுரையாளர் தவநாதன் றொபேட் வழங்கவுள்ளார்.

இந்நாடகமானது கடந்த மார்ச் மாதம் 11 ஆம் திகதியன்று கைலாசபதி கலையரங்கில் அரங்கு நிறைந்த காட்சியாக மேடையேற்றப்பட்டது.

அன்றைய தினம் இவ் ஆற்றுகையை பார்வையிட முடியாமல் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்ற ரசிகர்கள் இவ்வாய்ப்பினை பயன்படுத்திக்கொள்ளலாம் என நாடக அரங்கக் கல்லூரியின் பதிவாளர் க. ஞானபாஸ்கரன் தெரிவித்துள்ளார். (அ-9)

# நூதன உற்சவமும் கும்பாபிஷேகமும்

நவாலி ஸ்ரீ கதிர்காமமுருகன் ஆலய நூதன உற்சவமும் கும்பாபிஷேகமும் 30 ஆம் ஆண்டு குருபூசை தினமும் இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நவாலி தெற்கு செல்லப்பிள்ளையார் ஆலயத்தில் குருமுருகன் இராசமணி சமாதி சிலைக்கு விசேட பூசை வழிபாடு நடைபெற்று நவாலி அரசடி வீதிவழியாக் மேற்படி ஆலயத்தை வந்தடையவுள்ளது.தொடர்ந்து பிற்பகல் 5.30 மணிக்கு நூதன மூர்த்திக்கு சயனநிலை உற்சவம் நடைபெறவுள்ளது. மறுநாள் வியாழக்கிழமை குருமுருகன் நூதன மூர்த்திக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

அதேநாளில் குருமுருகன் அருள்முதம் மலர் வெளியீடும் நடைபெறவுள்ளது.இந்த குருமுருகன் ராசமணி சிலையானது இந்தியாவில் இருந்து ஐம்பொன்னில் செய்யப்பட்டு கொண்டுவரப்பட்டுள்ளது.இந்நிகழ்வுகள் யாவும் ஆலய பிரதம குரு சிவத்திரு மா. பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-3-26)

# அடிப்படை வசதிகள் ஏதுமின்றி தனியார் கல்வி நிலையங்கள்

(கரவெட்டி)

வடமராட்சி தனியார் கல்வி நிலையங்கள் சிலவற்றின மாணவர்களுக்கான மலசல கூடங்கள்,குடிநீர் வசதிகள், கல்வி நிலையங்களின் நிர்வாகத்தினரால் செய்து கொடுக்கப்படாமையால் மாணவர்கள் பல அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

தனியார் கல்வி நிலையங்களுக்கு கல்வி கற்கச் செல்லும் மாணவர்கள் நீண்ட நேரம் கல்விச் செயற்பாட்டில் ஈடுபடுகின்றனர்.

அம்மாணவர்கள் சனி மற்றும் ஞாயிறு தினங்களில் 6 மணித்தியாலங்களுக்கு மேல் காலை, மாலை வகுப்புகளுக்கு செல்வதனால் மாணவர்களின் அடிப்படை வசதிகள் இன்மையால் பல சிரமங்களை எதிர்கொள்வதை அவதானிக்க முடிகின்றது.

வதிரிப்பகுதியில் உள்ள உயர்தர வகுப்பு தனியார் கல்வி நிலையம் ஒன்றில் குடிநீர் இன்மையால் மாணவர்கள் அருகில் உள்ள பாடசாலைக்கு செல்ல வேண்டிய நிலை காணப்படுகின்றது.

எனவே மாணவர்களின் நலன்கருதி தனியார் கல்வி நிலையங்களின் நிர்வாகிகள், மாணவர்களின் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி கொடுக்க வேண்டுமென மாணவர்களின் பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(அ-3-24)

# வைகாசி மாத இராசி பலன்

## 14.05.2012 - 14.06.2012



## சிம்மம்

**மகம், பூரம், உத்ரம்**
**1 ஆம் பாதம்**

**வாய்ப்புகள் வாயில் தேடி வரும்! புகழ் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயற்படும் சிம்ம இராசி நேயர்களே!**

நீங்கள் சொன்னால் சொன்னவுடன் அதை செயற்படுத்த வேண்டும் என்று நினைப்பீர்கள். உற்றார், உறவினர்களைக் காட்டிலும் நண்பர்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பீர்கள். நாட்டுப்பற்று மிக்கவர்களாக விளங்கும் நீங்கள், வீட்டுப்பற்று இருப்பதை வெளிக்காட்டிக்கொள்ள மாட்டீர்கள். கூட்டு முயற்சி உங்களுக்குப் பிடிக்காது. கொள்கை பிடிப்பைத் தளர்த்திக்கொள்ளவும் முன்வர மாட்டீர்கள்.

உங்களுக்கு இந்த வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது இராசி நாதன் சூரியன் 10 இல் சஞ்சரித்து பலவிதமான வாய்ப்புகளை வழங்கப்போகிறார். இராசியிலேயே செவ்வாய் சஞ்சரித்து, அது சந்திர கேந்திரமாக இருப்பதால் சந்திர மங்கள யோகம் உருவாகிறது. எனவே, குடும்பத்தில் நீண்ட நாட்களாக நடைபெறாத சுப காரியப் பேச்சுக்கள் நடைபெறத் தொடங்கும். துணிவும், தன்னம்பிக்கையும்கூடும்.

சென்ற மாதத்தில் நடைபெறாத சில காரியங்கள் இப்பொழுது துரிதமாக நடைபெற்று மகிழ்ச்சியை வழங்கும். ஏழரைச் சனியின் ஆதிக்கம் வக்ர இயக்கத்தில் இருப்பதால் எதையும் திட்டமிட்டுச்செய்ய இயலாது என்றாலும், செய்யும் காரியங்கள் சிறப்பாக நிறைவேறிவிடும். 4 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் இராகுவின் பலத்தால் மருத்துவச் செலவு ஏற்படும்.

இம்மாதம் குருப்பெயர்ச்சி நடைபெற்றுள்ளது. குருவின் பார்வை உங்களது இராசியில் புதிய தெம்புடன் செயற்படும் சூழ்நிலை உருவாக்கப் போகிறது.

**இடப புதனின் சஞ்சாரம்!**

மே 15 ஆம் திகதி இடப் இராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். தன இலாபாதிபதி 10இல் சஞ்சரிக்கும் இந்தநேரத்தில் தொழில் வளர்ச்சி மேலோங்கும். தொகை கேட்ட இடத்தில் இருந்து கிடைக்கும். கூட்டாளிகள் உங்களை விட்டு விலகினாலும்கூட, புதிய கூட்டாளிகள் வந்திணைவர். ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாக இருந்து அரிய பலகாரியங்களை முடித்துக் கொடுப்பர். வீடு கட்டும் முயற்சி முதல் வாங்கும் முயற்சி வரை வெற்றிகரமாக நிறைவேறும்.

**வந்துவிட்டது குருப்பெயர்ச்சி!**

மே 17 ஆம்திகதி உங்கள் இராசிக்கு 10 ஆம் இடத்தில் குருபகவான் சஞ்சரிக்கிறார். இதன் விளைவாக பதவி மாற்றம், இடமாற்றம், ஊர்மாற்றம், பக்கபலமாக இருப்பவர்களின் குரு பார்க்கிறார். எனவே, குருவை வழிபட்டால் கூடுதல் பலன் கிடைக்கும்.

**மிதுன புதனும்இடப சுக்கிரனும்!**

மே 31 ஆம் திகதி மிதுனத்தில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக பல நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரப்போகிறது. அன்னிய தேச அனுகூலம் கிடைக்கும், இளைய சகோதரத்தின் வழியில் இருந்த பிரச்சினை அகலும். வங்கி சேமிப்பு உயர்ந்து, விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். அடகு வைத்த நகைகளை மீட்டுக்கொண்டுவரும் வாய்ப்புக் கிட்டும். மேலும் இடபத்தில் சுக்கிரன் ஜூன் 9 ஆம் திகதி வக்ரம் பெறப்போகிறார். எனவே, மாதக் கடைசியில் உடன்பிறப்புகளை அனுசரித்துச் செல்வது நல்லது. தொழில் மாற்றச் சிந்தனைகள் மேலோங்கும்.

இம்மாதம் குரு தெட்சணாமூர்த்தியை வழிபட்டு குதூகலமான வாழ்க்கையை

### அருளாளர், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும் புதிய பொறுப்புகளும் பொன்னான வாய்ப்புகளும் இல்லம் தேடிவரும்

பதிவதால், குரு மங்கள யோகம் உருவாகிறது. எனவே, அருளாளர்களின் சந்திப்பும், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பும் உங்களுக்குக் கிடைக்கப்போகிறது. புதிய பொறுப்புகளும், பொன்னான வாய்ப்புகளும் இல்லம் தேடி வரப்போகின்றன. வக்ர சனியின் இயக்கம் முடிந்த பின்னால் மேலும் வளர்ச்சி கூடும்.

புதன் உங்கள் இராசிக்கு 2, 11 க்கு அதிபதியாகி 9 ஆம் இடத்தில் சஞ்சரித்து மாதம் தொடங்குவதால் தனவரவு தாராளமாக வந்துகொண்டே இருக்கும். நல்ல பணிகளை செய்து முடித்து புகழ் என்ற மூன்றெழுத்தைப் பெற வேண்டும் என்று நினைத்த உங்களுக்கு அது கிடைத்து ஒத்துழைப்புகளிலும் மாற்றங்கள் ஏற்படும். வரும் மாற்றங்களை உபயோகப்படுத்திக் கொள்ளலாமா? இல்லை வேண்டாமா? என்பதை உங்கள் சுயஜாதகத்தில் தெசாபுத்திகளின் பலம் அறிந்து தேர்ந்தெடுத்துக் கொள்வதே நல்லது. இருப்பினும், குருவின் பார்வை உங்கள் இராசிக்கு 2, 4, 6 ஆகிய இடங்களில் பதிவதால், அந்த இடங்கள் எல்லாம் புனிதமடைகின்றன. குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் ஏராளமாக நடக்கப்போகின்றன.

வாகன மாற்றம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் செயலாக போகிறது. தேக நலன் சீராகும் விதத்தில் ஆரோக்கிய ஸ்தானத்தை அமைத்துக் கொள்ளுங்கள்.

இம்மாதம் யோகம் தரும் மாதமாகவே கருதலாம். எதிர்பார்த்தபடியே வரவு வந்து சேரும். இல்லம தேடி வரும் சுபச்செய்திகளைக் கேட்டு மகிழ்வீர்கள். பக்கத்து வீட்டாரின் பகை மாறும். கணவன், மனைவிக்குள் நெருக்கம் அதிகரிக்கும். பெண்குழந்தைகளின் சுபச் சடங்குகள் எதிர்பாராத விதத்தில் நடைபெறும். பிரச்சினைகளிலிருந்து விடுபடுவீர்கள். மாமன் வழி ஒத்துழைப்போடு மங்கள நிகழ்ச்சியொன்றை நடத்துவீர்கள். 4 இல் இராகு இருப்பதால் ,சர்ப்பசாந்தி செய்வது நல்லது.

### ஜோதிடக் கலைமாமணி சிவல்புரி சிங்காரம்

## கன்னி

**உத்ரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்**

**17ஆம் திகதிக்கு மேல் பலன் கிடைக்கும்! பழகுவதில் பாசத்தை அதிகம் காட்டும் கன்னி இராசி நேயர்களே!**

எதற்கும் ஓர் எல்லை உண்டு என்பதை அறிந்து வைத்திருப்பீர்கள் நீங்கள். பின்விளைவைப்பற்றிச் சிந்தித்தே செயற்படுவீர்கள். எதையும் உற்று நோக்கும் ஆற்றல் உங்களுக்கு உண்டு. அரைகுறையாக பணிசெய்வதை விரும்ப மாட்டீர்கள். அறிவுப் பசி தீர எப்போழுதும் படித்துக்கொண்டே இருப்பீர்கள். கோபம் வராத குணத்தை நீங்கள் பெற்றிருந்தாலும், எப்போதாவது கோபம் வரும் போது பின்விளைவைப்பற்றி யோசிக்காமல் பேசிவிடுவீர்கள். இதனால்பின்னால் வருத்தப்படுவது உங்களது வாடிக்கையாக அமையும்.

உங்களுக்கு இந்த வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது ஜென்ம சனியின் ஆதிக்கம் ஒரு புறம் இருந்தாலும், மாதத் தொடக்கத்தி துரிதமாக தொடங்கும். தக்கவிதத்தில் பொருளாதார வளர்ச்சி திருப்தி அளிக்கும். விரயங்கள் ஒரு பக்கம் கூடிக்கொண்டே வந்தாலும், வீட்டுத்தேவைகள் அதிகரித்தாலும் குரு, சனி இவர்களை வழிபட்டு வந்தால் குழப்பங்களில் இருந்து விடுபட இயலும்.

இராகு 3 ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். கேது 9 ஆம் இடத்தில் வலுப்பெறுகிறார். அதுவும் சூரியனோடு இணைகிறார். அதனால் அரசு வழித் தொல்லைகளுக்கு ஆட்படலாம். சகோதரவழியில் அனுசரித்துச் சென்றால் சகாயங்களைப் பெறலாம். இந்த நேரத்தில் வாகன மாற்றங்கள், ஊர் மாற்றங்கள், இடமாற்றங்கள் தவிர்க்க முடி யாததாக அமையும். வரும் மாற்றங்கள் பொருத்தமாக இருக்குமா என்பது சந்தேகம்தான். சுயஜாதக ரீதியாக ஆராய்ந்து பார்த்து அதன் பிறகே முடிவெடுப்பது நல்லது.

**இடப புதனின் சஞ்சாரம்**

மே 15 ஆம் திகதி இடப இராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். உங்கள் இராசியைப் பொறுத்தவரை இராசிநாதனாகவும் 10 க்கு அதபதியாகவும் விளங்குபவர் புதன். அப்படிப்பட்டவர் 9 இல் சஞ்சரிக்கும் பொழுது உன்னதமான பலன்களை அள்ளி வழங்குவார். தந்தை வழியில் சுமூகம் ஏற்படும். மனப்பான்மையோடு சில காரியங் முடித்துக்கொடுக்க முக்கிய புள்ளிகள் உங்கள் இல்லம் தேடி வருவர்.

**குதூகலம் தரும் குருப்பெயர்ச்சி**

குருப்பெயர்ச்சி எப்பொழுது வரப்போகிறது என காத்திருந்த உங்களுக்கு ஒரு பொன்னான நாளாக மே 17 ஆம் திகதி அமைந்து விட்டது. ஏன் என்றால் அன்றுதான் குருப்பெயர்ச்சி, குருவின் பார்வை உங்கள் இராசியில் 5 ஆம் பார்வையாகப் பதிகிறது. எனவே, தொட்டகாரியங்களில் வெற்றி கிடைக்கும். தொகை கேட்ட இடத்திலிருந்து வந்துசேரும். சென்ற ஆண்டு ஏற்பட்ட இழப்புகளை இந்த வருடம் ஈடுகட்டுவீர்கள். சிக்கலில் இருந்து விடுபட முக்கிய புள்ளிகள் உதவி செய்வார்கள்.

குருவின் பார்வை 3, 5 ஆகிய இடங்களில் பதிவதால் சகோதர ஒற்றுமை பலப்படும். சந்தான விருத்தி இதுவரை இல்லாத தம்பதியர்களுக்கு இப்பொழுது உருவாகலாம். எந்த நாளையும்இனிய நாளாக மாற்றுகிற குருபகவானை முறையாக கும்பிடுவது நல்லது.

**மிதுன புதனும், இடப சுக்கிரனும்**

மே 31 ஆம் திகதி முதுன இராசியில் புதன் சஞ்சரிக்கப்போகிறார். இதனால்



திகதி சுக்கிரன் வக்ரம் பெறுகிறார். இதன் விளைவாக பெண் வழி பிரச்சினை சிலவும் சந்திக்க நேரிடலாம். பழைய நகைகளை கொடுத்து புதிய நகைகளை வாங்கும் சூழ்நிலை உருவாகலாம். வீட்டில் குடும்ப பிரச்சினைகள் ஏற்படும்பொழுது, சிலவற்றைக் கண்டும், காணாமலும் இருப்பதுதான் நல்லது. இந்தமாதம் சனீஸ்வர வழிபாட்டை முறையாக செய்து வந்தால் சந்தோஷங்கள் கிடைக்கும்.

இம்மாதம் அருகில் இருப்பவர்களை அனுசரித்துச்செல்ல வேண்டிய மாதமாகும். உடல்நிலையில் அதிக அக்கறை செலுத்த வேண்டும். குடும்ப சுமை கூடுகிறதே என்று கவலைப்படுவீர்கள். காரியங்கள் கடைசி நேரத்தில் கைநழுவிப் போகலாம். ஜென்மச் சனியால் மனநிம்மதி இழப்பு ஏற்படாமலிருக்க சனீஸ்வர வழிபாடும், விரதங்களும் உங்களுக்கு கைகொடுக்கும். சுக்கிரனின் வக்ர காலத்தில் கணவன்- மனைவி உறவு பலப்பட விட்டுக்கொடுத்துசெல்வது தான் நல்லது.

### தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும் சகோதர ஒற்றுமை நன்கு பலப்படும்!

லேயே குருப்பெயர்ச்சி நடைபெறகிறது. அந்தக் குருவின் பார்வை உங்கள் இராசியின் மீது பதியப்போகிறது. குரு பார்க்க கோடி நன்மை என்பதால் முதலில் தடை ஏற்பட்ட காரியங்கள் இப்பொழுது தகராறுகள் தானாக விலகும். தர்மம் செய்கின்ற சிந்தனை உருவாகும். ஆலய திருப்பணிக்கும் அள்ளிக் கொடுக்க முன் வருவீர்கள். நீண்டதூரப் பயணங்களால் நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும். சேவை தொழில் வளர்ச்சி மேலோங்கும். வேலை கிடைக்காதவர்களுக்கு, வேலை கிடைக்கும். உத்தியோகத்தில் உயர்வை எதிர்பார்த்து இருப்பவர்களுக்கு, அது கிடைப்பதோடு ஊதிய உயர்வு கிடைக்கும். ஜுன் 9 ஆம்

(தொடரும்)

# முதலீடு செய்ய அழைத்துவிட்டு கடத்திக் கொல்கிறது அரசு

## அரியம் எம்.பி.உரை

(கொழும்பு)

**அரசாங்கம் புலம்பெயர் மக்களை இங்கு வந்து முதலீடுகளை செய்யுங்கள் என கூறிவிட்டு மறுபுறம் அவர்களை கடத்திக் கொலை செய்யும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.**

மட்டக்களப்பு, புதுக்குடியிருப்பு கதிரன் கலைக்கழகத்தின் கதிரவன் சஞ்சிகையின் 10 ஆவது வெளியீட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

வாசிப்பு மனிதனை தூய்மையாக்க வேண்டும் என்றால் வாசிக்கும் வீதம் அதிகமாக இருக்க வேண்டும். கடந்த காலங்களில் மட்டக்களப்பில் பத்திரிகைகள் வாசிக்கும் வீதம் அதிகரித்துள்ளது.

தற்போது ஊடகங்களை பொறுத்தவரையில் அனைவரும் ஒரு ஊடகத்தினை ஆக்கக்கூடியதாக நிலைமை மாறிவிட்டது. எனக்கு கணனி அறிவு இருக்குமானால் நானும் ஒரு இணையத்தளத்தை உருவாக்க முடியும். ஆனால், சிலர் தனது கருத்தை வேறு ஒரு போலி அமைப்பு மூலம் வெளியிடும் நடவடிக்கைகளை சில ஊடகங்கள் வாயிலாக மேற்கொண்டு வருகின்றனர். இது ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாகவுள்ளது.

முகமூடி போட்ட அமைப்புக்களாக அறிக்கை விடுவது அவர்களின் கோழைத்தனத்தை வெளிக்காட்டுகின்றது. சிலர் அறிக்கைகள் விடும்போது தமது பேச்சு மொழியிலேயே அறிக்கை விடுவதால் யார் அதனை செய்கின்றார்கள் என்று இலகுவாக கண்டறிய முடிகின்றது.

அரசியலில் அறிக்கை விடுவதும் ஒரு அரசியல்தான். என்னைப் பொறுத்தவரையில் ஒரு விடயம் பிழையாக இருந்தால் நான் நெஞ்சுத்துணிவுடன் நேரடியாகவே எனது பெயரிலேயே அறிக்கைகளை வெளியிடுவேன்.

நிரந்தரமான ஒரு அரசியல் தீர்வு கிடைக்குமாக இருந்தால் புலம்பெயர்ந்த மக்கள் சுதந்திரமாக முதலீடுகளை மேற்கொள்ளக் கூடியதாக இருந்தால் இங்குள்ள வெளியீடுகளுக்கு பெரும் பங்களிப்பு ஆற்றுவார்கள்.

அண்மையில் லண்டனில் இருந்து வந்த ஒருவர் பெரும் வர்த்தக நிலையம் ஒன்றை யாழில் நிர்மாணித்திருந்தார். அதனை தங்களிடம் தருமாறு பலர் கூறியிருந்தனர். ஆனால், அதனை அவர் மறுத்திருந்தார். அவர் தற்போது எங்கிருக்கின்றார் என்று தெரியாத நிலையுள்ளது. இதுதான் இன்று இலங்கையில் இருக்கக்கூடிய வரலாறாக இருக்கின்றது.

நாங்கள் எமது வரலாறு, பண்பாடு, கலை, கலாசாரம், மொழி ஆகியவற்றை காப்பாற்ற வேண்டுமாகவிருந்தால் அதனை பாதுகாக்கக்கூடிய அரசியல் சக்தியை இனங்கண்டு இந்த அரசியல் சக்தியை பலப்படுத்தினால் மட்டுமே தமிழன் தமிழனாகவும் தமிழ் தமிழாகவும் வாழும் என்று கேட்டுக் கொள்கின்றேன் என்றார். (அ-2)

## தமிழரசுக்கட்சியின் 14 ஆவது தேசிய மாநாடு

(மட்டக்களப்பு)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 14 ஆவது தேசிய மாநாடு எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு மட்டக்களப்பு, அரசடி, வேதநாயகம் மண்டப அமரர். ஜோசப் பரராஜசிங்கம் அரங்கத்தில் நடைபெறவுள்ளது என மட்டக்களப்பு- அம்பாறை இலங்கைத் தமிழரசுக் கட்சி அறிவித்துள்ளது.

இதில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வளர்ச்சிக்காக உழைத்த பெருந்தகைகளை வாழும் போதே பாராட்டும் நிகழ்வும் பொதுக்குழு தீர்மானங்களை வெளியிடுவதுடன் கட்சியின் புதிய செயற்குழு அங்கத்தவர்களின் அறிமுக நிகழ்வும் இடம் பெறவுள்ளது. (அ-7)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

ஆவரங்கால் மேற்கு திருவருள்மிகு ஞானவைரவர் சுவாமி ஆலய அலங்கார உற்சவம் இன்று புதன்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பதினொரு தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

தினமும் முற்பகல் 10.30 மணிக்கு காலை பூசையும் மாலை 6 மணிக்கு மாலைப் பூசையும் நடைபெறவுள்ளது. எதிர்வரும் யூன் மாதம் 2 ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்தோற்சவம் நடைபெறுமென ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (அ-9)

## கொலையாகாத மரணம் விளைவித்த குற்றச்சாட்டுக்கு ஐந்து வருட சிறை

(யாழ்ப்பாணம்)

தனது காதலில் பிரச்சினை ஏற்படுத்தியவரை கொலையாகாத மரணம் விளைவித்த நபருக்கு யாழ்.மேல் நீதிமன்றம் 5 வருட கடூழியச் சிறைத்தண்டனை விதித்துள்ளது.

கடந்த 25.03.2012 ஆம் ஆண்டு கரணவாயில் மாணிக்கம் தவராசா என்பவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டிருந்தார்.

இக்கொலையோடு தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் முதலாம் எதிரியான செல்வரத்தினம் சுரேந்திரன், இரண்டாம் எதிரியான சண்முகம் சதீஸ்வரன் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

இதில் முதலாம் எதிரியான செல்வரத்தினம் சுரேந்திரன் தனது வாக்குமூலத்தில் கந்தப்பு கவிதா என்பவரை 2001 ஆம் ஆண்டு காதலித்ததாகவும் இக் காதல் பிரச்சினையில் முடிவுற்றதனால் எனது வீட்டுக்கு வந்த தனது காதலியின் உறவினர்கள் எனது தாயாரை தாக்கியதோடு என்னைப் பார்த்து உனக்கு நாங்கள் தான் யமன் என கூறி அடித்ததாகவும் கூறியிருந்தார்.

தனது வீட்டுக்கு வந்து அடித்தவர்களின் ஒருவரான மாணிக்கம் தவராசா என்பவர் மறுநாள் 25 ஆம் திகதியில் செல்வரத்தினம் சுரேந்திரன் கடற்கரைக்குச் செல்லும் வழியில் கண்டுள்ளார்.

இதனைப் பயன்படுத்தி குறித்த எதிரி தன்னுடைய துவிச்சக்கரவண்டியினை தவராசா மீது தூக்கி எறிந்ததோடு கடற்கரைக்கு கொண்டு சென்ற மீன் வெட்டும் கத்தியினால் வெட்டியுமுள்ளார்.

இதில் கொலையுண்ட மாணிக்கம் தவராசா என்பவரது கொலை வழக்கு யாழ்.மேல் நீதிமன்றுக்கு மாற்றப்பட்டு தொகுப்புரைகளின் முடிவுகளுக்காக ஒத்திவைக்கப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கினை விசாரணை செய்த நீதிமன்று முதலாம் எதிரியான சுரேந்திரன் என்பவர் பருத்தித்துறை நீதவானுக்கு வழங்கிய குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் மரணம் விளை வித்த குற்றம் நியாயமான சந்தேகங்களுக் கப்பால் நிரூபிக்கப்பட்டு இருப்பதனாலும் கொலையாளி குறித்த நபரினை வேண்டுமென்று கொலை செய்வதற்காக கத்தியினை கொண்டு செல்லவில்லை என்ற காரணத்தினாலும் கொலையாகாத மரணம் விளைவித்த குற்றச்சாட்டாக குறைக்கப்பட வேண்டும் என்பதனாலும் குறித்த நபருக்கு 5 வருட கடூழியச் சிறைத்தண்டனை விதித்ததோடு இரண்டாம் சந்தேக நபருக்குகெதிரான குற்றச்சாட்டு நியாயமான சந்தேகங்கங்களுக்கப்பால் நிரூபிக்கப்படாமையால் விடுதலை செய்யுமாறும் தீர்ப்பளித்தார்.

இவ் வழக்கில் அரச தரப்பில் சட்டத்தரணி திருக்குமரனும் முதலாம் எதிரி சார்பில் சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தாவும் இரண்டாம் எதிரி சார்பில் சட்டத்தரணி கே.பி.எல்.வரதராஜாவும் ஆஜராகி இருந்தனர். (அ-4)

## சிவநகரில் இலகு தவணை அடிப்படையில் 100 உழவு இயந்திரங்கள் வழங்கப்பட்டன

(சிவநகர்)

ஜெயந்திநகர், உருத்திரபுரம், சிவநகர் கிராம அலுவலர் பிரிவுகளின் தெற்குப் பகுதியிலுள்ள கழிவு வாய்க்கால்கள் திருத்தம் செய்வது, இக்கிராம மக்கள் காப்பாற்றப்பட வேண்டியது அவசியம் என கமக்கார அமைப்பினரும் பொதுமக்களும் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் கீதாஞ்சலி நகுலேஸ்வரனிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.


கிளிநொச்சி மாவட்ட விவசாய முற்போக்கு முன்னணி ஏற்பாட்டில் இலங்கை வங்கியின் அனுசரணையுடன் இலகு தவணை அடிப்படையில் விவசாயிகளுக்கு 100 உழவு இயந்திரங்கள் வழங்கும் நிகழ்வு உருத்திரபுரத்தில் அண்மையில் நடைபெற்றது.

இதில் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் உழவு இயந்திரத்தை வழங்கி வைக்கும்போதே மேற்கண்டவாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

அத்துடன் மாதிரிக்கிராமமாக அமைக்க கூடியதான சகல அமைப்புக்களையும் கொண்டமைந்துள்ள சிவநகர் கிராமத்தினை மாதிரிக் கிராமமாக்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர்.

இதற்கு பதிலளித்த கிளிநொச்சி அமைப்பாளர் இது தொடர்பாக ஜனாதிபதியுடனும் உரிய அமைச்சர்களுடனும் கலந்துரையாடி ஆவன செய்வதாக உறுதியளித்தார். (அ-9-254)





குரும்பசிட்டியில் தனியார் கட்டடத்தில் உப அஞ்சல் அலுவலகம் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவ் அஞ்சல் அலுவலகத்தை அஞ்சல் அத்தியட்சகர் ஜெபரட்ணம் நாடாவெட்டி கட்டடத்தை திறந்து வைப்பதையும் உப அஞ்சல் அதிபர் செல்வி.தங்கராஜா நிருதாவிடம் முத்திரை அல்பத்தினை வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 137

1944 ஜூன் 5 ஆம் திகதி பிரிட்டனின் தென்கரையோரத்தில் நேச நாட்டு பயணச்சக்திகளைச் சேர்ந்த 2 இலட்சத்து 87ஆயிரம் நபர்களே இருந்தனர். காலையில் ஏறிய இடங்களிலிருந்து புறப்பட்ட இவர்கள் நாள் முடிவில் பிரிட்டனின் தென்கரையிலிருந்து 50-60 கி.மீ. தொலைவிலிருந்தஆரம்ப வட்டத்திற்கு வந்தனர். இங்கிருந்து இறக்குபடை அணிகள் முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட பத்து மார்க்கங்களில் ஜேனா குறுங்குடாவை நோக்கிச்சென்றன. இறக்கு படையினரோடு கப்பல்கள் செல்ல இழுவைப்படகுகளும் காவல் கப்பல்களும் பாதுகாத்து வகை செய்தன. ஜூன் 6 ஆம் திகதி பொழுது புலர்ந்ததிலிருந்து விண்ணில் சண்டை விமானங்களும் பக்கவாட்டுப் பகுதிகளில் கப்பல் எதிர்ப்பு தற்காப்பின் பெரும் சக்திகளும் இறக்குபடை அணிகளை மூடிப் பாதுகாத்தன. பாசிஸ்டுகளிடம் போதுமான அக்கறை இல்லாமையும் அவர்களின் திருப்தியற்ற வேவுபார்த்தலும் இறக்கு படையினர் தங்கு தடையின்றி ஜலசந்தியைக் கடக்க உதவின. "லாமன்ஷ்வழியாக வடக்கு பிரான்சிலிருந்த படையிறக்கு பிரதேசத்திற்கு 5 ஆயிரம் நேச நாட்டுக் கப்பல்கள் கடக்கவிருப்பதைப்பற்றி ஜேர்மனிய உயர்மட்ட படைத்தலை மைக்கோ மேற்கு படைத் தலைமையகத்திற்கோ அல்லது ரோம்மலுக்கோ, ருண்டிஷ்டேட்டுக்கோ ஒருவருக்குமே தெரியாது" என்று வேர்மஹ்ட் உயர்மட்டப் பிரதான படைத் தலைமையின் நடவடிக்கைகளை வழி நடத்துவதற்கான தலைமையகத்தின் துணைத் தலைவன் வர்லிமோன்ட் தன் நினைவுக்குறிப்புகளில் எழுதினான்.

ஜூன் 6ஆம் திகதி இரவு சுமார் 2 மணிக்கு, படையிறக்கத்தின் முன்னணைப்பொழுதில் வான் இறக்கு படையினரின் படையிறக்கம் தொடங்கியது. இதில் அமெரிக்க வான் படையைச்சேர்ந்த 1662 விமானங்களும் 512 கிளைடர் விமானங்களும் பிரிட்டிஷ் வான் படையைச் சேர்ந்த 733 விமானங்களும் 335 கிளைடர் விமானங்களும் பங்கேற்றன. எதிரி எதிர் நடவடிக்கைகளை மேற்கொள்ளாதிருந்தாலும்கூட வான் படையிறக்கம் முற்றிலும் ஒழுங்காக நடைபெறவில்லை. 101வது அமெரிக்க வான் இறக்குபடை டிவிஷன், குறிப்பிட்ட பிரதேசத்திலிருந்து 40 கி.மீ வரை சிதறிப்போயிருந்தது, தரையிறங்கும்போது தன் இராணுவ மற்றும் ஆயுத தளவாடங்களில் பாதிக்கும் மேற்பட்டதை இழந்தது. 6-வது பிரிட்டிஷ் வான் இறக்குபடை டிவிஷன் இறங்கி மூன்று மணி நேரம் கழித்து பாசிச ஜேர்மனியத் துருப்புகளின் தாக்குதலுக்கு உள்ளானது. மொத்தத்தில் வான் இறக்குபடையின் துருப்புகள் திட்டமிட்ட கடமைகளை நிறைவேற்றி, கடல் இறக்குபடை இறங்கவும் தாக்குமுனையைக் கைப்பற்றவும் கணிசமான உதவியளித்தன.

ஜூன் ஆறாம் திகதி காலை பீரங்கிப்படைப்படை மற்றும் விமானப்படையின் பலத்த பூர்வாங்கத் தாக்குதலுக்குப்பின்- இதில் பாசிச ஜேர்மனியத் துருப்புகளின் தற்காப்பு அடக்கப்பட்டது-கடல் இறக்கு படையின் முதல்படை வரிசைப் படையிறக்கம் ஆரம்பமாகியது. இக்கட்டத்திலும் எல்லாமே சுமுகமாக இருக்கவில்லை: இறக்குபடை கப்பல்கள் நிலைநாட்டப்பட்ட இராணுவ ஒழுங்கு முறையை கடைப்பிடிக்கவில்லை. படகுகளும் தானியங்கித் தோணிகளும் ஒன்றோடொன்று மோதின. இவற்றில் சில கண்ணிவெடிகளிலிருந்து தூய்மைப்படுத்தப்பட்ட மார்க்கங்கிளிலிருந்து விலகி கண்ணிவெடிகளில் பட்டு வெடித்தன, கண்ணிவெடி அகற்றும் குழுக்களால் படையிறக்க இடங்களில் இருந்த தடைகளை முற்றிலுமாக ஒழித்துக்கட்ட இயலவில்லை. மேற்கூறிய தடைகளும் மற்ற பல இடர்பாடுகளும் இருந்தபோதிலும் திடீர்த் தாக்குதலும் விண்ணிலிருந்த ஆதிக்கமும் எண்ணிக்கை ரீதியாக விஞ்சியிருந்ததும், கிட்டத்தட்ட தடையின்றி கரையிறங்க நேச நாடுகளுக்கு உதவின.

நாளின் இறுதியில் நார்மாண்டி கரையில் 1 இலட்சத்து 56ஆயிரத்துக்கும் அதிகமானோர் இறக்கப்பட்டனர். 900 டாங்கிகள், கவச மோட்டார்கள், 600 பீரங்கிகள் ஏராளமான போக்குவரத்து சாதனங்கள் கொண்டு செல்லப்பட்டன.

ஜூன் 12 ஆம் திகதி வாக்கில் நேச நாட்டுத்துருப்புகள் 80 கி.மீ. அகலமும் 13-18 கி.மீ. நீளமும் உடைய தாக்குமுனையைக் கைப்பற்றின. ஜூன் 30 ஆம் திகதி வாக்கில் இதன் நீளம் 100 கி.மீ. ஆகவும் ஆழம் 20-40 கி.மீ.ஆகவும் அதிகப்படுத்தப்பட்டது.

நார்மாண்டியில் இருந்த பயனறி படைகளின் மொத்த எண்ணிக்கை 8 இலட்சத்து 75 ஆயிரத்துக்கும் அதிகமாயிருந்தது. இவற்றிற்காக 1இலட்சத்து 48 ஆயிரத்து 803 போக்குவரத்து வாகனங்களும், 5 இலட்சத்து 70 ஆயிரத்து 505 டன் சரக்குகளும் அனுப்பட்டபட்டன. தாக்குமுனையில் போடப்பட்ட 23 விமானத் தளங்களில் நேசநாட்டவரின் விமானப் படையின் கணிசமான பகுதி இறங்கியது.

(தொடரும்)

நார்மாண்டி நடவடிக்கையின் ஆரம்பத்தில் சக்திகளின் சமநிலை மேலே பட்டியலில் காட்டப்பட்டுள்ளது

| சாதனங்களும் சக்திகளும் | நேசநாட்டுப் பயணப்படைச் சக்திகள் | பாசிச ஜேர் மனிதுருப் புகள் | விகிதம் |
|---|---|---|---|
| 1.காலாட் படையின் எண்ணிக்கை | 16,00,000 | 5,26,000 | 3:1 |
| 2.டாங்கிகளும் தானியங்கிப் பீரங்கி அமைப் புகளும் | 6,000 | 2,000 | 3:1 |
| 3.சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகள் | 15,000 | 6,700 | 2.2:1 |
| 4.போர்விமானங்கள் | 10,859 | 160 | 61.4:1 |
| 5.பிரதான ரக போர்க் கப்பல்கள் | 114 | 54 | 2.1:1 |




கனேடியத்துருப்புகள் ஃபிரான்ஸில்-1944



பிரான்ஸின் படைகள் தத்தமக்குரிய தபால்களைப் பெற்றுக்கொள்கின்றனர்-1944

## தீர்மானகரமான வெற்றிகளின் ஆண்டு



ஜேர்மனியப்போர்க்கைதிகள் பிரான்ஸின் படைகளால் கொண்டு செல்லப்படுகின்றனர்

# பொன்சேகா வெளியே வந்தாலும் நாடாளுமன்றம் செல்லமுடியாது

## அரச அதிகாரி தகவல்

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா நாடாளுமன்ற உறுப்பினராகவோ, மாகாண சபை உறுப்பினராகவோ பதவியேற்க முடியாது என்று சட்டமா அதிபர் திணைக்களத்தின் தகவல்தரவல்ல உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி சரத் பொன்சேகாவுக்கு பொது மன்னிப்பு அளித்துள்ளார்.

ஆனாலும் இலங்கையின் அரசியலமைப்பின் படி இரண்டு ஆண்டுகளுக்கு மேல் சிறைத்தண்டனை பெற்றவர்கள் ஏழு ஆண்டுகளுக்கு தேர்தலில் போட்டியிடவோ அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடவோ முடியாது.

பொது மன்னிப்புகள் மூலம் சரத் பொன்சேகாவின் சிறைவாசம் அனுபவிக்கும் காலத்தை மட்டுமே குறைத்துள்ளது.

அவரது சிறைத்தண்டனை குறைக்கப்படவில்லை. அவரது சிறைத்தண்டனைக்காலம் குறைக்கப்பட்டால் தான் அரசியலில் ஈடுபட முடியும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை சரத்பொன்சேகாவின் குடியியல் உரிமைகளை முழுமையாக மீளப் பெறுவதற்கு அரசாங்கத்துடன் தொடர்ந்து பேச்சு நடத்தப்போவதாக ஜனநாயக தேசிய கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

இரண்டு ஆண்டுகளுக்கு மேல் சிறைத் தண்டனை பெற்று குடியியல் உரிமைகளை இழந்தாலும் கூட அவற்றை மீள வழங்கும் வகையில் ஒருவருக்கு முழுமையான பொது மன்னிப்பு அளிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உள்ளது.

சந்திரிகா ஆட்சிக்காலத்தில் நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டில் சிறைவாசம் அனுபவித்த தற்போதைய அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்கவுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இத்தகைய பொது மன்னிப்பை வழங்கியிருந்தார். ஆனால் அத்தகைய முழுமையான பொது மன்னிப்பு சரத் பொன்சேகாவுக்கு வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

## கொமர்ஷல் வங்கியினால் மாணவர்கள் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

கொமர்ஷல் வங்கியில் அருணலு சிறுவர் கணக்கினை பேணி வரும் மாணவர்களில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து பாடசாலைகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு விருது வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 30 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ். ஸ்ரான்லி வீதிக்கிளை வரவேற்பு மண்டபத்தில் நடைபெறவுள்ளது என யாழ்ப்பாணம் கொமர்ஷல் வங்கி கிளை முகாமையாளர் அறிவித்துள்ளார். (அ-7)

# இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 27 இலங்கை மீனவர்கள் விடுதலையாகினர்

## கடற்றொழில் அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 27 இலங்கை மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களின் ஐந்து படகுகளும் விடுவிக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் அமைச்சு குறிப்பிடுகின்றது. ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதி தமிழ் நாட்டில் கைது செய்யப்பட்ட இலங்கை மீனவர்களே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கபில புத்தா, பொடி மல்லி, நிகினி, மினோலி-6, வருணி -2 ஆகிய படகுகளில் கடலுக்குச் சென்ற குறித்த மீனவர்கள் விரைவில் நாட்டிற்கு அழைத்து வரப்படுவார்கள் என கடற்றொழில் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதன்படி இந்தியாவில் 21 இலங்கை மீனவர்கள் மாத்திரமே தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் அவர்களின் நான்கு படகுகளும் இந்திய பாதுகாப்பு அதிகாரிகளின் பொறுப்பில் உள்ளதாக கடற்றொழில் அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (அ-2)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## இளவேனிற்கால வேப்பம்பூ, இலுப்பம்பூக்களின் மருத்துவக்குணங்கள்

இயற்கை தரக்கூடிய மருத்துவ தாவரங்களும் அவற்றின் பூக்கள், கனிகள், விதைகள் போன்ற பாகங்களும் கிடைக்கும் பருவகாலங்கள் மனிதனுக்கு அப்பருவகாலங்களில் ஏற்படும் நோய்களை தணிப்பது அவ் இயற்கையின் வரப்பிரசாதமாகும்.

இதனால் தான் மூலிகைகளை இனங்காணும் போதோ அல்லது அதனுடைய ப்ரம்பலை ஆராயும் போதோ பூக்கும் காலங்கள், காய்க்கும் காலங்கள், பழம் தரும் காலங்கள் என்பன கட்டாயமாக அவதானிக்கப்பட வேண்டும்.


இளவேனிற் காலமாகிய சித்திரை, வைகாசி மாதங்களில் இலுப்பம் பூக்களும் வேப்பம் பூக்களும் மரங்கள் நிறைய பூத்திருப்பதை காணக்கூடியதாக இருக்கின்றது.

சித்திரை, வைகாசி மாதங்களில் முத்தாதுக்களில் கபமானது அதிகரிக்கின்றது. இதனால் மனித உடலில் கப சம்பந்தமான நோய்கள் ஏற்பட வாய்ப்பு உருவாகின்றது. எனவே அதை சமனிலையில் கொண்டு வர கைப்பு சுவையுடைய உணவுகள் சிறந்தவையாகின்றன.

இதில் முதலாவதாக வேப்பம்பூ எமது மக்களின் மூலிகை உணவில் கட்டாயம் இடம்பெற வேண்டும். வேப்பம் பூவானது அதிகரித்த கபத்தை சமப்படுத்துவதுடன் வேப்பம் பூவிற்கு இரத்தத்தை சுத்திகரிக்கும் தன்மை, கிருமிகளை அழிக்கும் தன்மை, கொலஸ்ரோலை கட்டுப்படுத்தும் தன்மை ஆகியவை உண்டு. அறுசுவை உணவிலும் கட்டாயமாக கைப்பு சுவை இடம்பெறுதல் அவசியமாகும். இதனால் வேப்பம்பூ சேர்த்தல் அவசியமாகின்றது.

**வேப்பம்பூ**

**Botanical Name-**
***Azadirachta indica***
**Family- Meliaceae**



வேப்பம் பூவானது நோய் எதிர்ப்பு சக்தியை பெருக்கும் தன்மையுடையது. குடலில் உள்ள புழுக்களை அகற்றுவதற்கு வேப்பம் பூ பயன்படும்.

கீழ்வரும் முறைகளில் வேப்பம் பூவினை மூலிகை உணவாக பயன்படுத்தலாம்.

***வேப்பம் பூ பச்சடி***

தேவையான பொருட்கள்
வேப்பம் பூ-தேவையான அளவு
தேங்காய்- ஒருபாதி
பச்சைமிளகாய்- 5
சின்னவெங்காயம் பொடி பொடியாக அரிந்தது 4 கைபிடி
கறிவேப்பிலை- சிறிதளவு
கடுகு -ஒரு தேக்கரண்டி
உப்பு- தேவையானளவு
மாங்காய்- ஒரு பாதி
நெய்-3 தேக்கரண்டி
இஞ்சி- சிறுதுண்டு

தேங்காயை துருவி நன்கு அரைத்து எடுத்து கொள்ளவும். மாங்காயையும் பொடியாக சுரண்டி கொண்டு வேப்பம் பூவை காம்பு நீக்கி எடுத்து கொள்ளவும். இஞ்சிக்கிழங்கை தோல் சீவி மிளகாயை குறுகலாக அரிந்து எல்லாவற்றையும் கலந்து தேவையான அளவு சிறிது உப்பு சேர்த்து கடுகையும் கறிவேப்பிலையையும் நெய்யில் தாளித்து கலந்து கொள்ளவும்.

***வேப்பம் பூ பொடி***

காய்ந்த வேப்பம் பூ-ஒரு கைபிடி
கொத்தமல்லி- ஒரு கைபிடி
மிளகாய்-5
மிளகு-1/4 தேக்கரண்டி
பெருங்காயம்-ஒரு சிறுதுண்டு

மேலே கூறிய பொருட்களை நன்கு உலர்த்தி பொடியாக அரைத்து கலந்து சோற்றுடன் நல்லெண்ணெய் கலந்து உண்ண வயிற்றிலுள்ள பூச்சிகள் வெளியேறி குடல் சுத்தமாகும். நீரிழிவு நோய் உள்ளவர்கள் இப்பொடியில் ஒரு தேக்கரண்டி உண்ண நல்ல பயன் கிடைக்கும்.

***வேப்பம் பூ ரசம்***

வேப்பம் பூ- ஒரு கைபிடி
புளி-சிறு எலுமிச்சம் காயளவு
தக்காளி -2
காய்ந்த மிளகாய்-3
வெள்ளைப்பூடு-6 பல்லு
சீரகம்-1/2 தேக்கரண்டி
மிளகு-1/4 தேக்கரண்டி
கறிவேப்பிலை-சிறிதளவு
மஞ்சள்பொடி-சிறிதளவு
உப்பு -தேவையானளவு
தேங்காய்ப்பால்- 1/4 கப்

முதலில் புளியை உப்புடன் நீரில் ஊறப்போடவும். ஊறியதும் கரைத்து வடிகட்டவும். அதில் மஞ்சள் பொடி போடவும். அம்மியில் சீரகம், மிளகு. பூண்டு வைத்து கரகரப்பாக அரைத்து புளியில் போடவும். வாணலியில் நல்லெண்ணெய் ஊற்றி கடுகு, மிளகாய், போட்டு கடுகு வெடித்து வரும் சமயம் வேப்பம் பூவை போட்டு வதக்கவும். பின்னர் தக்காளியை துண்டுகளாக அரிந்து போட்டு வதக்கவும். கரைத்து வைத்துள்ள புளிக் கரைசலை ஊற்றி தாளிக்கவும். ரசம் சற்று கொதி வந்ததும் கறிவேப்பிலை, மல்லி, இலையை நசுக்கி போட்டு தேங்காய்ப்பால் ஊற்றி இறக்கி பரிமாறவும்.

வேப்பம்பூ ரசமானது கொலஸ்ரோலை கட்டுப்படுத்துவதுடன் சளி. இருமல் போன்ற அவஸ்தைகளுக்கும் சிறந்ததாகும். (தொடரும்)

திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர் சித்த மருத்துவத்துறை
யாழ். பல்கலைக்கழகம் கைதடி

# கல்வியியலாளர் சமூகத்தை அரசாங்கம் மதிக்கவில்லை

## பல்கலை. ஆசிரியர்கள் சங்கங்களின் சம்மேளனம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

கல்வியியலாளர் சமூகத்தை அரசாங்கம் மதிக்கவில்லை எனவும் பாடசாலை முதலாம் வகுப்புக்கு மாணவர்களை சேர்ப்பதில் தமக்கு சிறப்புரிமை வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை அரசாங்கம் நிறைவேற்றவில்லை எனவும் அண்மையில் இடம்பெற்ற சில சம்பவங்கள் தொடர்பாக பல்கலைக்கழக விரிவுரையாளர்களிடம் மன்னிப்பு கோரப்படவில்லை எனவும் பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கங்களின் சம்மேளனம் குற்றம் சுமத்தியுள்ளது.

முதலாம் வகுப்பிற்கு மாணவர்களை இணைப்பதில் சிறப்புரிமை வழங்குவதற்கு சம்மதம் தெரிவித்த கல்வி அமைச்சின் செயலாளருடன் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் கலந்துரையாடினர்.

எனினும் விரிவுரையாளர்களை அங்கிருந்து வெளியேறுமாறு அமைச்சின் செயலாளர் கோரியதாகவும் விரிவுரையாளர்கள் துரத்தப்பட்டதாகவும் மேற்படி சங்கத்தின் பேச்சாளர் மஹிம் மெண்டிஸ் கூறினார்.

பல்கலைக்கழக ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படக் கூடாது என சிலர் கூறுகின்றனர். ஆனால், ஏனைய அரசாங்க உத்தியோகத்தர்களைப் போன்று பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கு மருத்துவ திட்டம், போக்குவரத்து படி, அல்லது குறைந்த வட்டியிலான வீட்டுக்கடன் என்பன வழங்கப்படுவதில்லை. பி.எச்.டி. பட்டம் கொண்ட முதலாம் தர சிரேஷ்ட பல்கலைக்கழக விரிவுரையாளருக்கு அடிப்படைச் சம்பளமாக 48 ஆயிரம் ரூபா வழங்கப்படுகிறது. இது போதுமானதல்ல என அவர் தெரிவித்தார்.

நாட்டின் அபிவிருத்திக்கு கல்வி மிக முக்கியமானதாகும். கல்வியியலாளர் சமூகத்திற்கு அரசாங்கம் முன்னுரிமை அளிக்காவிட்டால் நாட்டைகடவுள்தான்காப்பாற்றவேண்டும் எனவும் கூறினார். (அ-2)

# இசற் புள்ளி வழக்கு முடியும் வரை மீள்மதிப்பீட்டு பெறுபேறு வெளியாகாது

## கல்வி அமைச்சர் பந்துல தெரிவிப்பு

(கொழும்பு)

இசற் புள்ளி தொடர்பான நீதிமன்ற வழக்கு முடிவடையும் வரை க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் விடைத்தாள் மீள் மதிப்பீட்டு பெறுபேறுகளை வெளியிட வேண்டாம் என பரீட்சைகள் திணைக்களத்தை சட்டமா அதிபர் கோரியுள்ளதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

சுமார் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் பேர் விடைத்தாள் மீள் மதிப்பீட்டிற்கு விண்ணப்பித்தனர். இம் மீள்மதிப்பீடுகள் முடிவடைந்துள்ள போதிலும் சட்டமா அதிபரின் ஆலோசனை காரணமாக பெறுபேறுகளை வெளியிட முடியவில்லை என அமைசச்ர் கூறியுள்ளார்.

ஆசிரியர் தொழிற்சங்கமொன்றும் மாணவர்கள் சிலரும் இம்முறை இசற் புள்ளிகள் தொடர்பாக வழக்குத் தொடுத்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)




★ 1430- ஜோன் ஒஃப் ஆர்க் பிரான்சில் பேர்கண்டியரினால் கைது செய்யப்பட்டார்.

★ 1568-நெதர்லாந்து ஸ்பெயினிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.

★ 1805-நெப்போலியன் பொனபார்ட் இத்தாலியின் மன்னனாக முடிசூடினான்.

★ 1813-தென்னமெரிக்க விடுதலைப் போராட்டத் தலைவர் சிமோன் பொலிவார் வெனிசுவேலாவின் முற்றுகைக்குத் தலைமை வகித்துச் சென்று விடுவிப்பாளர் எனத் தன்னை அறிவித்தார்.

★ 1846-மெக்சிக்கோ ஐக்கிய அமெரிக்கா மீது போரை அறிவித்தது.

★ 1865-வோஷிங்டன் டிசியில் அமெரிக்க உள்நாட்டுப் போர் முடிவுற்றமை கொண்டாடப்பட்டது.

★ 1915-முதலாம் உலகப் போர்: இத்தாலி ஆஸ்திரியா, ஹங்கேரி மீது போரை அறிவித்தது.

★ 1929-மிக்கி மவுசின் முதலாவது பேசும் கார்ட்டூன் கார்னிவல் கிட் வெளிவந்தது.

★ 1949-ஜேர்மன் கூட்டாட்சி குடியரசு அமைக்கப்பட்டது.

★ 1951-திபெத்தின் விடுதலைக்கான 17 அம்ச உடன்பாட்டில் திபெத்தியர்கள் கட்டாயமாகக் கைச்சாத்திட வைக்கப்பட்டார்கள்.

★ 1958-ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது செய்மதி எக்ஸ்புளோரர் 1 தனது பூமியுடனான தொடர்பை இழந்தது.

★ 1998-புனித வெள்ளி உடன்பாட்டிற்கு ஆதரவாக வட அயர்லாந்து மக்களில் 71 சதவீதத்தினர் வாக்களித்தனர்.

**பிறப்புக்கள்**

★ 1707-கரோலஸ் லின்னேயஸ், தற்கால வாழ் சூழலியலின் முன்னோடி (இ.1778)

★ 1951-அனத்தோலி கார்ப்பொவ், ரஷ்ய சதுரங்க வீரர்

**இறப்புக்கள்**

★ 1906-ஹென்ரிக் இப்சன் நவீன நாடக இலக்கியத்தின் தந்தை (பி.1828)

★ 1997-அல்பிரட் ஹேர்ஷ்லி, நோபல் பரிசு பெற்றவர் (பி.1908)

**சிறப்பு நாள்**

★ உலக ஆமை தினம் (World Turtle Day)



★ 1920-ஜெய்ப்பூர் மகாராணி காயத்திரிதேவியின் பிறந்த தினம் (இ.2009)

# பொன்சேகா விடுதலை மகிழ்ச்சியளிக்கின்றது

## சுமந்திரன் எம்.பி.கூறுகிறார்



(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா விடுதலை செய்யப்படுவது சிறந்த நடவடிக்கையாகும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

பொன்சேகாவை விடுதலை செய்யக் கோரி ஏற்கனவே கூட்டமைப்பு அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்திருந்ததாக கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

ஜெனரல் சரத் பொன்சேகா அரசியல் கைதியாக இருந்த காரணத்தினால் அவரை விடுதலை செய்வதையிட்டு நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை கொழும்பு சிறைச்சாலையில் உண்ணாவிரதம் மேற்கொண்டு வரும் தமிழ் அரசியல் கைதிகளை சந்தித்து அவர்களின் கருத்துக்களை கேட்டறிந்து கொண்டதாக தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் அனைத்து அரசியல் தமிழ் கைதிகளையும் அரசாங்கம் விடுதலை செய்ய வேண்டுமென வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(அ-2)

# ஆசிய மெய்வல்லுநர் போட்டிகள் இலங்கையில் இடம்பெறாது

## ஏசியன் மெய்வல்லுநர் சம்மேளனம் தெரிவிப்பு

(கொழும்பு)

ஆசிய கனிஷ்ட நிலை மெய்வல்லுநர் போட்டிகளை அடுத்த மாதம் இலங்கையில் நடத்துவதில்லை என்று ஏசியன் மெய்வல்லுநர் சம்மேளனம் தீர்மானித்துள்ளது.

முக்கியம் வாய்ந்த இந்த விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் ஜுன் 9 முதல் 12 வரை இடம் பெறவிருந்தன.

இலங்கை மெய்வல்லுநர் சம்மேளனத்தின் புதிய உறுப்பினர்கள் தொடர்பில் சர்வதேச மெய்வல்லுநர் சம்மேளனத்துக்கு உரிய தகவல் வழங்கப்படாமையே இதற்கான காரணம் என்று கூறப்படுகின்றது.

ஏற்கனவே இந்தப் போட்டிக்காக 65 மில்லியன் ரூபாய்கள் ஒதுக்கிடப்பட்டுள்ளதாக விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தாநந்த அலுத்கமகே தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ-2)

# பிரச்சினையாக உருவெடுக்கும் வடக்கு படைவிலக்கல் விவகாரம்

இந்திய நாடாளுமன்றக்குழுவின் பயணத்தை அடுத்து, வடக்கில் இருந்து படைகள் விலக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் மீண்டும் வலுப்பெறத் தொடங்கியுள்ளன. விடுதலைப் புலிகளுக்கு எதிரான ,போர் முடிவுக்கு வந்து, மூன்று ஆண்டுகள் முடிந்துவிட்டன.



ஆனாலும், வடக்கிலும் கிழக்கிலும் நிலை கொண்டுள்ள படையினரின் எண்ணிக்கை குறைக்கப்படவோ, பொது மக்களின் இயல்பு வாழ்க்கையில் அவர்களின் தலையீடுகள் குறைக்கப்படவோ இல்லை. இந்திய நாடாளு மன்றக் குழுவின் பயணத்தின் போது வடக்கிலுள்ள மக்களால் இது குறித்து விசனம் தெரிவிக்கப்பட்டிருந்தது. தாம் எங்கு சென்றாலும் படையினர் தம்மைக் கண்காணிப்பதாகவும், எல்லா விடயங்களிலும் அவர்கள் தலையிடுவதாகவும் அவர்கள் குறைபட்டுக்கொண் டுள்ளனர். விடுதலைப்புலிகளுக்கு எதிரான நீண்ட போரில்- கிட்டத்தட்ட 3 தசாப்தங்களான- படையினர் தமிழ் மக்களுடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்ளவோ அல்லது நட்புடன் பழகவோ இல்லை. தமிழ் மக்களை அவர்கள் அடிமைகள் போன்றே நடத்தினர். மிருகங்களை விடவும் கேவலமாக வதைத்தனர். இதையெல்லாம் தமிழ் மக்களால் இலகுவில் மறந்துவிடமுடியாது. அதேபோலவே படையினரின் நடவடிககைகள் தாக்குதல்களால் பாதிக்கப்பட்டவர்களாலும் அதை இலகுவில் மறக்க முடியாது. இப்படியானதொரு சூழலில் படையினரின் அதிகரித்த தலையீட்டை அவர்கள் ஒரு தொந்தரவாகவே, தமது இயல்பு வாழ்வுக்கு குறுக்கே நிற்கும் தடையாகவே கருதுகின்றனர்.

மீளவும் புலிகள் வந்துவிடுவர் என்றும், புதிய கிளர்ச்சி உருவாவதைத் தடுக்கவே படையினர் வடக்கில் நிலை கொண்டுள்ளதாகவும் அரசாங்கம் நியாயம் கற்பிக்கிறது. தெற்கில் ஒன்றுக்கு இரண்டு ஆயுதக் கிளர்ச்சிகள் ஏற்பட்டன. ஆனாலும், அதற்குப்பின்னர் இந்தளவுக்குப் பாரிய படைக்குவிப்புகள் அங்கு இருக்கவில்லை. வடக்கிலும் கிழக்கிலும் தான் இந்தநிலை. அதிலும் குறிப்பாக வடக்கில் படைச்செறிவு மிகமிக அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை இராணுவத்தின் பெரும் பாலான படையினரும், படைப்பிரிவு

**நன்றி: இணையம்**

களும் வடக்கில்தான் நிலை கொண் டுள்ளன.

முன்னர், இருந்ததைவிட மிகக் குறைந்தளவு படையினர்தான் வடக்கில் நிலைகொண்டுள்ளனர் என்று இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய கூறியுள்ளார்.

ஆனால், வடக்கில் இருந்த ஒரே ஒரு டிவிசன் மட்டும்தான், அதுவும் அதிரடிப்படைப் பிரிவு என அழைக்கப்பட்ட அரை நிலை டிவிசன் ஒன்று தான் இதுவரை, வடக்கில் இருந்து தென் பகுதிக்கு நகர்த்தப்பட்டுள்ளது. மீதமுள்ள எல்லா டிவிசன்களும் வடக்கிலும் கிழக்கிலும்தான் உள்ளன. வடக்கில் யாழ்ப்பாணம், வன்னி, கிளிநொச்சி, முல்லைத்தீவு என்று 5 படைத் தலைமையகங்கள் உள்ளன. இவை தவிர கிழக்கில் ஒன்றும், தெற்கில் ஒன்றும் படைத் தலைமையகங்கள் இருக்கின்றன.

மொத்தமுள்ள ஆறு இராணுவ தலைமையகங்களில் ஐந்தும் வடக்கு, கிழக்கில்தான் நிலை நிறுத்தப்பட்டுள்ளன.

இலங்கை இராணுவத்தில் 11,12, 21,22,23,51,52,53,54,55,56,57,58, 59,61,61,63,64,65,66,67,68 என்று மொத்தம் 22 டிவிஷன்கள் மற்றும் அதிரடிப்படைப்பிரிவுகள் உள்ளன. இவற்றில் 11,12,62-வது டிவிஷன்கள் தவிர மீதமுள்ள அனைத்துமே வடக்கிலும் கிழக்கிலும்தான் நிலை கொண்டள்ளன. இலங்கையின் மொத்தப்பரப்பளவில் கிட்டத்தட்ட நான்கில் ஒரு பங்குள்ள இந்த இரு மாகாணங்களிலும் இலங்கை இராணுவத்தின் மொத்தமுள்ள 6 படைத்தலைமையகங்களில் 5உம் மொத்தமுள்ள 22 டிவிஷன்களில் 19 உம் நிலை கொண்டுள்ளன.

சனத்தொகை அடர்த்தி என்ற வகையில் பார்த்தால், இந்த இரு மாகாணங்களிலும் 25 இலட்சம் மக்கள் வாழ்கின்றனர்.



சுமார் 2கோடி மக்கள் தொகை கொண்ட நாட்டின், வெறும் 12.5 வீத மக்கள் வாழும் வடக்கு, கிழக்கில் இலங்கை இராணுவத்தின் 80 வீதமான படைப்பிரிவுகள் நிலை கொண்டுள்ளன. இந்த நிலையில்தான், போரின் போது இருந்ததைவிட அரைப்பகுதியாக படையினரின் எண்ணிக்கையைக் குறைத்துள்ளதாக இராணுவத் தரப்பு நியாயம் கூறியுள்ளது.

யாழ்ப்பாணத்தில், தான் பதவியேற்றபோது 26 ஆயிரம் படையினர் இருந்தனர் என்றும், தற்போது, 16 ஆயிரம் படையினரே உள்ளதாகவும் கூறியுள்ளார் யாழ் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க.

இது சரியான கணக்கா என்பது தெரியவில்லை. ஏனென்றால், யாழ்ப்பாணத்தில் படையினரின் எண்ணிக்கையை அரைவாசியாக குறைத்துள்ளதாக இராணுவத் தளபதி கூறியுள்ளார்.

இராணுவத் தளபதி கூறியுள்ளது போலவே, யாழ்ப்பாணத்தில் படைக் குறைப்பு இடம் பெற்றுள்ளது என்று வைத்துக் கொண்டாலும் கூட அங்கு பொது மக்களின் இயல்பு வாழ்வில் படையினரின் தலையீடுகள் குறைந்ததாகத் தெரியவில்லை.

முல்லைத்தீவின் மக்கள் தொகை வெறும் 52 ஆயிரம்தான். இங்கு 59,64,68, என மூன்று டிவிஷன் படையினர் உள்ளனர். கிட்டத்தட்ட 24 ஆயிரம் படையினர் -2.5 பொதுமக்களுக்கு 1 படையினர் என்ற விகிதத்தின் அடிப்படையில் நிலை கொண்டுள்ளனர்.

இந்திய நாடாளுமன்றக் குழுவினர் வடக்கில் படைக்குறைப்பு குறித்து ஜனாதிபதியிடம் பேசியிருந்தனர். ஆனால், அதற்கு அவர் இணங்கவில்லை. நாட்டின் ஏனைய பகுதிகளைப்போன்றுதான் வடக்கிலும் படையினர் நிலை கொண்டள்ளதாகக் கூறியதுடன், வடக்கில் இருந்து அகற்றும் படையினரை இந்தியாவுக்கா அனுப்பமுடியும் என்றும் கேள்வி எழுப்பியிருந்தார். நாட்டின் ஏனைய பகுதிகளைப் போன்றே வடக்கிலும் படைகளை நிறுத்தியுயள்ளதாக அவர் கூறினாலும், ஏனைய பகுதிகளில் உள்ள நிலைக்கும் வடக்கில் உள்ள நிலைக்கும் விததியாசம் உள்ளது. நாட்டின் பிற பகுதிகளில் பொதுமக்கள் மத்தியில் - அவர்களின் குடியிருப்புகளுக்கிடையே- முகாம்களோ, காவலரண்களோ இல்லை. பொதுமக்களின் காணிகள், வீடுகளை அபகரித்து படைத்தளங்கள் அமைக்கப்படவில்லை. பொதுநிகழ்வுகளிலோ, சிவில் நிர்வாகத்திலோ இராணுவத் தலையீடுகள் இல்லை.

ஆனால், இவையெல்லாம் வடக்கில் உள்ளன. வடக்கில் தமிழர்களின் பொருளாதார வளம்மிக்க பகுதிகள் இராணுவத் தளங்களுக்காக அபகரிக்கப்பட்டுள்ளன.

வலி-வடக்கில் தொடங்கிய இந்த ஆக்கிரமிப்பு இன்று புதுமாத்தளன், முள்ளிவாய்க்கால் வரை வந்து நிற்கிறது.

இங்கெல்லாம் பாரம்பரியமாக குடியிருந்த மக்கள் மீளக்குடியேற அனுமதிக்க முடியாது என்று உறுதியாகவே கூறப்பட்டுள்ளது. இதற்கு நியாயம் கோட்கப்போனால், புலிகள் தடைசெய்தபோது சும்மாதானே இருந்தீர்கள் என்று அரசதரப்பு பதில் கேள்வி தொடுக்கிறது. அப்படியானால், புலிகள் அன்று செய்ததும் இராணுவத் தரப்பு இன்று செய்வதும் ஒன்றா என்ற கேள்வி எழுகிறது. புலிகள் இவற்றைச் செய்தபோது அதைப் பயங்கரவாதம் என்று கூறிய அரசாங்கம் அதையே இன்று தானும் செய்கிறது. இந்தியக்குழு வடக்கே முழுமையான படை விலக்கத்தை வலியுறுத்தவில்லை. பொதுமக்கள் மத்தியிலிருந்து அவர்களின் அன்றாட வாழ்வின் மீதான தலையீடுகளிலிருந்து விலகும்படிதான் கோரியது. அரசாங்கம் அதற்கும் தயாராக இல்லை. வடக்கில் இராணுவ- பொதுமக்கள் உறவுகளைக் கட்டியெழுப்புவது என்ற பெயரில் நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. ஆனால், சீருடைகளுடன் சிவிலுடைகளை ஒன்றிணைப்பது கடினமானது.

தமிழ் மக்களின் ஆதரவைப் பெற்றிருந்தபோதுகூட விடுதலைப் புலிகளும் இதே பிரச்சினையை எதிர் கொண்டனர். 1990 இற்கு முன்னர் சாதாரண உடையில் இருந்த போது, மக்களுடன் இருந்த நெருக்கமான உறவு, அவர்கள் சீருடைக்கு மாறிய பின்னர் குறைந்து போனது. இது அவர்கள் எதிர்கொண்ட முக்கியமான பிரச்சினைகளில் ஒன்று. அவர்களின் தோல்விக்கான அடிப்படைக் காரணங்களில் ஒன்று. இதே பிரச்சினையை இராணுவத் தரப்பு எதிர் கொள்வது ஒன்றும் ஆச்சரியமில்லை. வடக்கில் சிவில் நிர்வாகம் ஒன்றை ஏற்படுத்தவும் இராணுவத் தலையீடற்ற இயல்பு வாழ்வை உருவாக்கவும் அரசாங்கம் தயங்குகிறது. ஆனால், இந்தியக் குழுவின் வருகையை அடுத்து வடக்கில் இராணுவத் தலையீடுகளைக் குறைக்கும் அழுத்தங்கள் அதிகரித்துள்ளன.

# அறநெறிப் பாடசாலைகளுக்கான இறுதிநிலை சான்றிதழ் பரீட்சை

(கொழும்பு)

இந்து அறிநெறிப் பாடசாலை இறுதி நிலைச்சான்றிதழ் பரீட்சை 2012 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதத்தில் பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப்படவுள்ளது. இப்பரீட்சைக்கான விண்ணப்பங்கள் சகல அறநெறிப் பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக இந்து கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

அவ்விண்ணப்பங்கள் இரு பிரதிகளாக பூரணப்படுத்தப்பட்டு மூலப்பிரதி பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு வெளிநாட்டு பரீட்சைகள் கிளை, தேசிய மதிப்பிடலுக்கும் பரீட்சித்தலுக்குமான சேவை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை பத்தரமுல்லை என்னும் முகவரிக்கு எதிர்வரும் ஜூன் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் அறநெறிப் பாடசாலை இறுதிநிலைச்சான்றிதழ் பரீட்சை இந்துசமயம் 2011 எனவும் பரீட்சைக்கு தோற்ற விண்ணப்பிக்கும் நகரமும் குறிப்பிடப்பட வேண்டும்.

இப்பரீட்சை தொடர்பான மேலதிக தகவல் தேவைப்படின் கடந்த 18 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலில் பார்வையிடமுடியும்.

(அ)

# கடந்தகால பரீட்சைகளின் வினா விடைகள் அடங்கிய நூல் வெளியீடு

## தேசிய கல்வி நிறுவகம் நடவடிக்கை

(கொழும்பு)

நடந்து முடிந்த க.பொ.த சாதாரண தரம் மற்றும் உயர்தர பரீட்சை வினாத்தாள்களை விடைகளுடன் புத்தகங்களாக அச்சிட்டு விற்பனைக்கு வைத்துள்ளது. இப்புத்தகங்களை கல்வி அமைச்சிலும் ஏனைய புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ள முடியுமெனவும் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன உத்தியோகபூர்வமாக தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக விளக்கமளிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் கல்வியமைச்சில் நடைபெற்றது. இதன்போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

எதிர்வரும் 2016 ஆம் ஆண்டளவில் க.பொ.த.சாதாரண தரத்தில் விஞ்ஞானம், கணிதம் மற்றும் ஆங்கிலம் உள்ளிட்ட அனைத்து பாடங்களினதும் பெறுபேறுகளை 80 சதவீதத்திற்கு உயர்த்துவதே எமது இலக்கு.

இதற்கென தேசிய கல்வி நிறுவனம், கல்வி அமைச்சு, பரீட்சைகள் திணைக்களம், அமைச்சின் கணிதப்பிரிவு ஆகியன ஒன்றிணைந்து பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருகின்றன. அந்த வகையில் கடந்த வருட பரீட்சை வினாத்தாளை விடைகளுடன் அச்சிட்டு வெளியிட்டிருப்பதும் அத்திட்டங்களுள் ஒன்றென அமைச்சர் கூறியுள்ளார்.

(அ-2)

# மின்சாரசபை ஊழியர்களின் பணிப்புறக்கணிப்பு போராட்டம்



(யாழ்ப்பாணம்)

இலங்கை மின்சார சபையின் ஒருங்கிணைந்த தொழிற்சங்க அமைப்பின் ஏற்பாட்டில் சம்பள உயர்வைக்கோரி ஒரு மணித்தியால பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் நேற்று முன்தினம் ஊழியர்கள் ஈடுபட்டனர்.

நாடளாவிய ரீதியில் கடந்த 9 ஆம் திகதி முதல் மேற்கொள்ளப்பட்டு வரும் தொழிற்சங்க போராட்டத்தின் தொடர்ச்சியாகவே நேற்று முன்தினம் இலங்கை மின்சார சபை ஊழியர்கள் நண்பகல் 12.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரையிலான ஒரு மணித்தியாலய பணிப்புறக்கணிப்பு போராட்டத்திலும் தொடர்ந்து முன்னெடுக்கப்படவுள்ள தொழிற்சங்க நடவடிக்கைகள் தொடர்பாகவும் கலந்துரையாடினர்.

இலங்கை மின்சார சபையின் யாழ். பிராந்திய பிரதான பொதுமுகாமையாளர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஒன்றுகூடலின் தொடர்ச்சியாக இன்று திருகோணமலையிலுள்ள இலங்கை மின்சார சபையின் பிரதான பொதுமுகாமையாளர் அலுவலகத்திலும் பணிப்புறக்கணிப்பு ஒன்றுகூடல் இடம்பெறவுள்ளது.

இலங்கை மின்சார சபையில் நிறைவேற்றுத்தரத்திலுள்ள அதிகாரிகளுக்கு மட்டும் சம்பள உயர்வினை வழங்கிவிட்டு ஏனைய ஊழியர்களுக்கு சம்பள உயர்வினை வழங்காததோடு அவர்களின் பணி தேவையில்லை என்றவாறு மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க கருத்து வெளியிட்டதனை தொடர்ந்தே இவ்வாறு இலங்கை மின்சார சபையின் ஒருங்கிணைந்த தொழிற்சங்க அமைப்பு போராட்டங்களை நாடளாவிய ரீதியில் மேற்கொண்டு வருகின்றது. இதில் எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பகல் 12 மணிக்கு கொழும்பு தலைமையகம் முன்பாக மாபெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமும் 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அரைநாள் வேலை நிறுத்தமும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ-6)

# யாழ்ப்பாணத்தில் தொடரும் இரும்புக்கம்பி தாக்குதல்கள்

## இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

வீட்டின் முன்னால் நின்ற இரு இளைஞர்களை மோட்டார் சைக்கிளில் வந்த நபர்கள் இரும்புக்கம்பிகளால் தாக்கியதில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் அண்மையில் இரவு 9 மணியளவில் பாசையூர் மகேந்திரபுரத்தில் இடம்பெற்றுள்ளது.

முன்பு நடைபெற்ற தகராறினால் ஏற்பட்ட பகை காரணமாக இருவரும் தாக்கப்பட்டுள்ளதாக அவர்களது உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

இத்தாக்குதல் சம்பவத்தில் மயிலிட்டி வடக்கினை சேர்ந்த நாதன் பிரதீபன் (வயது 24) என்பவரும் பாசையூரினை சேர்ந்த அந்தோனிப்பிள்ளை அஷோக் (வயது 27) என்பவருமே படுகாயமடைந்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, ஒரு மாதத்திற்கு முன்னர் பஸ்ரியன் சந்தியில் நடைபெற்ற வாள்வெட்டு சம்பவத்தில் இரு பகுதியினரும் சம்பந்தப்பட்டு உள்ளனர்.

இச்சம்பவம் பொலிஸாரிடம் முறையிடப்பட்டு யாழ். நீதிமன்றிலும் வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இந்நிலையில் குறித்த சம்பவ தினத்தன்று 5 மோட்டார் சைக்கிள்களில் வந்த பத்துப்பேர் பஸ்ரியன் சந்தி வாள்வெட்டுச் சம்பவத்தோடு தொடர்புடையவரை தாக்குவதற்காக தேடியுள்ளனர்.

அவர் கிடைக்காததையடுத்து அவரின் வீட்டின் முன்னால் இருந்த அவரது உறவினர்கள் இருவரையும் தாக்கிவிட்டு சென்றுள்ளனர்.

சம்பவத்தில் படுகாயமடைந்த இருவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(அ-4)

# 80 ஆயிரம் பெறுமதியான வைக்கோல்கள் சாம்பலாகின

(தனங்கிளப்பு)

தனங்கிளப்பு மறவன்புலோ கிராமத்தில் சமூக சேவையாளர் ஒருவரின் வீட்டில் குவிக்கப்பட்டிருந்த வைக்கோல் சூட்டிற்கு தீ மூட்டிய சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கடந்த 20 ஆம் திகதி இரவு 11 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

மேற்படி பிரதேசத்தை சேர்ந்த சமூக சேவையாளரும் கமக்கார அமைப்புக்களின் தலைவருமான சி.திருஞானசம்பந்தரின் வீட்டில் குவிக்கப்பட்டிருந்த சுமார் 40 ஆயிரம் ரூபா பெறுமதியான 2 வைக்கோல் சூட்டிற்கே இனந்தெரியாத நபர்கள் தீ மூட்டியுள்ளனர்.

இராணுவத்தினரின் உதவியுடன் சுமார் ஒரு மணித்தியாலங்கள் வரை தீயுடன் போராடி பெரும் சிரமத்தின் மத்தியில் தீ கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டது.

இதன் காரணமாக பல சொத்துக்கள் அழிவடையாமல் பாதுகாத்துக் கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(அ-9-37)

# தமிழ் அரசியல் கைதிகளின் உண்ணாவிரத போராட்டத்திற்கு கூட்டமைப்பினர் ஆதரவு

## சத்தியாக்கிரகத்திற்கு ஏற்பாடு

(கொழும்பு)

சிறைச்சாலைகளில் காலவரையறையின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பாரிய சத்தியாக்கிரக போராட்டம் ஒன்றை நாளை வியாழக்கிழமை வவுனியாவில் நடத்தவிருக்கின்றது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து செயற்படும் ஐந்து கட்சிகளான தமிழர் விடுதலைக்கூட்டணி, தமிழரசுக்கட்சி, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, புளொட், ரெலோ ஆகியன இதில் பங்கு கொள்ளும் என வவுனியாவிலுள்ள தமிழ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனை விட கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த்தேசிய விடுதலை முன்னணி, மனோகணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணி என்பனவும் இந்தப் போராட்டத்தில் பங்கு கொள்ளும் எனத் தெரிகின்றது.

தம்மை விடுதலை செய்யுமாறு கோரி கொழும்பு வெலிக்கடை, விளக்கமறியல் சிறைச்சாலை, வவுனியா மற்றும் களுத்துறை சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சுமார் 300 தமிழ் அரசியல் கைதிகள் கடந்த வியாழக்கிழமை முதல் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை மேற்கொண்டு வருகின்றனர்.

வெலிக்கடைச் சிறைச்சாலை பெண்கள் பிரிவில் உள்ள சுமார் 32 தமிழ்ப் பெண் கைதிகளும் நேற்று முன்தினம் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் இணைந்து கொண்டனர்.

இந்தப் போராட்டத்துக்கு ஆதரவளிக்கும் நோக்கத்துடனேயே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாளை வியாழக்கிழமை வவுனியாவில் மாபெரும் உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளன.

(அ-2)




## விருந்துண்ண வாராய்

மாதவன் ஓர் அநாதை இளைஞன். கிராமத்திலுள்ள அனைவருக்கும் எடுபிடி வேலைகள் செய்து அவர்கள் தருவதை மகிழ்ச்சியுடன் வாங்கிக்கொள்




வான். நாள் முழுதும் வேலை செய்த பின் நதியில் குளித்து விட்டு பெருமாள் கோயிலுக்குச் சென்று பயபக்தியுடன் கும்பிடுவான். கோயிலில் பல பக்தர்கள் பல வகையான தோத்திரங்கள், மந்திரங்கள் கூறி வழிபடுகையில் மாதவனுக்கு, நாராயணா! நாராயணா! என்ற ஒரேயொரு சொல்லைத் தவிர வேறு எதுவும் சொல்லி வழிபடக்கூட தெரியாது.

ஒருநாள் மாலை நேரத்தில் வழக்க

## அம்புலி மாமா கதைகள்

ப்படி பெருமாளை வணங்கும் போது அவர் களைத்திருப்பது போல் தோன்றியது. உடனே தன்னை அறியாமல், பெருமாளே! ஏன் இன்று இவ்வளவு களைப்பாக இருக்கிறீர்கள்? மதியம் சரி



யாக சாப்பிடவில்லையா? என் வீட்டிற்கு வருகிறீர்களா? என்று நெகிழ்ச்சியுடன் அழைத்தான்.

திடீரென பெருமாள் அவனைப் பார்த்துப் புன்னகைப்பது போல் தோன்றியது. அவருடைய இதழ்கள் அசைந்தன. என்ன அதிசயம்? அவர் மாதவனை நோக்கிப் பேசினார்.

மாதவா! வீட்டிற்குச் சென்று சமையல் செய்து விட்டு இங்கே வந்து என்னை விருந்துண்ண அழைத்துப் போ! என்றார். மாதவனுக்கு உற்சாகம். தலை கால் புரியவில்லை. உடனே ஓட்டமும் நடையுமாக வீட்டிற்குச் சென்று தன்னால் இயன்ற அளவிற்கு அருமையான சமையல் செய்து முடித்தான். பின்னர் பெருமாளை அழைக்கப் பரபரப்புடன் சென்றான்.

சிறிது தூரம் சென்ற போது, வழியில் ஒரு கிழவன் மாதவனைப் பார்த்து தம்பி! எனக்கு மிகவும் பசியாக இருக்கிறது. ஏதாவது சாப்பிடத் தருகிறாயா? என்றான். அவன் மீது இரக்கம் கொண்ட மாதவன் அவனைத் தன் வீட்டிற்கு அழைத்துச்சென்று பெருமாளுக்காகத் தான் தயாரித்த உணவை அவனுக்குப் பரிமாறினான். சிறிது சாப்பிட்டவுடனேயே, அந்தக் கிழவன் திருப்தியுடன் எழுந்துகொண்டு, தம்பி! நீ நன்றாயிருப்பாய்! என்றும் உனக்குக் கடவுளின் துணை உண்டு! என்றும் வாழ்த்தி விட்டுச் சென்றான். பெருமாள் பசியாக இருப்பாரே என்று பரபரப்புடன் வீட்டைப் பூட்டிக் கொண்டு மாதவன் மறுபடியும் கோயிலை நோக்கிச் செல்லுகையில், வழியில் ஒரு வயதான கிழவி, மகனே! நான் இன்று முழுவதும் சாப்பிடவில்லை! எனக்கு ஏதாவது சாப்பிடத் தருவாயா? என்று வேண்டியதும் மாதவன் இதயம் நெகிழ்ந்தது.

உடனே அவள் கையைப் பிடித்து அழைத்துச் சென்றான். அவளைத் தன் வீட்டில் உட்கார வைத்து, எஞ்சிய உணவில் சிறிது பரிமாறினான். சிறிது சாப்பிட்டதுமே போதும் மகனே! எனக்கு வயிறு நிறைந்து விட்டது! என்று கூறி எழுந்து கொண்ட அவள், கடவுளின் அருள் உனக்குப் பரிபூரணமாகக் கிட்டும்! என்று சொல்லி விட்டுச் சென்றாள்.

மறுபடியும் கோயிலை நோக்கி விரைந்த மாதவனை ஒரு சிறுவன் அழைத்து, ஐயா! எனக்குப் பசியாக இருக்கிறது! என்று சொல்ல, மாதவன் அவனையும் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்று உணவளித்தான். மிகுந்த நன்றியுடன் அவனிடம் அந்தச் சிறுவன் விடைபெற்றான்.

மிகவும் தாமதமாகி விட்டது என்று புலம்பிக் கொண்டே மாதவன் கோயிலை அடைந்தான். பெருமாள் முன் நின்று கைகூப்பி, பெருமாளே! சோதனையாக இன்று எனக்கு மிகவும் தாமதமாகி விட்டது. நீங்கள் மிகவும் பசியாக இருப்பீர்கள்! உடனே என்னுடன் வீட்டிற்கு விருந்துண்ண வாருங்கள்! என்றான்.

அது தான் நீ ஏற்கனவே எனக்கு வயிறு நிறைய விருந்தளித்து விட்டாயே! என்றார் பெருமாள்.

நான்? நான் எப்போது உங்களுக்கு விருந்தளித்தேன்? உங்களுக்காக நான் செய்து வைத்த விருந்தை ஏற்கனவே சிலர் சாப்பிட்டு விட்டுச் சென்று விட்டனர். உங்களுக்கு இன்னும் இருக்கிறது வாருங்கள்! என்றான்.

அதற்கு அவர் மாதவா! ஒரு கிழவன், கிழவி, சிறுவன் ஆகியோருக்கு நீ உணவளித்ததே எனக்கு அளித்தது போல் தான்! என்றார் பெருமாள். ஆனால் மாதவன் தன்னுடன் வருமாறு பிடிவாதம் பிடித்தான்.

சரி வருகிறேன்! நீ முதலில் வீட்டிற்குச் செல்! உன்னைத் தொடர்ந்து வருகிறேன் என்று பெருமாள் சொல்ல, மாதவன் குதூகலத்துடன் வீட்டிற்குச் சென்றான். அவன் வீட்டையடைந்த சிறிது நேரத்திலேயே பெருமாளும் வந்து விட்டார். அவரை உட்கார வைத்து மாதவன் விருந்து படைத்தான். ஆனால் ஒரேயொரு பழத்தை மட்டும் எடுத்துப் புசித்த பின் போதும்! எனக்கு வயிறு நிறைந்து விட்டது எனக் கூறி மறைந்து விட்டார்.

பெருமாள் மாதவன் வீட்டிற்கு வந்து



விருந்துண்ட செய்தி ஊர் முழுவதும் பரவியது. அதைக் கேட்ட கிராமத்து ஜமீன்தாருக்கு அவன் மீது பொறாமை ஏற்பட்டது. தான் கோயிலுக்கு எத்தனையோ பணம் நன்கொடையளித்தும் தனக்கு அருள் செய்யாத பெருமாள், மாதவன் கூப்பிட்டதும் விருந்துக்கு வந்தது அவர் மனதில் ஆற்றாமையை விளைவித்தது. உடனே ஜமீன்தார் கோயிலுக்குச் சென்று பெருமாளை விருந்துண்ண அழைத்தார். பெருமாளும் ஒப்புக் கொண்டார்.

உடனே, ஜமீன்தார் தன் வீட்டில் ஒரு



பெரிய விருந்திற்கு ஏற்பாடு செய்தார். விருந்து தயாரானதும், தானே பெருமாளை அழைத்து வரக் கோயில் சென்றார். வழியில் மாதவனைச் சந்தித்த அதே கிழவன் எதிர்கொண்டு, ஐயா! எனக்குப் பசியாக இருக்கிறது! என்று வேண்ட, தரித்திரமே! வழியை விடு! என்று அவன் மீது எரிந்து விழுந்தார்.

சற்றுத் தூரம் சென்றதும், அதே கிழவி எதிர்ப்பட்டாள். அவள் ஜமீன் தாரிடம் தனக்கு உணவளிக்க வேண்டி யபோது, பிச்சைக்கார சனியனே! ஏன் என் உயிரை வாங்குகிறாய்? போ அப்பால்! என்று அவளைத் துரத்தினார்.

அவள் சென்ற சிறிது நேரத்திற்குப் பின்னர், அதே அநாதைச் சிறுவன் அவர் எதிரில் தோன்றி, ஐயா! தர்ம துரையே! காலையிலிருந்து பட்டினியாக இருக்கிறேன். எனக்கு ஒரு கவளம் சோறு கொடுத்தாலும் போதும்! என்று கெஞ்சினான்.

நான் என்ன தர்மசத்தி ரமா நடத்துகிறேன்? உன்னைப் போன்ற அநாதைகளுக்கு வடித்துக் கொட்ட! தள்ளிப் போ! என்று அவன் கழுத்தைப் பிடித்து தள்ளிவிட்டார். ஒரு வழியாக அத்தனை இடையூறுகளையும் தாண்டி கோயிலை அடைந்த பின் அவர் நிம்மதி யாகப் பெரு மூச்சு விட்டார்.

கோயிலுக்கு உள்ளே சென்று, பெருமாளே! உங்களை அழைத்துப் போக வந்திருக்கிறேன். மாதவன் வீட்டில் சாப்பிட்டீர்களே அதைவிட மிகப் பலமான விருந்து உங்களுக்காக காத்திருக்கிறது வர்ருங்கள்! என்றார். அவருடைய சொற்களில் வேண்டுதலை விட தற்பெருமையும், கர்வமுமே மிகுந்து இருந்தது.

என்னையா விருந்துண்ண அழைக்கிறாய்? என்று கேட்ட பெருமாள், நான் உன்னிடம் மூன்று முறை உணவு கேட்டு வந்தேன். நாயை அடித்துத் துரத்துவது போல் என்னைத் துரத்தினாய். போதாக் குறைக்கு என்னை தரித்திரம், சனியன், அறிவு கெட்டவன் என்றெல்லாம் வசை மாலை பாடினாய். கடைசியில் என்னைக் கழுத்தைப் பிடித்தே தள்ளி விட்டாய். அப்படிப்பட்டவன் வீட்டில் விருந்து சாப்பிட நான் தயாராக இல்லை! என்றார். ஜமீன்தாருக்கு பலத்த அதிர்ச்சி ஏற் பட்டது. தன் தவறுக்காக பல முறை மன்னி ப்புக் கோரினார். ஆனால் பெருமாள் வாய் திறந்து பேசவே இல்லை. கற்சிலையாய் நின்றார்.

# ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பட்டறை

(மல்லாவி)

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வட.மாகாணக் கல்வித் திணைக்களத்தின் கீழ் உள்ள 12 கல்வி வலயங்களிலும் உள்ள பாடசாலைகளில் க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கு இந்து நாகரிக பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான மூன்று நாள் பயிற்சிப்பட்டறைச் செயலமர்வு இடம்பெறவுள்ளதாக என துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

இச் செயலமர்வு எதிர்வரும் 28,29,30 ஆம் திகதிகளில் காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை வவுனியா சுத்தானந்த மண்டபத்தில் நடைபெறுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதில் துணுக்காய் கல்வி வலய பாடசாலைகளில் இந்து நாகரிகம் கற்பிக்கும் சகல ஆசிரியர்களையும் தவறாது கலந்து சிகொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (அ-9-15)

# மொழி மூலமான நல்லிணக்கத்தை ஏற்படுத்த சமூக மேம்பாட்டு உதவுனர்கள்

## அமைச்சர் வாசுதேவ தெரிவிப்பு

(கொழும்பு)

**சமூகங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் வடக்கு, கிழக்கு உட்பட அனைத்து மாவட்டங்களிலும் மொழிப் பிரச்சினைகளைக் கையாள்வதற்கு சமூக மேம்பாட்டு உதவுனர்கள் நியமிக்கப்படவிருப்பதாக தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.**

ராஜகிரியவிலுள்ள அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கூடிய விரைவில் அனைத்து மாவட்டங்களுக்கும் அதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள் என்றும் இவர்களுக்கு மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களில் இடம் ஒதுக்கிக் கொடுக்கப்படும்.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் மொழி ரீதியான நல்லிணக்கம் குறித்து சுட்டிக்காட்டப்பட்டிருக்கும் நிலையில் மக்களுக்கிடையில் மொழிகள் மூலம் சமூக ஒருமைப்பாட்டை ஏற்படுத்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அனைத்து அரசாங்கத் திணைக்களங்கள் மற்றும் மொழி மூலமான நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு அமைச்சின் பிரிவுகளும் தேசிய மொழிகள் ஆணைக்குழு, தேசிய மொழிகள் திணைக்களம், தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் ஆகியன இணைந்து பணியாற்றி வருகின்றன.

அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களில் மும்மொழிப் பயன்பாட்டை வலியுறுத்தியுள்ளோம். குறிப்பாக புகையிரத நிலையங்களில் மேற்கொள்ளப்படும் அறிவித்தல்களை தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் மேற்கொள்வதற்கும் பொலிஸ் நிலையங்களில் தமிழ் தெரிந்த அதிகாரிகள் அல்லது தமிழ் பேசக் கூடிய சிங்கள அதிகாரிகளை பணிக்கு அமர்த்துவதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளோம். இதற்கு பொலிஸ்மா அதிபரின் ஒத்துழைப்பும் கிடைத்துள்ளது.

மொழிப் பயிற்சி மாத்திரமன்றி வடக்கு, கிழக்கு மோதல்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான பிறப்பு, இறப்பு, திருமணச் சான்றிதழ்கள் மற்றும் அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடமாடும் சேவைகள் பலவும் அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றார். (அ-2)

# கிளிநொச்சியில் 47 பாடசாலைகளின் வேலைத்திட்டங்கள் பூர்த்தியாகின

## கிளி.வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு



(சிவநகர்)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வடக்கின் துரித மீட்சித் திட்ட செயற்றிட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள பாடசாலைகளில் 53 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு புனரமைப்பு செய்யப்படும் வருகின்றன.

இப்புனரமைப்பின் முதற்கட்டமாக ஆயிரத்து 275 இலட்சம் ரூபா செலவிடப்பட்டு 47 பாடசாலைகளில் வேலைத்திட்டங்கள் யாவும் நிறைவுற்ற நிலையில் கட்டடங்கள் பாடசாலைச் சமூகத்தினிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட பிரதித் திட்டப் பணிப்பாளர் ச.மோகனபவன் அறிவித்துள்ளார்.

இத்தெரிவில் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் 28 பாடசாலைகளும் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் 6 பாடசாலைகளும் பூநகரிப் பிரதேச செயலர் பிரிவில் 12 பாடசாலைகளும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் 7 பாடசாலைகளும் அடங்குகின்றன.

இதேவேளை, இந்தப் பாடசாலைகளின் புனரமைப்பின் மூலம் குறிப்பாக மீள்குடியேற்றத் தின் பின்னர் மாணவர்கள் மரங்களுக்கு கீழ் கல்வி கற்று வந்த நிலை மாற்றப்பட்டுள்ளது.

அத்துடன் பாடசாலைகள் புனரமைக்கப்பட்டு வழங்கியமை மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கு மிகப்பெரும் உதவியாக அமைந்துள்ளதாக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க. முருகவேல் குறிப்பிட்டுள்ளார். (அ-2-9-254)

# மின்சார சபையினரின் மாபெரும் ஆர்ப்பாட்டத்திற்கு ஆதரவு வழங்குங்கள்

## ஒருங்கிணைந்த தொ.ச.அமைப்பு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சம்பள அதிகரிப்பை வலியுறுத்தி கொழும்பிலுள்ள மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சின் அலுவலகம் முன்பாக இலங்கை மின்சார சபை ஒருங்கிணைந்த தொழிற்சங்க அமைப்பின் ஏற்பாட்டில் நாளை மறுதினம் 25 ஆம் திகதி மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெறவுள்ளது.

இது தொடர்பாக இலங்கை மின்சார சபை ஒருங்கிணைந்த தொழிற்சங்க அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஊழியர்களுக்கான சம்பளத்தை அதிகரிக்கக்கோரி கடந்த 9 ஆம் திகதி முதல் இலங்கை மின்சார சபை ஒருங்கிணைந்த தொழிற்சங்க அமைப்பு போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

இதன் தொடர்ச்சியாக நாளை மறுதினம் 25 ஆம் திகதி கொழும்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றினை நடத்தவுள்ளது.

இதற்கு நாடளாவிய ரீதியில் ஊழியர்களின் ஆதரவினை திரட்டுவதற்கான நடவடிக்கையில் எமது அமைப்பு ஈடுபட்டுள்ளது.

எனவே, நாளை மறுதினம் 25 ஆம் திகதி யாழ்.மாவட்டத்திலுள்ள இலங்கை மின்சார சபையின் ஊழியர்களையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுகின்றோம்.

மேலும் எதிர்வரும் 29 ஆம் திகதி அரை நாள் வேலை நிறுத்தப் போராட்டத்திலும் ஊழியர்களை பங்கு கொள்ளுமாறும் அந்த அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது. (அ-6)

# குருமன்காட்டில் காணிகளை சிலர் அபகரிப்பதாக புகார்

## நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை

(பூந்தோட்டம்)

வவுனியா குருமன்காட்டுப்பகுதியில் இராணுவ காவலரண் அமைந்திருந்த காணியினை சிலர் அபகரித்து வருவதாகவும் இக் காணி குளத்திற்கு உரிய காணி என்பதால் விவசாய திணைக்களம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் விவசாய திணைக்களங்கள் உரிய நடவடிக்கை மேற்கொண்டு குளத்தினை பாதுகாக்க வேண்டுமெனவும் நகரசபை இது தொடர்பில் உரிய கவனம் செலுத்த வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை தாண்டிக்குளம் பகுதியில் புகையிரத திணைக்களத்திற்கும் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கும் ஒதுக்கப்பட்ட காணிகளில் சிலர் அத்துமீறி கடைகள் அமைத்து வருவதுடன் காணிகளையும் அபகரித்து வருவதாகவும் தெரிவித்துள்ள அப்பகுதி மக்கள் இது தொடர்பில் நகரசபை கவனம் செலுத்த வேண்டியுள்ள நிலையிலும் அவர்கள் எவ்வித அக்கறையும் செலுத்துவதில்லை எனவும் எனினும் இரு திணைக்களங்களும் உரிய கவனம் செலுத்தாதுவிடும் பட்சத்தில் வீதி அபிவிருத்தி மற்றும் புகையிரத வீதி அபிவிருத்தியில் பாரிய பிரச்சினைகள் எதிர்காலத்தில் தோன்ற வாய்ப்புள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ-9-266)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர் ஆழ்வான் கோபால்



கடல் கடந்து சென்றாலும்
சொந்தம் தனை மறவா -அண்ணனே
உம் இழப்பால் உடல் இளைத்தோம்
விழி நீர் வற்றிட அழுதுவிட்டோம்
எம் அகம் முழுதும்
உம் நினைவால் வருந்துகின்றோம்
வருவீரோ எமைக்காண

(தம்பி-சி.செயக்கொடி)

குடும்பத்தினர்.

நாவலடி,
உடுப்பிட்டி.

(அ-050)

# தமிழர்களுக்கான உரிமையை வழங்க அரசாங்கம் முன்வருதல் வேண்டும்

## யோகேஸ்வரன் எம்.பி.தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

**இலங்கையில் இன்னுமொரு வேலுப்பிள்ளையின் மகன் தமிழர்களுக்காக போராட வருவதற்கிடையில் தமிழ்களுக்கான உரிமைகளை வழங்க ஜனாதிபதியும் அரசாங்கமும் முன் வர வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

தந்தை செல்வாவின் 35 ஆவது நினைவு தின வைபவமும் நேற்று முன்தினம் மட்டக்களப்பு தேவநாயகம் மண்டபத்தில் நடைபெற்றது. இதன் போது அங்கு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இந்த நாட்டில் தமிழ் மக்களுக்கான உரிமைகளை வென்றெடுப்பதற்காக தமிழ்த் தேசியத்திற்காக இரண்டு வேலுப்பிள்ளையின் மக்கள் போராட்டத்தை நடத்தினர். தமிழர்களின் வரலாற்றில் 30 வருடங்கள் அகிம்சைப் போராட்டத்தை ஒரு வேலுப்பிளையின் மகனான தந்தை செல்வாவும் மற்றைய 30 வருட ஆயுதப் போராட்டத்தை மற்றுமொரு வேலுப்பிள்ளையின் மகனுமே நடத்தினர்.

இந்த நிலையில் இன்னுமொரு வேலுப்பிள்ளையின் மகன் வருவதற்கிடையில் அரசாங்கமும் ஜனாதிபதியும் தமிழர்களுக்கான அரசியல் தீர்வை வழங்கி உரிமைகளை கொடுத்து தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்த்து வைக்க வேண்டும்.

தந்தை செல்வா தமிழ் மக்களுக்காக வழங்கிய வீட்டை சிலர் மறைத்தார்கள். ஆனால், அந்த வீடுதான் தற்போது தமிழர்களுக்கு விமோசனத்தை ஏற்படுத்தி நிற்கின்றது. இன்னும் அந்த வீட்டை வேலி போட்டு மறைப்பதற்கு சிலர் முயன்று வருகின்றனர். அதற்கு நாம் ஒரு போதும் விடமாட்டோம்.

தமிழ் மக்களின் சுதந்திரத்திற்காகவும் தமிழ் மக்களின் தேசியத்திற்காகவும் அகிம்சை வழிப்போராட்டம் நடத்திய தந்தை செல்வாவின் வழியில் நாம் இன்று பயணித்துக் கொண்டிருக்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# ஆஸியில் உள்ள தமிழ் அகதிகளுக்காக வழக்குத் தொடர்வதற்கு கிரீன்கட்சி முடிவு

அவுஸ்திரேலிய சிறையில் உள்ள புலனாய்வுத்துறையின் விசாரணைகளுக்கு உட்பட்ட இலங்கைத் தமிழர் உள்ளிட்ட அகதிகளை விடுவிக்கும் முயற்சிகளை அந்த நாட்டின் கிரீன் கட்சி மேற்கொண்டுள்ளது. இது தொடர்பில் நீதிமன்றத்தில் வழக்கு தொடர அந்தக் கட்சி தீர்மானித்துள்ளது. அகதி அந்தஸ்து வழங்கப்பட்டும் கூட அவுஸ்திரேலியாவின் பல பாகங்களிலும் நாட்டுக்கு அச்சுறுத்தல் என்ற அடிப்படையில் பலர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த அகதிகளை விடுவிக்க அவுஸ்திரேலிய புலனாய்வு சேவையின் தடையே காரணமாக அமைந்துள்ளது.

எனினும் குறித்த அகதிகள் ஏன்? தமக்கு எதிரான நடவடிக்கைகளுக்காக மேன்மேறையீடு செய்யக்கூவாது என்பதற்கான காரணத்தையும் அவுஸ்திரேலிய புலனாய்வு சேவை மறுத்து வருகின்றது.

இதனையடுத்தே அவுஸ்திரேலிய புலனாய்வு சேவையினருக்கு எதிராக வழக்கை தாக்கல் செய்ய கிரீன் கட்சி தீர்மானித்துள்ளது.

இதுவரை சிறுவர்கள் உட்பட 51 பேர் மேன்முறையீடு செய்ய முடியாத படி சிறையில் வைக்கப்பட்டுள்ளனர். இதில் அகதி அந்தஸ்து வழங்கப்பட்ட இலங்கைத் தமிழர் ஒருவரும் அடங்குகிறார்.

தாமோ தமது குடும்பமோ தமிழீழ விடுதலைப்புலிகளுடன் எவ்வித தொடர்புகளையும் கொண்டிருக்கவில்லை.

போரின் போதே தாம் அகதியாக அவுஸ்திரேலியாவுக்கு சென்றதாக கூறும் இந்த இலங்கைத் த்மிழர் தாம் ஏன் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறோம் என்பது புரியவில்லை என்று குறிப்பிட்டுள்ளனர். (அ-2)

## விவசாய, கால்நடை அபிவிருத்தி, காணி, நீர்ப்பாசன, கடற்றொழில் அமைச்சு, வடமாகாணம்

## விருப்பம் தெரிவித்தல் (Expression of Interest)

வடமாகாண விவசாய கால்நடை அபிவிருத்தி, காணி நீர்ப்பாசன, கடற்றொழில் அமைச்சின் செயலாளர் அவர்களினால் கீழ்வரும் வேலைகளை எதுவித பணப்பெறுமதியும் செலுத்தாது குறிப்பிட்ட காலப்பகுதியில் செய்து முடிக்கக்கூடிய தகுதிவாய்ந்த நிறைவேற்றுனரிடம் இருந்து விருப்பம் தெரிவித்தல் (Expression of Interest) முறையில், கீழ்வரும் முகவரியில் தொடர்பு கொண்டு தங்களது விருப்பத்தை 06.06.2012 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் தெரிவிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

வேலை விபரம்:- அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் அமைந்துள்ள வடமாகாண கால்நடை அபிவிருத்தி திணைக்களத்திற்கு சொந்தமான, பிராந்திய பண்ணையிலுள்ள கற்களை அகழ்ந்து அகற்றுதல்.

கல் அகழ வேண்டிய காணியின் விஸ்தீரணம்- 3 ஏக்கர்
கல் அகழ வேண்டிய ஆழம் -2 அடி
விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி -2012.06.06

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி- பணிப்பாளர்- திட்டமில் விவசாய, கால்நடை அபிவிருத்தி, காணி, நீர்ப்பாசன, கடற்றொழில் அமைச்சு, இல. 04, புருடிலேன், அரியாலை, யாழ்ப்பாணம்.

வேலை நிறைவேற்றி முடிக்கும் காலப்பகுதி- 15.06.2012-15.09.2012

அகழ்ந்து எடுக்கப்படும் கற்கள் உரியவர்களால் அங்கிருந்து அகற்றப்பட வேண்டும். அத்துடன் அகழப்பட்ட இடத்தை அதே மண்கொண்டு பயிர்ச் செய்கைக்கு ஏற்றவாறு மட்டப்படுத்துதல் அவசியமாகும்.

இவ்வேலையை உடன்பாட்டு அடிப்படையில் மேற்கொள்ள விருப்பமுடையவர்கள் இடத்தை பார்வையிட்டு தங்களின் விருப்பத்தை திட்டத்திற்கான செயற்பாட்டு கால அட்டவணை (Time Frame) ஆளணி, இயந்திர வசதி என்பவற்றினை உள்ளடக்கி அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். தெரிவு செய்யப்படும் நிறைவேற்றுனர் குறிப்பிடப்படும் தொகை பணத்தை வைப்பு பணமாக செலுத்திய பின்னரே வேலையை ஆரம்பிப்பதற்குரிய தகுதியைப் பெறுவர்.

செயலாளர்
விவசாய, கால்நடை அபிவிருத்தி, காணி,
நீர்ப்பாசன, கடற்றொழில் அமைச்சு, வடமாகாணம்

(ஜ/058)

## 29 வருடங்களின் பின்னர்

# இரு கிராமங்களுக்கு மின்சார இணைப்பு

(முல்லைத்தீவு)

கிளிநொச்சி மாவட்டத்தின் வட்டக்கச்சி, அக்கராயன் ஆகிய பிரதேச மக்களுக்கும் அக்கராயன் பிரதேச வைத்தியசாலைக்கும் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

வடக்கின் வசந்த திட்டத்தின் கீழ் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் இம் மின்னிணைப்பினை வழங்கினார்.

கடந்த 1983 ஆம் ஆண்டுக்கு பின்னர் அக்கராயன் பகுதிக்கு 28 மில்லியன் ரூபா செலவிலும் வட்டக்கச்சி கிராமத்திற்கு 27 மில்லியன் ரூபா செலவிலும் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. (அ-3 267)

# இலவச மருத்துவ முகாம்

(முல்லைத்தீவு)

பிரம்ம குமாரிகள் உலக ஆன்மீக பல்கலைக்கழக இலங்கைக்கிடையின் இலவச மருத்துவ முகாம் எதிர்வரும் 27 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை வற்றாப்பளை மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.


இதில் கண், குழந்தை, சருமநோய் சம்பந்தமான சத்திர சிகிச்சை நிபுணர்களும் மற்றும் ஏனைய நோய்களுக்கான நிபுணர்களும் மருத்துவ பரிசோதனைகள், ஆலோசனைகள், சிகிச்சைகள், மருந்துகள் என்பன இலவசமாக வழங்கப்படும். இதில் ஆயுர்வேத வைத்திய சேவைகளும் மேற்கொள்ளப்படும். ஆரோக்கிய வாழ்வுக்கான இராஜயோகமும் தியான முறையும் பற்றிய பட விளக்க கண் காட்சியும் இடம்பெறவுள்ளது. எனவே, அனைவரையும் கலந்து கொண்டு பயன் பெறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-267)

# மீள்குடியேற்றம் தொடர்பான கூட்டம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மீள்குடியேற்றம் தொடர்பான கூட்டம் இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் முல்லை அரச அதிபர் நா.வேதநாயகன், மீள்குடியேற்ற அமைச்சின் செயலர் ஆகியோரின் இணைத் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், கரைதுறைப்பற்று ஆகிய பிரதேச செயலர் பிரிவின் உதவி அரசாங்க அதிபர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-3-267)



முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா நேற்று முன்தினம் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டதையடுத்து தனது வீட்டில் மீண்டும் குதூகலத்துடன் விருந்துண்டு மகிழ்வதைப் படத்தில் காணலாம்.


## அன்பான வடமாகாண Nokia வாடிக்கையாளர்களே

NOKIA Connecting People

## உங்களுக்கு ஓர் அன்பான அறிவித்தல்

Nokia நிறுவனம் வடமாகாணத்தில் காலடி வைத்ததை நினைத்து பெரு மகிழ்ச்சி அடைகின்றோம். நீங்கள் கடைகளில் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு Nokia கையடக்கத் தொலைபேசியானது அசலானதா (Original) அல்லது நகல் ஆனதா(Dupplicate ) என்பதை நிரூபிப்பதற்கு அதின் உட்பகுதியில் பொறிக்கப்பட்டுள்ள இமி இலக்கங்களை (IMEI Numbers ) ஐ வடமாகாணத்தின் Nokia கையடக்க தொலைபேசியின் வடபிராந்திய விநியோகஸ்தரான SVM TECHNOLOGY (PVT)LTD இல.158 ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துடன் தொடர்பு கொண்டு அறியமுடியும்.

**மேலதிக தகவல்களிற்கு எங்கள் யாழ்ப்பாண தொலைபேசி இலக்கங்களான:–0212220293, 0214925828, 0773659359, 0777716242 என்ற இலக்கங்களுடனும் வவுனியா பிரதேசமாயின் (வன்னி மாவட்டம்) 0773659360, 0772441681 என்ற இலக்கங்களுடனும் தொடர்பு கொண்டு அறியமுடியும்.**

எமது ஸ்ரீலங்கா (Srilanka ) ஏக விநியோகஸ்தரான Softlogic Communication (Pvt)Ltd இன் உயர் அதிகாரிகள் வடமாகாணத்தில் மேற்கொண்ட சந்தை ஆராட்சி மூலம் பின்வரும் போலி விற்பனையாளர்களை கண்டறிந்துள்ளனர். ஒரு சில வியாபாரிகள் Nokia கையடக்க தொலைபேசியின் அசல் (Original) உதிப்பாகங்களை மாற்றி (Battery, Charger, Headset,Memory card) போலியான உதிரிப்பாகங்களை அதனுள் பொருத்தி வாடிக்கையாளர்களிற்கு விற்பதனால் அந்த உதிப்பாகங்கள் 3 மாதங்களில் முற்றாக செயல் இழந்து விடுகிறது. ஆனால் அசல் Nokia (Original Nokia) உதிப்பாகங்கள் நீண்ட காலங்களிற்கு உழைக்கக் கூடியவை. இதனை உறுதி செய்ய மேலே குறிப்பிட்ட ஸ்தாபனத்துடன் தொடர்புகொள்ளவும். அவர்கள் அதனை இலங்கை தொலைத் தொடர்பு ஆணைக்குழுவிற்கு அறிவிப்பார்கள்.

எமது Nokia வாடிக்கையாளர்களே நீங்கள் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு கையடக்க தொலைபேசிக்கும் இலங்கையின் ஏக பிரதிநிதிகளான Softlogic Communication (Pvt)Ltd இனால் வழங்கப்படும் உத்தரவாத அட்டையை கேட்டு வாங்கி (Warrenty Card ) மிகவும் கவனமாக வைத்து இருந்தால் உங்களுக்கு என்ன பிரச்சினை வந்தாலும் உத்தரவாத அட்டை உங்கள் கையில் இருக்கும் வரை (Warrenty Card) உங்களுக்கு நாங்கள் அதற்குரிய அட்டையுடன் வந்தால் அதற்கான நடவடிக்கைகளை எடுப்போம் என்பதை அறிவிப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

NOKIA Connecting People
ஏக பிரதிநிதி
Softlogic Communication (Pvt)Ltd
No 4, Defonseka Road,
Colombo-05
T.P:-0777264717

வட பிராந்திய விநியேகஸ்தரான
SVM TECHNOLOGY (PVT)LTD
158 ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.இல:-0212220293, 0214925828.

(சி/6054)

முதலில் தூசியைக் கிளப்பிவிடுகின்றோம். பின்னால் பார்க்க முடியவில்லை என்று முறையிடுகிறோம். ~பிஷப் பார்க்லி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# குப்பை அகற்றல் தொடர்பில் அதிக கவனம் எடுக்க வேண்டும்

உள்ளூராட்சி சபைகளின் அமைப்புகளான பிரதேச சபை, நகர சபை, பட்டினசபை, மாநகர சபை என்பவற்றின் சேவைகள் அவற்றின் நடவடிக்கைகள் தொடர்பில் மக்கள் அறியாதவர்களாக இருப்பது வேதனைக்குரியது.

பிரதேச சபையும், பிரதேச செயலகத்தையும் ஒன்றென நினைக்கும் பரிதாப நிலையில்,

பிரதேச சபைக்குச் செல்ல வேண்டியவர்கள் பிரதேச செயலகத்திற்குச் செல்வதும்; பிரதேச செயலகத்திற்குச் செல்ல வேண்டியவர்கள் பிரதேச சபைக்குச் செல்வதுமான அலைச்சல்கள் ஏராளமாக நடப்பதுண்டு.

இதுதவிர உள்ளூராட்சி சபைகள் தங்கள் எல்லைக்குட்பட்ட அதிகாரங்களைப் பிரயோகிக்காமல் இருப்பதும் நோக்குதற்குரியது.

இதுபற்றி எல்லாம் விரிவாக கருத்துரைப்பது இவ்விடத்தில் பொருத்தமில்லை என்பதன் காரணமாக,

உள்ளூராட்சி சபைகள் முதலில் செய்ய வேண்டிய முக்கியமான பணியான குப்பை அகற்றல் தொடர்பில் ஆராய்வது பொருத்துடையதாகும்.

அதுபற்றி இப்பகுதியில் முன்பும் ஒருதடவை பிரஸ்தாபித்திருந்தும் முன்னேற்றம் கிடைக்கவில்லை.

பொதுவில் யாழ்.குடாநாட்டில் மிகப்பெரிய பிரச்சினையாக இருக்கக்சுவடிய குப்பை அகற்றல் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படாததன் காரணமாக வீதியில், வெளியிடங்களில் குப்பைகளை கொட்டுவதனால் சுற்றுச்சூழல் மாசடைகின்றது.

எனவே குப்பை அகற்றல் தொடர்பில் பிரதேச, நகர, பட்டின, மாநகர சபைகள் என்பன மக்களின் கருத்துக்களைக் கேட்டறிவதற்கான கூட்டத்தை முதலில் ஒழுங்கு செய்ய வேண்டும்.

அந்தக் கூட்டத்தில் இருந்து பொதுமக்கள் குப்பைகளைக் கொட்டுவதற்கான பொது இடங்களை தெரிவு செய்து, அதனை நடைமுறைப்படுத்த வேண்டும்.

குறிப்பிட்ட தினங்களில் குறிப்பிட்ட பிரதேசங்களுக்குச் சென்று வாகனத்தில் குப்பைகளைச் சேகரித்து அகற்றுதல் என்ற திட்டம் நடைமுறைப்படுத்தும் போது, குப்பை அகற்றும் வாகனம் வருகின்ற தகவலை மக்கள் அறியக்கூடியதான ஒலிகளை எழுப்பும் நடைமுறைகள் பின்பற்றப்படுத்தல் அவசியம்.

எல்லாவற்றுக்கும் மேலாக எல்லா சபை உறுப்பினர்களும் சேர்ந்து குப்பை அகற்றுதல் தொடர்பில் நேர்த்தியான திட்டத்தை அமுல்படுத்த வேண்டும்.

இதனைச் செய்யும்போதுதான் ஊர் அழகுபடும்.

# மின்வழங்கல் செயற்பாடென்பது மட்டுப்படுத்தப்பட்ட திட்டமல்ல

## எனது பணி தொடரும் என்கிறார் சந்திரகுமார் எம்.பி

மின் விநியோக செயற்பாடுகள் கட்டம் கட்டமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நகரங்கள், கிராமங்கள் என்ற வேறுபாடின்றி அனைத்து பகுதிகளுக்கும் அனைத்து மக்களின் பாவனைக்கும் விரைவாக மின்சாரம் வழங்கப்படும் என ஈ.பி.டி.பி பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி அக்கராயன் குளம், வட்டக்கச்சி ஆகிய பகுதிகளுக்கு நேற்று முன்தினம் வடக்கின் வசந்தம் திட்டத்தின் மூலம் மின் விநியோகத்தினை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

மின்விநியோக செயற்பாடென்பது ஒரு வரையறுக்கப்பட்ட திட்டமல்ல. வடக்குக் கிழக்கில் வாழ்கின்ற அனைவருக்கும் மின்சாரம் வழங்கப்படும் வரை மின் வழங்கல் பணி தொடரும். இதற்காக அரசாங்கத்தினால் பல கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

எனவே செயற்பாடுகள் கட்டம் கட்டமாக முன்னெடுக்கப்பட்டு நகரங்கள், கிராமங்கள் என்ற வேறுபாடின்றி அனைத்து பகுதிகளுக்கும் அனைத்து மக்களின் பாவனைக்கும் விரைவாக மின்சாரம் வழங்கப்படும். இந்நிலையில் குறிப்பிட்ட சில பகுதிகளுக்கு மட்டுமே மின்விநியோகம் நடைபெறுமென்ற தவறான தகவல்களை சிலர் வெளியிட்டு வருகின்றனர். அவற்றில் எவ்வித உண்மையும் இல்லை.

ஆனால் எவ்விதமான அடித்தளமும் அற்ற நிலையில் அனைத்து செயற்பாடுகளும் ஆரம்பத்திலிருந்தே முன்னெடுக்கப்பட்டு வருவதனால் செயற்பாடுகளை கட்டம் கட்டமாகவே முன்னெடுக்க வேண்டியுள்ளது.

அதற்காக எடுக்கும் காலமே மக்கள் பயனைப் பெறுவதில் எடுக்கும் தாமதமாக அமைகின்றது. எனவே அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் எல்லோருக்கும் மின்சாரம் என்ற திட்டத்திற்கு கொள்கைக்கும் அமைவான அனைத்து மக்களின் பாவனைக்கும் மின்சாரம் விரைவாக கிடைக்கப்பெறும் என்றார். (அ-2)

# நூறு வருட வரலாற்றில் முதன்முறையாக வெளிநாடுகளுக்கு தானிய ஏற்றுமதி

## விவசாய அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

வெளிநாட்டிற்கு தானியம் ஏற்றுமதி செய்யும் நடவடிக்கையின் முதற்கட்டமாக 10 ஆயிரம் மெற்றிக்தொன் சோளம் தாய்வான் மற்றும் கனடா நாடுகளுக்கு நேற்றைய தினம் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. ஏற்றுமதிக்குப் பொருத்தமான தரம் வாய்ந்த அரிசியை உற்பத்தி செய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதுடன் விரைவில் 20 ஆயிரம் மெற்றிக் தொன் சிவப்பு அரிசியைத் தென்னாபிரிக்காவுக்கு அனுப்பவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் விவசாய அமைச்சர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

விவசாய திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டு நூறுவருடங்கள் நிறைவடையும் நிலையில் இவ்வளவு காலமும் வெளிநாடுகளிலிருந்தே இலங்கைக்குத் தானியங்கள் இறக்குமதி செய்யப்பட்டன. அரசாங்கத்தின் காத்திரமான வேலைத்திட்டங்களின் பயனால் முதன்முறையாக தற்போது சோளம் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

எமது நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய எந்த உணவுப் பொருளையும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யக்கூடாது என்பதே ஜனாதிபதியின் கொள்கைத் திட்டமாகும். அதற்கிணங்க உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் பல்வேறு செயற்திட்டங்களையும் அரசாங்கம் முன்னெடுத்துள்ளது.

அதன் பயனாக எம்மால் அரிசியில் தன்னிறைவு 'காண முடிந்துள்ளது. சோளப் பயிர்ச் செய்கையைப் பொறுத்தவரை அமைச்சர் பசில் ராஜபக்சவின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு அதற்கான தனியான செயலணியொன்றை ஏற்படுத்தி நடைமுறைப்படுத்தியது.

தேசிய உற்பத்தியில் 25 வீதமாக சோளம் எமது தேவைக்குப் போதுமானது. அதன் போது நூற்றுக்கு நூற்றிப்பத்து என்ற ரீதியில் சோளத்தில் நாம் தன்னிறைவு கண்டுள்ளோம்.

ஒரு இலட்சத்து90ஆயிரம் மெற்றிக் தொன் எமது தேவையாக உள்ள நிலையில் 2 இலட்சத்து 35ஆயிரம் மெற்றிக் தொன் சோளம் உற்பத்தி செய்யப்படுகிறது. தேவையான மழை வீழ்ச்சி உரிய காலத்தில் கிடைக்குமானால் உற்பத்தித் தொகை மேலும் அதிகரிக்கும் எனவும் பத்தாயிரம் மெற்றிக் தொன் ஏற்றுமதியே எமது இலக்கு எனவும் அமைச்சர் தெரிவித்தார். (அ-2)

# ஐ.தே.க. மற்றும் ஜே.வி.பியின் அடிமனதில் அதிருப்தியுண்டு

## சரத் விடுதலை குறித்து பசில் தெரிவிப்பு

(கொழும்பு)

பொன்சேகா விடுதலை செய்யப்பட்டமை மிகவும் நியாயமானது என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகா விடுதலை செய்யப்பட்டதன் மூலம் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் பாரிய நெருக்கடிகள் ஏற்படும்.

சரத்பொன்சேகா விடுதலை தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஜே.வி.பி தலைவர்கள் அடி மனதில் அதிருப்தியடைந்துள்ளனர். எனினும் அவர்கள் அதனை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

எவ்வாறெனினும் சரத் பொன்சேகா விடுதலையானது வரவேற்கப்பட வேண்டியதாகும் என பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (அ-2)

# தடகள விளையாட்டுப்போட்டி எதிர்வரும் 2,3 ஆம் திகதிகளில்

(யாழ்ப்பாணம்)

தடகள விளையாட்டுப்போட்டிகள் எதிர்வரும் 2, 3 ஆம் திகதிகளில் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் காலை 8.30 மணி தொடக்கம் நடைபெறவுள்ளதாக யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி திருமதி ரூபசிங்கம் அறிவித்துள்ளார்.

இதில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், சிறப்பு விருந்தினராக வடமாகாண விளையாட்டுத் திணைக்களப்பணிப்பாளர் எஸ். அண்ணாத்துரை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-6)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## உழைக்கும் கைகள் வேண்டும்



கடவுள் பிரமாண்டமான வட்டம் போன்றவர். அந்த வட்டத்தின் சுற்றளவுப் பகுதியான பரிதி எங்கும் கிடையாது. ஆனால் அந்த வட்டத்தின் மையம் அனைத்து இடங்களிலும் உள்ளது.

எதையும் பரபரப்புடன் செயற்படுத்தக்கூடாது. மாறாக தூய்மை, பொறுமை, விடாமுயற்சி இம் மூன்றும் வெற்றிக்குத் தேவை.

நீ ஏற்கனவே தீர்க்கதரிசியாகத்தான் இருக்கிறாய். ஆனால் அதை அறியாமல் இருக்கிறாய். இதை நீ உணரவேண்டும்.

ஆன்மீக வாழ்க்கைக்கோ, மனதுக்கோ, உடலுக்கோ பலவீனத்தை உண்டு பண்ணும் எதையும் உன் கால்விரலால் கூட தீண்டாதே. மனிதனிடம் இயற்கையாகப் புதைந்திருக்கும் ஆற்றலை வெளிப்படுத்துவதே சமய வாழ்க்கை.

இரக்கம் உள்ள இதயம், சிந்தனை ஆற்றல் படைத்த மூளை, வேலை செய்யக்கூடிய கைகள் நமக்குத் தேவை.

எல்லாப் பேய்களும் நம் மனதில் தான் இருக்கின்றன. மனம் கட்டுப்பட்டு அடங்கியிருந்தால் எந்த இடத்தில் நாம் இருந்தாலும் எங்கிருந்தாலும் அது சொர்க்கமாக மாறிவிடும்.

# அதிசய உலகம்...



## உலகின் மிகப் பெரிய ஒரு கி.மீ. நீச்சல் தடாகம்




சிலி நாட்டில் சுமார் ஒரு கிலோமீற்றர் நீளமான நீச்சல் தடாகமொன்று அமைக்கப்பட்டுள்ளது. இதன் பரப்பளவு 20 ஏக்கர்களாகும். உலகின் மிகப் பெரிய நீச்சல் தடாகம் இதுவாகும். 115 அடி ஆழம் கொண்ட இந்த நீச்சல் தடாகத்தில் படகுகளை செலுத்தவும் முடியும். அல் கராபோ நகரிலுள்ள அல்போன்ஸோ டெல் மார் உல்லாச விடுதியில் பசுபிக் சமுத்திர கரையோரமாக இந்த நீச்சல் தடாகம் அமைக்கப்பட்டுள்ளது.

ஒலிம்பிக் போட்டிகளில் பயன்படுத்தப்படும் நீச்சல் தடாகங்களை விட இது 20 மடங்கு பெரியது. 250 மில்லியன் லீற்றர் நீரை இது கொண்டுள்ளது.

உலகின் மிக ஆழமான நீச்சல் தடாகம் எனவும் கின்னஸ் சாதனை நூலில் இது பதிவு செய்யப்படவுள்ளது.

2006 ஆம் ஆண்டில் சுமார் 200 கோடி அமெரிக்க டொலர் செலவில் இத்தடாகம் நிர்மாணிக்கப்பட்டது. அத்துடன் இதை பராமரிப்பதற்கு வருடாந்தம் 40 இலட்சம் டொலர் செலவிடப்படுகிறது.

## மாறுபட்ட தொழில்நுட்பத்தில் அழகாக காட்சியளிக்கும் சவர்



பொதுவாக குளியலறையில் காணப்படும் சவர்களில் குளிப்பதற்கு மிகவும் மகிழ்ச்சியாகவே இருக்கும். அவ்வாறு மகிழ்ச்சியை ஏற்படுத்தும் சவர்கள் பல்வேறு வடிவங்களில் காணப்படுகின்றன.

அதேபோன்று மாறுபட்ட தொழில் நுட்பங்களிலும் தற்போது அழகாக காட்சியளிக்கும் சவர்களில் ஒன்றை தற்போது படத்தில் காணலாம்.

## 83 வயதில் சிறுநீரகத்தை தானமாக வழங்கி சாதனை



பிரிட்டனைச் சேர்ந்த நிக்கோலஸ் கிரேஷ் என்பவர் தனது 83 வயதில் சிறுநீரகத்தை தானமாக வழங்கி புதிய சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

இவரது சிறுநீரகம் 40 வயது நபர் ஒருவரின் சிறுநீரகத்தைப் போன்றே வேலை செய்ததை கண்டுபிடித்த மருத்துவர்கள் நிக்கோலசுக்கு அறுவைச்சிக்கிச்சை செய்துள்ளனர்.

இதுகுறித்து நிக்கோலஸ் கூறுகையில், எனது மனைவி இறந்தது முதல் சிறுநீரகத்தை தானம் செய்வதற்கான யோசனை குறித்து ஆராய்ந்து வந்தேன் என்றார். மேலும் இந்த வயதான காலத்திலும் மற்றவர்களுக்கு உதவியாக இருப்பது தனக்கு மகிழ்ச்சியைத் தருவதாகவும் நிக்கோலஸ் கூறியுள்ளார்.

# ஜனாதிபதியின் கட்டார் விஜயம் நாட்டுக்கு கிடைத்த கௌரவம்

## அந்நாட்டு பிரதமர் ஹமாத் புகழாரம்

(கொழும்பு)

இலங்கை துரிதமாக அபிவிருத்தி அடைவதை காண்பதே கட்டார் இராச்சியத்தின் இலக்கு என்று அந்நாட்டு அமீர் ஷெய்க் ஹமாத் பின் கலீபா அல் தானி மற்றும் அந்நாட்டு பிரதமர் ஹமாத் பின் ஜாசிம் பின் ஜாபர் அல்தானி ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அண்மையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போதே இவர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளனர்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையின் துரித அபிவிருத்திக்காக ஒப்பந்தங்கள் மற்றும் நிபந்தனைகள் இன்றி தேவையான சகல ஒத்துழைப்புக்களையும் வழங்குவதற்கு கட்டார் தயாராக இருப்பதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கட்டார் விஜயமானது தமது நாட்டுக்கு கிடைத்த பாரிய கௌரவமாகும். அவரை கௌரவிக்கும் வகையில் தாம் இத்தினங்களில் மேற்கொள்ளவிருந்த மிக முக்கியமான வெளிநாட்டு பயணத்தை இரத்து செய்து விட்டு நாட்டில் இருக்கின்றோம்.

இலங்கையின் அபிவிருத்திக்காக நாம் கொடுத்துள்ள ஒத்துழைப்புக்கள் குறித்து தமக்கு திருப்தி அடைய முடியாதுள்ளது. அதனால் எதிர்காலத்தில் தேவையான எந்த ஒத்துழைப்பையும் இலங்கைக்கு வழங்குவேன்.

பயங்கரவாத பிரச்சினை காரணமாக இலங்கை பெரிதும் பின்னடைந்திருந்தது.

இவ்வாறான நிலையில் பயங்கரவாதத்தை தோற்கடித்து நாட்டை பிராந்தியத்திலேயே உயர்ந்த இடத்திற்கு இட்டுச் செல்ல நடவடிக்கை எடுப்பதற்குஅவரது சிறந்த தலைமைத்துவமே காரணம் என்றார்.

இரு நாடுகளுக்குமிடையில் ஏற்படுத்தப்பட்டுள்ள இந்த வலுவான நட்புறவு தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டும்.

(அ-2)

# இலங்கையில் இனப்படுகொலை திட்டமிட்ட வகையில் தொடர்கிறது

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சி குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கையில் திட்டமிட்ட வகையில் தொடரும் இனப்படுகொலைகளை தடுக்க இந்தியா என்ன நடவடிக்கையை எடுத்துள்ளது என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கேட்டுள்ளது.

இலங்கையில் இன்னமும் திட்டமிடப்பட்ட இனப்படுகொலைகள் இடம்பெற்று வருகின்றன என்று கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர் டி.ராஜா நேற்று முன்தினம் ராஜ சபாவில் குற்றம் சுமத்தினார்.

இந்துக் கோயில்கள் இலங்கையில் தாக்கப்படுகின்றன. வடக்கின் தாயகப்பூமியில் இருந்து தமிழர்களை அகற்றும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. வடக்கில் மாத்திரம் 60 வீதமான இலங்கைப் படையினர் நிலைகொண்டுள்ளனர். இது வடக்கு கிழக்கில் வாழும் தமிழர்களில் நான்கில் ஒரு வீதமாகும்.

இந்த நிலையில் இந்த விடயங்களில் இந்தியா என்ன நிலைப்பாட்டை கொண்டிருக்கின்றது என்று ராஜா கேள்வி எழுப்பினார்.

சர்வதேசத்தின் கோரிக்கைகளை நிராகரித்து வரும் இலங்கை அரசாங்கம் தமிழர்கள் மத்தியில் இருந்து இராணுவ முகாம்களை அகற்றுவதற்கும் மறுத்து வருகின்றது என்று அவர் குற்றம் சுமத்தினார்.

(அ-2)

# குற்றங்களை மூடிமறைக்க அடிபணிகிறது அரசாங்கம்

## திஸ்ஸ அத்தநாயக்க குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கை அரசானது அமெரிக்காவிடம் மண்டியிட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி எம்.பி. திஸ்ஸ அத்தநாயக்க குற்றம் சாட்டியுள்ளார்.

மெனிக்கென்ன குண்டசாலை பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் அவர் கலந்து கொண்டு உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் மூலமான தீர்வினை காண நாடாளுமன்ற தெரிவுக் குழுவில் தீர்வு எட்டப்படக்கூடிய கருத்துக்கள் தொடர்பாக சகல தரப்பினரும் இணக்கப்பாட்டை வெளிப்படுத்த வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

இதன் போது அனைத்து சர்வதேச தரப்பிலும் சரி உள்நாட்டில் உள்ள கட்சிகளும் சரி எல்.எல்.ஆர்.சியில் உள்ள பரிந்துரைகளை நிறைவேற்றுமாறு கூறிவருகின்ற நிலையில் அதனை நடைமுறைப்படுத்தாது திட்ட அறிக்கையொன்றினை தயாரித்து கொண்டு வெளிவிவகார அமைச்சர் அமெரிக்கா சென்றுள்ளார்.

இவற்றினை கொண்டு பார்க்கின்ற போது தங்கள் மீது உள்ள மனிதவுரிமை மீறல் குற்றங்களை மூடிமறைப்பதற்காகவே அரசு அமெரிக்காவை மண்டியிடுகின்றதுஎன அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(அ-2)

# இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது கொல்கத்தா



டில்லி டேர்டேவில்ஸ் அணியை 18 ஓட்டங்களால் வென்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது கொல்கத்தா அணி.

ஐந்தாவது ஐ.பி.எல். இருபது -20 கிரிக்கெட் தொடரில் கொல்கத்தா -மும்பை அணிகள் மோதிய முதல் பிளேஒப் சுற்று புனே சுப்ரதாய் மைதானத்தில் நேற்றிரவு நடைபெற்றது.

இதில் சேவாக் தலைமையிலான டில்லி டேர்டேவில்ஸ் அணியும்,காம்பீர் தலைமையிலான கொல்கத்தா அணியும் மோதின.

கடந்த ஆட்டத்தில் டில்லி அணி சார்பில் விளையாடிய ஆந்த்ரே ரஸ்ஸல், உன்முக்ட் சந்த் ஆகியோர் நீக்கப்பட்டு, வீரேந்திர சேவாக்,ரோஸ் ரெய்லர் ஆகியோர் நேற்றைய ஆட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்தனர்.

கொல்கத்தா அணியில் கடந்த போட்டியில் விளையாடிய அதே வீரர்களே நேற்றைய போட்டியிலும் விளையாடினர்.

நாணயச் சுழற்சியில் வென்ற கொல்கத்தா அணி முதலில் துடுப்பாட்டம் செய்வதாக அறிவித்தது.

அதன்படி இந்த அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக பிரெண்டன் மக்குலமும்,கௌதம் காம்பீரும் களமிறங்கினர்.

காம்பீர் 16 பந்துகளுக்கு முகங்கொடுத்து 32 ஓட்டங்களை எடுத்திருந்தபோது ரன் அவுட்டானார். மக்குலம் 31 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது ஆட்டமிழந்தார்.

இவர்களையடுத்து வந்த சகிப் அல் ஹசன் ஒரு ஓட்டத்திலேயே ஆட்டமிழந்து வெளியேறினார்.

இவர்களையடுத்து ஜக் கலிஸ் உடன் யூசுப் பதான் ஜோடி சேர்ந்தார்.

கலிஸ் 30 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார்.

பின் யூசுப் பதானுடன் இணைந்த சுக்லா அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

இந்நிலையில் 20 ஓவர்கள் முடிவில் கொல்கத்தா அணி 162 ஓட்டங்களை எடுத்தது.

இதனையடுத்து 163 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் டில்லி டேர்டேவில்ஸ் அணி பதிலெடுத்தாடக் களமிறங்கியது வோர்னர்-சேவாக் ஜோடி.

ஆரம்பத்தில் அடித்தாட ஆரம்பித்த இந்த ஜோடி கொல்கத்தாவின் நேர்த்தியான பந்துவீச்சால் சாய டில்லி அணி நெருக்கடிக்குள் தள்ளப்பட்டது.

அடுத்து ஓஜா-ஜெயவர்த்தன ஜோடி அணியை கரைசேர்க்கப் போராடியது.

ஜெயவர்த்தன 33 பந்துகளில் 40 ஓட்டங்களையும், நமன் ஓஜா 28 பந்துகளில் 29 ஓட்டங்களையும் குவித்தனர்.

கொல்கத்தா அணியின் சுனில் நரேன் 4 ஓவர்களில் 24 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 2 விக்கெட்டுகளையும் சகிப் அல் ஹசன் 4 ஓவர்களில் 36 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து ஒரு விக்கெட்டையும், இக்பால் அப்துல்லா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தி வெற்றிக்கு வித்திட்டனர்.

இந்த வெற்றியின் மூலம் முதல் முதலாக இறுதிப் போட்டிக்கு முன்னேறியது கொல்கத்தா அணி.

இப்போட்டியின் சிறப்பாட்டக்காரராக யூசுப் பதான் தேர்வானார்.

## சென்னை-மும்பை இன்று மோதல்

பெங்களூரில் இன்று இரவு 8 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் 3-வது இடத்தைப் பிடித்த மும்பை இந்தியன்ஸ் அணியும் 4-வது இடத்தைப் பிடித்த சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் மோதுகின்றன.

இதில் தோற்கும் அணி போட்டியில் இருந்து வெளியேறிவிடும்.

நேற்றைய போட்டியில் தோற்ற டில்லி அணிக்கு இன்னும் ஒரு வாய்ப்பு வழங்கப்படுகிறது.

பெங்களூரில் இன்று நடக்கும் சென்னை-மும்பை அணிகள் மோதும் எலிமினேட்டர் போட்டியில் வெற்றி பெறும் அணியுடன் முதலாவது குவாலிபயரில் தோற்ற டெல்லி அணி மோதி அதில் வெல்லும் அணி இறுதிப் போட்டிக்கு செல்லும்.

# மே.தீவுகளை 5 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தியது இங்கிலாந்து

(லோட்ஸ்)

இங்கிலாந்துக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கும், இங்கிலாந்து அணிக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றுள்ளது.

மேற்கிந்தியத் தீவுகள் அணி விதித்த இலக்கை இங்கிலாந்து 5 விக்கெட்டுக்களை இழந்து அடைந்தது.

191 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து நான்காம் நாள் ஆட்ட நேர முடிவில் 10 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களை இழந்திருந் தது.

இந் நிலையில் ஐந்தாவதும் இறுதியுமான நாள் ஆட்டத்தை ஆரம்பித்த இங்கிலாந்து அணி மேலதிகமாக 19 ஓட்டங்களை பெற்ற வேளையில் ஜொனதன் ரொட்டின் விக்கெட்டை இழந்தது.

தொடர்ந்து களமிறங்கிய கெவின் பீற்றர்சன் அதிரடியாக ஆட முற்பட்ட வேளையில் ஆட்டமிழந்தார்.

இதன்போது இங்கிலாந்து அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 57 ஓட்டங்களை பெற்றுத் தடுமாறியது.

மேலதிகமாக 134 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில் இணை சேர்ந்த அலஸ்ரயர் குக், இயன் பெல் இருவரும் மிகவும் சிறப்பாக ஆடி இங்கிலாந்து அணியை மீட்டனர். இருவரும் ஐந்தாவது விக்கெட்டுக்காக 132 ஓட்டங்களைப் பகிர்ந்தனர்.

வெற்றி பெற மேலதிகமாக 2 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில் சிறப்பாக ஆடிக் கொண்டிருந்த அலஸ்ரயர் குக் ஆட்டமிழந்த போதிலும், வெற்றி ஓட்டத்தை இயன் பெல் அடித்து இங்கிலாந்து அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றார்.


துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணி சார்பாக ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் அலஸ்ரயர் குக் 79 ஓட்டங்களையும், இயன் பெல் ஆட்டமிழக்காமல் 63 ஓட்டங்களையும் பெற்று அணியின் வெற்றியை உறுதி செய்தனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணியின் முதல் 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றி கடுமையான அழுத்தத்தை வழங்கிய கேமர் ரோச் 3 விக்கெட்டுக்களையும், கெவின் பீற்றர்சனின் விக்கெட்டை கைப்பற்றிய ஷானன் கப்ரியல் ஒரு விக்கெட்டையும், டரன் சமி ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இங்கிலாந்து லோட்ஸ் மைதானத்தில் இடம்பெற்ற இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி கேட்டுக் கொண்டதற்கிணங்க முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 243 ஓட்டங்களையும், இங்கிலாந்து அணி பதிலளித்தாடி 398 ஓட்டங்களையும் பெற்றன.

மேற்கிந்தியத் தீவுகள் அணி போட்டியின் மூன்றாவது இன்னிங்ஸில் 345 ஓட்டங்களைப் பெற்று 191 ஓட்டங்களை இங்கிலாந்து அணிக்கு வெற்றி இலக்காக வழங்கியிருந்தது.

போட்டியின் நாயகனாக இங்கிலாந்து அணி சார்பாக போட்டியில் 11 விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய ஸ்ரூவர்ட் பிரோட் தெரிவானார்.



## பொன்சேகாவுக்கு ஜெனரல்...

சரத் பொன்சேகா விடுதலை செய்யப்பட்டமை தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி மகிழ்ச்சி அடைகிறது. அவரை கைது செய்து விளக்கமறியலில் வைத்து, தண்டனை விதிக்கப்பட்டமை ஜனநாயகத்திற்கு எதிரானது என ஐ. தே. கட்சி தொடர்ந்தும் அரசாங்கத்திற்கு எடுத்தரைத்து வந்ததுடன், அதற்கு எதிராக தேசிய மற்றும் சர்வதேசரீதியில் போராட்டங்களை முன்னெடுத்தது.

பொன்சேகாவிற்கு எதிரான இந்த நடவடிக்கைகளை எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் விமர்சித்ததுடன், சர்வதேச ரீதியிலும் கருத்துக்களை முன்வைத்து, அர்ப்பணிப்புடன் செயற்பட்டார் எனவும் அத்தநாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.

## சர்வதேச விசாரணைக்கு...

சுமார் 2 ஆண்டுகள் சிறைவாசத்திற்கு பின் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்ட இலங்கை இராணுவத்தின் முன்னாள் தளபதி சரத் பொன்சேகா, இலங்கை மீது பழி சுமத்தப்படும் போர்க் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை எதுவும் வந்தால் இலங்கை அதற்கு நிச்சயம் ஒத்துழைக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

இலங்கையில் யுத்தம் நடத்தப்பட்ட விதம் தொடர்பில் இலங்கையின் தலைவர்கள் சிலர் தமது முகத்தை மூடிக் கொள்கின்றார்கள் என்று பிபிசிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்த சரத் பொன்சேகா, அவர்கள் நடந்து கொள்வது எதையோ மறைக்க முற்படுகிறார்கள் என்ற எண்ணம் மற்றவருக்கு தோன்றக் காரணமாக இருக்கிறது எனக் கூறினார்.

சிறையில் இருந்து வெளிவந்த பின்னர் முதல் தடவையாக பொன்சேகா பிரத்தியேக பேட்டியளித்திருப்பது பிபிசிக்குத்தான்.

அதில் அவர் கூறியுள்ளதாவது,

### ஓடி ஒளிய விரும்பவில்லை

போர்க்குற்றம் என்று வரும்போது ஒரு சிலர் ஓடி ஒளிவதையும் தங்களது முகத்தை மறைத்துக் கொள்ள முயலுவதையும் நான் பார்க்கிறேன். நான் அப்படி ஒளிந்து கொள்ளவோ, மௌனம் காக்கவோ விரும்ப வில்லை. அப்படிச் செய்யப்போனால், எதையோ நாங்கள் மறைக்க முயலுகிறோம் என்ற எண்ணம் தான் மற்றவர்களுக்கு ஏற்படும்.

யுத்தம் நடத்தப்பட்ட விதம் தொடர்பான பல்வேறு விஷயங்களும் அரசாங்கத்துடன் வெளிப்படையாக விவாதிக்கப்படுவதற்கான ஒரு அவசியம் இருக்கிறது என்று அவர் வலியுறுத்தினார்.

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தின்போது நடந்த விடயங்களுக்கு தானோ நாட்டின் அரசியல் தலைவர்களோ காரணமாக இருந்திருக்கவில்லை என்று பொன்சேகா கூறினார்.

யுத்தத்தின் இறுதி கட்டம் பற்றி எவர் முன்னாலும் தோன்றி பதில் சொல்ல தனக்கு எவ்வித அச்சமோ தயக்கமோ இல்லை என்று அவர் வலியுறுத்தினார்.

ஆனால் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட அந்த இராணுவ நடவடிக்கையின் போது ஆயிரக்கணக்கான சிவிலியன்கள் கொல்லப்பட்டனர் என்ற குற்றச்சாட்டை அவர் முழுமையாக மறுத்தார்.

ஜனாதிபதியாக ஆவதற்கு வேண்டியோ, நாடாளுமன்ற உறுப்பினராவதற்கு வேண்டியோ தான் அரசியலில் ஈடுபடவில்லை. இலங்கையில் காணப்படும் ஊழல்மிகு அரசியல் கலாசாரத்தை மாற்றவதற்காகவே தான் அரசியலில் ஈடுபட விரும்புவதாக பொன்சேகா தெரிவித்தார்.

இலங்கை இராணுவம் 2009ஆம் ஆண்டில் விடுதலைப் புலிகளை தோற்கடித்த இராணுவ நடவடிக்கையின்போது இராணுவத் தளபதியாக இருந்தவர் சரத் பொன்சேகா.

அந்த வெற்றியின் பெருமை யாரைச் சேரும் என்ற விடயத்தில், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவர் சகோதரரான பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோருடன் பொன்சேகா முரண்பட நேர்ந்திருந்ததை அடுத்து பல்வேறு குற்றச்சாட்டு களுக்காக சிறையில் அவர் அடைக்கப்பட்டிருந்தார். (எ-11)

## தமிழ் அரசியல்...

விடுதலைப் புலிகளின் தலைவர்களுக்கு அரசு மன்னிப்பளித்தது. ஆனால் மேற்படி 234 கைதிகளில் அங்கவீனமானவர்கள், யுத்தத்தின் கடைசிக் கட்டத்தில் படையினரிடம் சரணடைந்தவர்கள் ஆகியோரும் அடங்குவதாக சம்பந்தன் கூறினார்.

சுமார் 10 ஆயிரம் பேரை சமூகத்துடன் மீள் இணைத்த அரசின் புனர்வாழ்வு திட்டத்தை பாராட்டிய அவர், இன்னும் நூற்றுக்கணக்கானோர் சிறையில் உள்ளதாக தெரிவித்தார்.

சிலர் எந்த குற்றச்சாட்டும் இல்லாமல் விடுதலை செய்யப்பட்ட பின்னர் மீண்டும் கைது செய்யப்பட்டதாகவும் சம்பந்தன் கூறினார்.

அனைத்து தமிழ் அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யுமாறு அரசாங்கத்தை நாம் கோருகிறோம் என அவர் தெரிவித்தார்.

தனது கட்சியினர் சிறைச்சாலைக்கு சென்று உண்ணாவிரதத்தை கைவிடுமாறு கைதிகளிடம் கோரியதாகவும் ஆனால் அக்கைதிகள் அதற்கு மறுப்புத் தெரிவித்து சாகும்வரை உண்ணாவிரத மேற்கொள்ள உறுதி பூண்டுள்ளதாகவும் சம்பந்தன் கூறினார்.

அதேவேளை யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் செயலாளர் தர்சானந் தாக்கப்பட்டதையும் சம்பந்தர் கண்டித்தார். இத்தாக்குதலின் பின்னணியில் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் உள்ளதாகவும் அதனால் எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் அவர் குற்றம் சுமத்தினார். அரசாங்கத்தின் சார்பாக தான் இன்று புதன் கிழமை பதிலளிக்கவுள்ளதாக சபை முதல்வரான அமைச்சர் நிமல் சிறிபால டிசில்வா கூறினார். (எ-1)

# கைதிகளின் விடுதலையை...

பொருட்டு இப் போராட்டம் நடத்தப்படவுள்ளதாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கொழும்பு மகசீன் சிறைச்சாலை, கொழும்பு தடுப்புக்காவல் சிறைச்சாலை, அனுராதபுரம், களுத்துறை, வவுனியா, கண்டி உள்ளிட்ட நாட்டின் அனைத்து சிறைச்சாலைகளிலும் உள்ள 800க்கும் மேற்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் தம்மை விடுதலை செய்யக்கோரி காலவரையறையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டுள்ளனர்.

இவர்களில் பல நூறு பேர் எந்த வித விசாரணையும் இல்லாமல் ஐந்து, பத்து, பதினைந்து வருடங்களுக்கு மேலாக இன்னமும் சிறைச்சாலைகளில் வாடுகின்றனர். இன்னும் ஆயிரக்கணக்கான இளைஞர்களும் யுவதிகளும் காணாமல் போயும் உள்ளனர். இது தொடர்பாக நாம் பல்வேறு முறைகள் நாடாளுமன்றத்தின் ஊடாக அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வந்தோம். அரசியல் கைதிகள் பலமுறை உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி வந்துள்ளனர்.

இந்த விடயத்தில் அரசு சார்பாக அமைச்சர்கள் உறுதிமொழி வழங்கியும் கூட இதுவரை எதுவுமே நடக்கவில்லை.

தமிழ் அரசியல் கைதிகளின் நியாயமான கோரிக்கைகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழுமையாக ஆதரித்து நிற்கின்றது. அவர்களுக்க எமது ஆதரவினை தெரிவிக்கும் பொருட்டும், அவர்களது கோரிக்கைகளுக்கு சர்வதேச ஆதரவை திரட்டும் பொருட்டும் அரசாங்கம் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கான உடனடித் தீர்வை எட்டும் பொருட்டும் தமிழ்த் தேசியக் கூட்மைப்பு ஒரு கவனயீர்ப்பு உண்ணாவிரதப் போராட்டத்தை நாளை 24 ஆம் திகதியன்று காலை 7 மணியளவில் வவுனியா நகரசபை விளையாட்டு மைதா னத்தில் நிகழ்த்துகின்றது.

இந்த போராட்டத்தில் வடக்கு கிழக்கை சேர்ந்த அனைத்து உள்ளூராட்சி சபை தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களையும், சிறைச்சாலையில் உள்ளவர்களின் பெற்றோர் மற்றும் உறவினர்களையும், காணாமல் போனவர்களின் பெற்றோர் மற்றும் உறவினர்களையும் தடுப்பில் உள்ளவர்களின் பெற்றோர் மற் றும் உறவினர்களையும் சகல அரசியல் கட்சிகளையும் அனைத்து பொது அமைப்புக்களையும் பொது மக்களையும் எம்முடன் இணைந்து உண்ணாவிரதப் போராட்டத்தை வெற்றிகரமாக நடத்திக் கொடுக்கும்படி வேண்டுகின்றோம் என இவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மற்றொரு செய்தி உள்ளே) (எ-11)

# காணாமல்...

தெரிவிக்கப்பட்டது. பிரஸ்தாப சிறுவன் காணாமல் போனமை தொடர்பில் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

அத்தோடு மல்லாகம் நீதவான் நீதிமன்றில் வழக்கு விசாரணையும் இடம்பெற்று வருகின்றது.

மேலும் குறித்த சிறுவனை கடத்திச் சென்ற நபர் முஸ்லிம் இனத்தை சார்ந்தவர் எனவும் இவரது மதரீதியான கொள்கைளுக்கு சிறுவனை உட்படுத்தியதாகவும் யாழ். போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

சிறுவனிடம் பெறப்பட்ட வாக்குமூலத்தின் படி குறித்த சிறுவனை கடத்திச் சென்ற நபர் தனது வீட்டுவேலைகளை செய்வதற்காக பயன்படுத்தி யுள்ளதாக தெரியவந்துள்ளது. (எ-4,11)

# ஜனநாயக...

அங்கத்தவர்களை தாக்கினர். தாக்கப்பட்டவர்களுக்கு அவசர மருத்துவ சிகிச்சை தேவைப்பட்டதால் அவர்கள் சிறி ஜெயவர்த்தனபுர வைத்தியசாலைக்கு சென்றனர். இது தொடர்பாக மிரிஹான பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சரத் பொன்சேகாவின் விடுதலையானது நாட்டிலுள்ள அடக்குமுறை குறித்து மக்களுக்கு தவறான சமிக்ஞையை வழங்குகின்றது சரத் பொன்சேகாவின் விடுதலை குறித்து நாம் மகிழ்ச்சியடைகிறோம். ஆனால் நிபந்தனையுடனான விடுதலை போதுமானதல்ல.

தொடர்ந்தும் தொந்தரவுகள் மூலம் அடக்குமுறைக்குள்ளாகும் நிலையில் ஜனநாயகம் தொடர்பான சமிக்ஞையை மக்களுக்கு அனுப்பும் சரியான வழி இதுவல்ல என அவர் மேலும் கூறியுள்ளார்.

இதேவேளை முன்னிலை சோஷலிசக் கட்சியின் அங்கத்தவர்கள் நீர்கொழும்பில் சுவரொட்டிகளை ஒட்டிக் கொண்டிருந்த போது, அச்சுவரொட்டிகளை அகற்றுமாறு மோட்டார் சைக்கிளில் சென்ற படைத்தரப்பினர் கோரியதாக அக் கட்சி தெரிவித்துள்ளது. (எ-6,11)


## வேலைவாய்ப்பு

USA நிறுவனத்தின் வடகிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் புதி தாக ஆரம்பிக்கப்படவுள்ள 30 கிளைகளுக்கு புதியவர்களுக்கு பயிற்சி அளித்து சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

- தகைமை O/L, A/L
- சம்பளம் :- பயிற்சிக் காலம் :- 8000/- - 15000/- வரை
  பயிற்சியின் பின் :- 35,000/-

ஆங்கில அனுபவம் தேவையில்லை
தொடர்புகளுக்கு :- 077-3001962, 077-2310564 (8496)

## மணல் விற்பனைக்குண்டு

நாற்பது வருடங்களாக கட்டட வேலைகளுக்கும், பூச்சு வேலைகளுக்கும் சிறந்ததெனும் நாமத்தைப் பெற்ற உப்புத்தன்மையற்ற மணல் 26 வருடங்களின் பின் இப்போது யாழ்ப்பாணத்தில். (8497)

4 ரெக்டர் - 23000/-
அரிந்த கல்லும் விற்பனைக்குண்டு
(கல்லு 1 - 38/-)

தொடர்புகளுக்கு
கண்ணா
0776766499

## கடைக் கட்டிடங்கள் விற்பனைக்கு

பரந்தன், யாழ்ப்பாணம்- கண்டி வீதி, பரந்தன் சந்தியிலிருந்து முல்லைத் தீவு வீதியில் 150 யார் தூரத்திற்குள் ஒவ்வொன்றும் பதினைந்து அடி அகலமும் நூற்றி ஐந்து அடி நீளமும் கொண்ட நான்கு கடைகள் தனித் தனியாகவோ மொத்தமாகவோ விற்பனைக்கு உண்டு. (C-041)

மேலதிக தொடர்புகளுக்கு:
K. முருகன் : 0775272093
P. சிங்கம் : 0776027324, 0212280020




இணுவில் திருவருள்மிகு
ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் மஹோற்சவம் 2012
தென்னிந்தியப் புகழ்
யுவகலா பாரதி, தமிழ் இசை சுடர்,
பால இசை அரசி, ஏர்டெல் ஸ்டார் பாடகி
செல்வி B. சுசித்ரா
அவர்களின் தெய்வீக இசைக் கச்சேரி மற்றும் சொற்பொழிவு
23.05.2012 முதல் 26.05.2012 வரை நடைபெறும்

| | | |
|---|---|---|
| 23.05.2012 | புதன் | இரவு 9.00 மணி |
| 24.05.2012 | வியாழன் | இரவு 8.00 மணி |
| 25.05.2012 | வெள்ளி | இரவு 6.00 மணி |
| 26.05.2012 | சனி | இரவு 8.00 மணி |

அனைவரும் வருக !
பிள்ளையார் அருள் பெறுக !



## BEACON

பட்டப்படிப்புக்கள் பிரிவு (யாழ்.நகர்)
GAQ (யாழ்., பேராதனை)
B.A (பேராதனை) B.A (Part I, Final யாழ்)

**தமிழ்**

S.சிவலிங்கராஜா (இளைப்பாறிய தமிழ்த் துறை பேராசிரியர்)
T.ஜீவானந்தன் (B.A Hons)

அனைத்துப் பாடங்களுக்குமான
துரித மீட்டல் விரிவுரைகள்
ஆரம்பம் 26.05.2012 சனி காலை 8.00 மணி
* பட்டப்படிப்புகளுக்கான ஏனைய விரிவுரைகள் நடைபெறுகின்றன.
* புதிய பிரிவுகளுக்கான பதிவுகள் எம்மால் மேற்கொள்ளப்படும். (8493)

## CAC கல்வி நிலையம்

கந்தர்மடச் சந்திக்கருகில்....
சிங்கள, ஆங்கில வகுப்புக்கள் ஆரம்பம்
சிங்களம் - கொழும்புப்புகழ்
கருணியநாதன்
Spoken and Grammer -
பிரபல ஆசிரியர்
அனைத்து வயதுப் பிரிவு மாணவர்களுக்குமான வகுப்புக்கள் ஆரம்பம்
ஆரம்பம் - 23.05.2012 பிற்பகல் 4.00
தொடர்புகளுக்கு
இயக்குனர்
0212226402 (8487)

## கடை கொமிசனுக்கு/வாடகைக்கு கொடுக்கப்படும்

யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதியில் நன்கு இயங்கும் தேநீர்ச் சாலை வாடகைக்கு / கொமிசனுக்கு கொடுக்கப்படும்.

தொடர்பு :- 0774524780, 0775861437 (8492)

## உலக நாடுகளுக்கான ஆகாய, கடல் மார்க்கமான துரித கடிதங்கள் பொதிகள் சேவை

சனி, ஞாயிறு விடுமுறை நாட்களிலும் எமது சேவையினைப் பெற்றுக்கொள்ளலாம்.
விசேட சலுகைகள்!

மிக விரைவாக உங்கள் உறவுகளின் இடங்களில் ஒப்படைக்கப்படும். (காப்புறுதி உண்டு).
கடல்உணவுகள், மருந்துப்பொருட்கள் என்பன அனுப்பப்படும்.
வெளிநாடுகளில் மேலதிக கட்டணம் அறவிடப்படமாட்டாது.

DHL WORLDWIDE EXPRESS
கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது.

மிக குறைந்த கட்டணத்தில் உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருட்கள், புடவைகள், CD Vedio க்கள் என்பன மிக விரைவாக அனுப்பிட DHL WORLDWIDE EXPRESS



திருமுருகன் கொம் நெற்
இல. 259, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
இல. 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
இல. 18, பிரதான வீதி, நெல்லியடி.
இல. 05, பிரதான வீதி, கிளிநொச்சி.
T.P : 021 222 7835


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.05.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.